# பாணர்

புலவர் இரா. இளங்குமரன்

மணிவாசகர் பதிப்பகம்
1987
வெள்ளி விழா

# பாணர்

புலவர் இரா. இளங்குமரன்

மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம்

முதற்பதிப்பு: ஜூன், 1987

உரிமை ஆசிரியர்க்கு

பக்கங்கள் 152 + 12.

விலை ரூ. 12-50

கிடைக்குமிடம்

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம்-608001
14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600001
55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600001
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001
3/4 ராஜ வீதி கோயமுத்தூர்-641001
20, நந்திக்கோயில் தெரு, திருச்சி-620002

சென்னை போன்: 512996, சிதம்பரம் போன்: 2799

அச்சிட்டோர்: கற்பகம் அச்சகம், சென்னை - 600 002

# பாடித் திரியும் பறவைகள்

ச. மெய்யப்பன், எம். ஏ.,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் சங்க இலக்கியங்களுக்கு சிறப்பான செம்பதிப்புகளைப் பதிப்பித்தார்கள். அதன் பயனாக சங்க இலக்கியக் கல்வி சிறந்தோங்கியது. சைவ சித்தாந்த சமாஜம் பாட்டையும் தொகையையும் வகுத்து ஆசிரியர் முறையில் அரிய செம்பதிப்பு வெளியிட்டது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் உரை வேந்தர் ஔவை துரைசாமி பிள்ளை உரை விளக்கங்களுடன் சங்க நூல்களுக்கு பல்வகைப் பதிப்புக்களை பல முறை பதிப்பித்துள்ளது. சங்க இலக்கியப் பயிற்சி சிறந்தது. புலமை வளர்ந்தது. தமிழ்ப் பாடத்திட்டத்தில் சங்க இலக்கியத்திற்கு முதன்மை தரப்பெற்றது. பாட்டும் தொகையும் பயில்வார் தொகையும் பெருகிற்று. இலக்கியம் பரவவே இலக்கிய ஆய்வும் வளர்ந்தது.

சங்க இலக்கிய ஆய்வில் டாக்டர் மு. வரதராசனாரின் 'சங்க இலக்கியத்தில் இயற்கை', மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார் அவர்களின் 'தமிழ்க் காதல்', டாக்டர் துரைஅரங்கனாரின் 'சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்' சுந்தர சண்முகனாரின் 'தமிழ்நூல் தொகுப்புக்கலை' குறிப்பிடத்தக்க சிறப்பினை உடையவை.

சங்க இலக்கியத்தின் பாடுபொருள் அகம், புறம் பற்றிய ஆய்வுகள், திணை, துறை பற்றிய ஆய்வுகள், கதை மாந்தர் தலைவன் தலைவி தோழி என்றாங்கு மிக விரைவாக ஆராயப் பெற்றுள்ளது.

பாணர் பற்றிய ஆய்வு நூலாக பேராசிரியர் இளங்குமரன் இந்நூலை மிகச் சிறந்த முறையில் எழுதி யுள்ளார்கள். தாம் பெற்ற பெருவளத்தைப் பெறாத வர்க்கு உணர்த்துகின்ற நல் உள்ளம் படைத்தவர்கள் பாணர்கள். தான் பெற்ற இன்பம் உலகம் பெற உவந்து உதவியவர்கள் பாணர்கள். கொடைஞர்களை அடை யாளங் காட்டுகிற ஆற்றல் வாய்ந்தவர்கள். வழிகாட்டும் வல்லமை படைத்தவர்கள். பழுமரம் நாடும் பறவைகள். பரிசில் வாழ்க்கையில் மகிழும் கலைஞர்கள். பாணர்கள் அருங்கலை விநோதர்கள் — விந்தை வாழ்வினர். சுதந்திரப் பறவைகள் — கட்டற்ற வாழ்வினர். கவலையில்லாப் பிறவிகள்.

வருமுன்னர் மட்டுமல்லாமல் வந்த பின்னும் காத்து அறியாத, சேர்த்து வைத்தறியாத இனம் பாணர் இனம். நுண்கலைகளை வளர்த்தவர்கள். இசைக் கலைக்கு இருப் பிடம் பாணர் வாழ்வு. யாழ் பற்றிய அனைத்துச் செய்திகளைப் பாணர் ஆற்றுப்படையாலேயே அறிய முடிகிறது. பாணர் கலைத்தவம் செய்தனர். கலைகளை வளர்த்தனர். பாணர் வாழ்க்கைக் கலையே, பரிசில் வாழ்வே கலைநலம் சான்றது. கவலை அற்றது. களிப்பு மிக்கது. உண்மைக் கலைஞர் மனித குலத்தின் மேல்நிலை மக்களாவர். பொன்னும் பொருளும் மட்டும் வாழ் வாகாது. புவி போற்றும் கலைகள் அனைத்திற்கும் ஊற்றுக்கண்ணாய் அமைந்தது பாணர் வாழ்வு. அவர்கள் எங்கும் செல்வார்கள்.

ஆற்றுப்படை என்னும் தனி இலக்கிய வகை தமிழிலக்கியத்திற்குப் பெருமை தருவது. பாணர் இன்றி ஆற்றுப்படையா? ஆற்றுப்படைகள் தமிழ்நாட்டில் நில நூல்கள் — வரை படங்கள் — எழிலோவியங்கள் — தமிழ் நிலத்தின் செழுமை உரைக்கும் காவியங்கள்.

பாணர் பற்றிய ஆற்றுப்படைகள் அவர்தம் வாழ்வு நலங்களைப் பண்புகளைக் காவியமாக்கியுள்ளன. பாணர் வாழ்வுநெறி பாட்டிலும் தொகையிலும் பரந்து கிடக்கிறது. அவர்தம் வாழ்வு நுட்பங்களை இந்நூல் சிறப்பாக விரித் துரைக்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் பழங்குடிகளில் ஒன்றாகிய பாணர் பற்றிய மிகச் சிறந்த ஆய்வு நூலாக இது அமைகிறது. பாணரை மையமாக வைத்து தமிழிசையும் இசைக் கருவிகளின் வரலாறும் கலைகள் பற்றிய வரலாறும் தெளிவாக ஆராயப் பெற்றுள்ளது. பாணர் பற்றிய அனைத்துச் செய்திகளும் அறிவியல் அணுகு முறையில் வரலாற்று நெறியில் விளக்கப் பெற்றுள்ளது. பழங்குடியின் பண்புநலம் அறிய இந்நூல் ஏற்றதொரு கைவிளக்கு. துறைதோறும் சிறந்து விளங்கும் நிகழ்கால ஆய்வுக்கு இந்நூல் நல்லதொரு எடுத்துக்காட்டு.

பேராசிரியர் இளங்குமரன் தமிழ் மரபு காக்கும் மறவர். புலமை வீறு கொண்ட புலவர் தலைவர். தனித் தமிழ் பரப்பும் தொண்டர் — இளைஞர்க்கு செந்நெறி காட்டும் வழிகாட்டி. சங்கப் புலவரனைய சான்றோர் — மனம் தூயர், இனம் தூயர், செயல் தூயர். நூற்றுக்கு மேற் பட்ட நூல்களின் ஆசிரியர் — ஆயிரத்துக்கு மேற்பட்ட சொற்களுக்கு வேர்கண்ட அறிஞர் — சொல்லாய்வுக் கலைஞர்.

புகழ் மிக்க மணிவாசகர் பதிப்பகத்திற்கு புகழ் சேர்க்கும் நல்லாசிரியர்; புதிய தமிழ் நூல்கள் படைத்து புகழ் குவிக்கும் ஆசிரியர் அவர்களுக்கு எங்கள் நன்றி!

# நுழைவாயில்

பாணர் பழந்தமிழக் குடியினர். "இந்நான்கல்லது குடியும் இல்லை" எனப் புறப்பாட்டால் சுட்டப்படும் குடிகளுள் தலைநின்ற குடியினர்.

'பாண்' சாதிப் பெயரன்று; குடிப்பெயர்.

அறிவியலார் இனம் என்று சொல்லும் பொருளில், முன்பு சாதிச் சொல் வழங்கப்பட்டது. "நீர்வாழ் சாதி" (தொல். பொருள். 584, 608) "பறவைச் சாதி" (பெரும்பாண். 229) என்பன அறிக.

ஒரு தாய் தந்தையர் வழியாக வந்தவர் குடிவழியினர்; அவரொடு கொண்டும் கொடுத்தும் தொடர்பு கொண்டவர் கொடி வழியினர். ஒரு குடிவழியினர் வாழ்ந்த இடம் குடியிருப்பு; அவர்கள் சேர்ந்து வாழ்ந்த சிற்றூர் சேரி.

சேரி பெரும்பாலும் பேரூர்களைச் சார்ந்து இருந்தது. சார்ந்து இருத்தல் வேறு; சேர்ந்து இருத்தல் வேறு; சேர்ந்து இருந்ததெனின் ஓரூர் ஆகிவிடும். அதனால், பேரூரைச் சேர்ந்து இருந்தமையால் சேரி எனப்பட்டது என்பது பொருளற்றது. ஒரு குடிவழியினர் சேர்ந்து வாழ்ந்த இடமே சேரியாம்.

ஊர்க்குப் புறத்தே இருந்த சேரி புறஞ்சேரி, புறச்சேரி என வழங்கப்பட்டன (சிலப். பதி. 74; பட். 76). உறையூரைச் சார்ந்து ஏணிச்சேரி இருந்தது; அவ்வூரினர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்; பார்ப்பனர், வண்ணக்கர், கொல்லர் முதலியோர் வாழ்ந்த இடம்

பார்ப்பனச்சேரி, வண்ணக்கஞ்சேரி கொற்சேரி எனப் பட்டன. அவ்வாறே பறைச்சேரி, பட்சேரி, பாண்சேரி எனவும் வழங்கப்பட்டன. ''பாண்சேரிப் பல்கிளக்குமாறு'' எனப் பழமொழியே தோன்றிற்று.

சேரி தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பென வழங்கும் வழக்கு மிகப் பிற்பட்டது. ''பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்'' என்ற நாளில் பிறந்தது, சேரிச் சொல்; ஒதுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், தீண்டாதார், தாழ்த்தப்பட்டோர் என்னும் குறியீடுகள் தோன்றாத காலத்துச் சொல் சேரிச் சொல். ஆகலின் அந்நாளைப் பாண்சேரி, பாணர் குடியிருப்பு என்னும் பொருளில் நிற்பதே.

'பா—பாண் — பாணர்' எனப் பாணர், பாடல் இசைத்தல் பண்ணெழுப்பல் இவற்றைச் சார்ந்து திறம் பெற ஆடல் எனக் கலைத் தொழில் வாழ்வினர். 'வாழ்நர்' வாணர் ஆயது போல் 'பாழ்நர்' பாணர் எனத் திரிபு ஆய்வு செய்தாரும், அப்பொருள்படப் பாடல் செய்தாரும் உளர். 'பாண்+அர்' பாணர் என்பது வெளிப்படை.

பாணர் குடியினர் செய்து வந்த தொழில்கள்; அவற்றால் அக்குடியில் உண்டாகிய பிரிவுகள்; இவற்றை, எண்ணினால் தமிழ்க் கலைகளுள் பெரும்பாலான வற்றைக் கட்டிக்காத்தும் வளர்த்தும் வந்த குடி பாணர்குடி என்பதற்கு ஐயமில்லை.

கொல்லுத் தொழில் பலவகைப்படுதல் அனைவரும் அறிந்ததே. அப்பலவகைத் தொழிலிலும் ஈடுபட்டவர் ஒரு குடிவழியினரே. தச்சர், இரும்புசெய் கொல்லர், பொற் கொல்லர், செம்பு கொட்டிகள், கஞ்சுகர், வண்ணக்கர், சிற்பர், ஓவர் எனப்பட்டார் அனைவரும் ஒரு குடியினர் ஆதல்போல் பாணர், கூத்தர், பறையர், வள்ளுவர், கடம்பர், பொருநர், கணியர், புள்ளுவர் இன்னோரெல்

லாம் ஒரு குடியினரே. அவரவர் கொண்ட கருவிகளாலும், ஏற்றுக் கொண்ட கலைத் துறைகளாலும் வெவ்வேறு குறியீடு கொண்டனர் என்க.

மூவேந்தரும் வேளிரும் வாழ்ந்த காலத்தில் புலவர்கள் பாடும் புகழ்ப்பேறு, தனியுயர் பேறு என எண்ணப்பட்டது. அவர்களால் பாடப்படும் நிலமே பேறுபெற்ற நிலம் எனப் பட்டது; இடைக் காலத்தே இறையடியார்களால் பாடு புகழ் பெற்ற கோயில்களுக்குத் தனிப் பெருமை சுட்டப் பட்டது போலப், பழநாளில் புலவர் பாடு புகழ் பெற்ற புவிக்குப் புகழ் இருந்தது. அதனால் வஞ்சினம் கூறும் போழ்தில் கூட "புலவர் பாடா தொழிக என் நிலவரை" எனச் சுட்டலாயினர். புலவரால் பாடப் படுபவரே விண்ணின்பம் எய்துவர் என்றும் எண்ணினர். புலவர் களோடு அளவளாவ வாய்க்கும் மண்ணின்பமே விண்ணின் பினும் விழுமிது எனவும் கொண்டனர். இப் புலவர் பெரு மக்களுக்கு இருந்த செல்வாக்கு பாணர் பாடினியர் விறலியர் கூத்தர் முதலானோர்க்கும் இருந்தது என்பதை இவண் அறிதல் சாலும்!

புலவர்களின் பாடு பொருள்கள் பலப்பல. அவற்றுள் தலையாய ஒன்றாகப் பாண் குடியினரைப் பற்றிய ஆற்றுப் படைப்பாடல் இருந்தது என்பது எண்ணத் தக்கது. பத்துப் பாடல்களில் செம்பாதியாக விளங்குவது ஆற்றுப்படை நூல்களே. முருகாற்றுப்படை ஒன்று நீங்கலாக எஞ்சிய சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொரு நராற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பன நான்கும் பாண்குடியினர் கலைவாழ்வினைக் கட்டுரைக்கும் ஆற்றுப்படைகளே. புறநானூறு, பதிற்றுப் பத்து என்னும் புறத்துறைசார் நூல்களிலும் ஆற்றுப் படைகள் உண்டு; பாண்பாட்டு என்றொரு துறைப் பாடலும் உண்டு.

பாணர் பற்றிய இந்நூலில் இவ்வாற்றுப்படையால் அறியப்பெறும் செய்திகள் பெரும் பங்கு கொள்கின்றன. அப் பாடல்களாலும் பிற பிற பாடல்களாலும் அறியப் பெறும் பாணர் திறம், பாடினிதிறம், பாணர் செலவு, பாணர் வறுமை, புரவலர் உள்ளம், பாணர் உள்ளம், பாணர் பெற்ற பரிசில் என்பவை அகச்சான்றுகள் கொண்டே ஒழுங்குறுத்திச் சொல்லப்படுகின்றன.

ஆட்சித் துறையில் பாணர் பங்கு, போர்த் துறையில் பாணர் இடம், பாணர் நாடு, பாணர் குடியிருப்பு இன்னவை இலக்கியச் சான்று, வரலாற்றுச் சான்று, கல்வெட்டு, ஆய்வாளர் கட்டுரை ஆகியவற்றின் வழியே தெளிவுறுத்தப் படுகின்றன.

பாணர் அகத்துறை இலக்கியப் பங்கும், அதனால் அவர்களுக்கு இருந்த பழிச் சொல்லும், பாணருள் ஒரு பிரிவார் புலவூண் நாட்டத்தால் கொண்ட இழிவரவும், தம் கலைகளை இழந்த வீழ்ச்சியும் இன்ன பிறவும் உரிய வகையால் எண்ணப்படுகின்றன.

யாழ், யாழ் உறுப்பு, யாழ் நயம் என்பவை பாணர் கலைக்கு மூல வைப்பகம். ஆகலின் அவற்றை விரிவாக ஆய்தல் வேண்டத் தக்கது. எனினும் ஒராற்றான் விரியாமலும் மிகக் குன்றாமலும் ஆய்ந்து கூறப் பெற்றுள.

'யாழ' 'யாழோர் வழக்கம்' என்பவை ஆய்வாளர்கள் கருத்துக்கு முன்வைப்பு எனினும், தகுமாயின் எதிர் நூல் களில் போற்றிக் கொள்தற்கும் அவ்வகையில் மேலும் ஆய்தற்கும் உரிய பங்குடையவாம்.

சமயத் துறையில் பாணர் பங்கை மதிப்பிடாது விடுதற்கு இல்லை. அதில் அவர் பற்றிய பங்கும் சுருங்கக் கூறப்படுகின்றது. இக்காலப் பாணர் குறிப்பும் ஒராற்றான் இறுதிப் பகுதியில் சொல்லப்படுகின்றது. தென்னகக் குலங்குடி பற்றிய மேலைநாட்டு அறிஞர் தர்சுடன்

தொகுப்பு வழியே அறியப் பெறும் செய்தி, பாவாணர் பெயர்த்துச் சுருக்கிய மொழி பெயர்ப்புடன் தரப் பெற்றுள்ளது.

ஒரு குடியின் இடையறவுபடா வாழ்வு எத்தகு நலங் களைச் செய்யும் என்றும், இடையறவுபடின் என்னென்ன கேடுகள் விளையும் என்றும் இந்நூலால் தெளிவுற அறிய லாம். அவ்வறிவு, பழங்குடியினர் வளர்த்த கலைகளை உள்ள அளவிலேனும் மேலும் அழியாமல் காத்தலும், நுண்ணிய ஆய்வால் வளப்படுத்தலும் ஓர் இயக்கமாகக் கொண்டு கடனாற்றத் தூண்டுமாயின் நலப்பாடாம். அதனை உள்ளார்ந்த உணர்வாகக் கொண்டு எழுதப்படும் நூல் 'பாணர்' என்க.

இந்நூலை எழுதத் தூண்டியவர் பேராசிரியர் ச. மெய்யப்பனார். "கனி தந்தால் கனியுண்ணவும் வல்லிரோ" என்னும் இனிதுறு மொழி அவர்வழி வந்ததென எண்ணி எழுதப்பட்ட நூல் இது. பழந்தமிழ்க் குடியினர் வரிசையொன்று வெளிப்படுதலில் எளியேனுக்கும் பங்கு பற்றித் தந்த பேராசிரியர்க்கு நெஞ்சார்ந்த நேயத்தால் நன்றியுரைத்துத் தமிழுலகில் இப்'பாணர்' நூலை உலாப் புறமாக விடுத்து மகிழ்கின்றேன்.

தமிழ்ச் செல்வம்,<br>திருநகர், மதுரை-6<br>25—6—87

இரா. இளங்குமரன்<br>பாவாணர் ஆராய்ச்சி நூலகம்.

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | பாணர்—ஒரு பொதுப் பார்வை | ... | 1 |
| 2. | பா—பண்—பாணி | ... | 5 |
| 3. | யாழ் | ... | 10 |
| 4. | யாழ் உறுப்பு | ... | 18 |
| 5. | யாழ் நயம் | ... | 26 |
| 6. | பாணர் குடி | ... | 32 |
| 7. | பாணர் குடியினர் | ... | 37 |
| 8. | பாணன் திறம் | ... | 41 |
| 9. | பாடினி திறம் | ... | 48 |
| 10. | பாணர் வறுமை | ... | 53 |
| 11. | பாணர் செலவு | ... | 57 |
| 12. | புரவலர் உள்ளம் | ... | 62 |
| 13. | ஆற்றுப்படை | ... | 69 |
| 14. | பொருநராற்றுப்படை | ... | 76 |
| 15. | சிறுபாணாற்றுப்படை | ... | 80 |

| | | | |
|---|---|---|---|
| 16. | பெரும்பாணாற்றுப்படை | ... | 85 |
| 17. | கூத்தராற்றுப்படை | ... | 89 |
| 18. | புறநானூற்றில் ஆற்றுப்படை | ... | 93 |
| 19. | பதிற்றுப்பத்தில் ஆற்றுப்படை | ... | 102 |
| 20. | பாணர் பெற்ற பரிசில் | ... | 106 |
| 21. | பாணர் பேருள்ளம் | ... | 111 |
| 22. | அகத்துறையில் பாணர் | ... | 118 |
| 23. | பாணர்ப் பழிப்பு | ... | 124 |
| 24. | பாணரும் புலவும் | ... | 128 |
| 25. | சமயத் துறையில் பாணர் | ... | 132 |
| 26. | அரசியற்றுறையில் பாணர் | ... | 140 |
| 27. | பாணர் வீழ்ச்சி | ... | 144 |

# 1. பாணர்—ஒரு பொதுப் பார்வை

'பாணர்' என்பார் தமிழ்நாட்டுத் தொல் பழங்குடியினர். அவர்களைப் பற்றிய பற்பல குறிப்புகள் தொல் காப்பியத்திலேயே அறியக் கிடக்கின்றன. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என்பது நூன்மரபு ஆகலின், தொல்காப்பியர் காலத்திற்கு மிக முற்பட்ட குடியினர் பாணர் என்பது தெளிவாம்.

தமிழ் முக்கூறுபட இயல்வது. அவை இயல் இசை நாடகம் என்பன. அவற்றுள், இயற்றமிழ் வல்லுநராக இருந்தவர்கள் புலவர் பெருமக்கள். அவர்களுள் இசைத் தமிழ் வல்லுநர்களும் கூத்து எனப்படும் நாடகத் தமிழ் வல்லுநர்களும் இருந்துளர். சங்கப் புலவர்களின் பெயரடைவை நோக்கிய அளவானே அவை அறிய வரும். உறையூர் முதுகூத்தனார், நப்பண்ணனார், மதுரை இளம் பாலாசிரியர் சேந்தன் கூத்தனார், மதுரைக் கூத்தனார், மதுரைத் தமிழ்க் கூத்தனார் என்பார் இசை, கூத்துத் திறங்களில் வல்லார் என்பது பெயர்களானே விளங்கும்.

புலவர் பட்டியல் மிகப் பெரிது: இதில் இசையும் கூத்தும் வல்லாராகத் திகழ்ந்தவர் ஒரு சிலரே; புலவர்கள் வளர்த்த இயற்றமிழுக்கு அப்பாலான, இசை கூத்துத் தமிழ்களை வளர்த்துப் போற்றிய குடியினர் பாணர். அப்பாணர் வாழ்வொடும் ஒன்றியே இசையும் கூத்தும் வளர்ந்தன; தளர்ந்தும் போயின. ஆதலால், பாணர் குடியின் வரலாறு

இசைத் தமிழ் வரலாறாகவும் கூத்துத் தமிழ் வரலாறாகவும் அமைந்துள்ளது என்பது விளக்கமாம்.

கூத்தில் வல்லுநர்க்கு இசைத்திறம் வேண்டும்; இசைத் திறம் வல்லுநர்க்கு இயற்றிறமும் வேண்டும். இசையுங் கூத்தும் அறியார் இயற்புலவராக இருந்து விடலாம். ஆனால், கூத்துப் புலவராக இருந்தவர் முத்தமிழ்த் தேர்ச்சியும் முறை பெற அமைந்தவர் என்பது வெளிப்படை.

பாணர் கலைத்திறம் புலவர்களைக் கவர்ந்தது; புரவலர்களையும் பொதுமக்களையும் ஒருங்கே கவர்ந்தது. கேட்பாரையும் காண்பாரையும் தம் வயப்படுத்த வல்ல இசையையும் கூத்தையும் எவர் விரும்பார்? பின்னாளில் இசை கூத்துகளை. வெறுத்துரைத்தவர்களே, இசை கூத்துகளின் வயப்படுத்தும் திறத்திற்கு வாய்த்த சான்றுகள்! அவை முற்றாக வயப்படுத்தி விடும் என்னும் அச்சத்தால் அல்லவோ ''இசையும் கூத்தும் காமத்தை வளர்க்கும்'' எனக் கடிந்தனர். இக் கடிவே, இவற்றின் கவர்ச்சிக்கும் பலப்பலர் ஈடுபாட்டுக்கும் சான்றாகின்றது அல்லவா!

இசை, கூத்துத் திறங்களை மதித்த இயற்றமிழ்ப் புலவர்கள் இத்திறங்களையுடைய பாணர் கூத்தர் முதலியவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாணாற்றுப்படை, கூத்தராற்றுப் படை எனப் பாடினர். முடிவேந்தருள் ஒருவனாம் கிள்ளிவளவனும் பாணாற்றுப் படை பாடினன் எனின் — தன்னையே பாணனாக்கிக் கொண்டு பாணாற்றுப் படை பாடினன் எனின் — பாணர் சிறப்பு எத்தகையது என்பது எளிதில் விளங்கும்.

பாணர் என்பார் 'பாடுவார்' என்ற அளவில், பொருள் சொல்லக்கூடிய சுருங்கிய கலை வல்லார் அல்லர். பாடுவாரும் ஆடுவாரும் கருவியிசைப்பாரும் கருவி செய்வாரும் அவர் தம் பெண்டிரும் கூடிய ஒரு பெருந் தொகுதியினரே பாணர் என்பவராம்.

உழுவார், விதைப்பார், நீர் இறைப்பார், உரமிடுவார், களை பறிப்பார், காவல் புரிவார், களப்பணி செய்வார், ஆடுமாடு வளர்ப்பார், வண்டியோட்டுவார் இவர்தம் மங்கைமார் ஆகியோரெல்லாம் வேளாண் குடியினர் எனப் படுவது போலவே பாணர் குடியினரும் விரிவு மிக்கவராம். இதனால் இசையும் கூத்தும் முழுதுறத் தழுவி வாழ்ந்த ஒரு பழங்குடியினர் பாணர் எனச் சுருங்க உரைக்கலாம்.

புலவர்கள், புரவலர்களைத் தேடிப் பழமரம் நாடும் பறவைகளைப் போலச் சென்றனர். நாடு அரசு என்னும் கட்டுகள் அவர்களுக்கு இல்லை; "எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே" என வாழ்ந்தனர். பகைவர் நாட்டில் இருந்து வந்த புலவர் எனினும் அவரைப் பகை பாராட்டுதல் அந்நாளை அரசர் வழக்கில் இல்லை. இப் புலவர்களைப் போலவே, பாணர்களும் எந்நாட்டுப் புரவலரையும் நாடிச் சென்றனர்; பரிசில் பெற்று, பெற்றது கொண்டு சுற்ற மருத்தி வாழ்ந்தனர்.

புலவர் செலவுக்கும் பாணர் செலவுக்கும் ஒரு பெரும் வேறுபாடு உண்டாம். புலவர் எங்கும் தம் துணைவி யொடும் சுற்றத்தொடும் புரவலரைக் காணச் சென்றது இல்லை; ஆனால், பாணர் கூத்தர் இன்னோர் தம் துணையின்றிச் சென்ற செய்தி அருமையாம்; தம் சுற்றத்தொடும் சென்ற செய்திகளே மிகப் பலவாம்.

பாணர் உள்ளம், கலையுள்ளம்; மெல்லுள்ளம்; 'நாளை என் செய்வோம்?' என்று கருதிப் பார்ப்பதும் இல்லாத உள்ளம். எவ்வளவு வளமான பரிசில் கிடைப் பினும் எதிர்காலம் கருதிப் போற்றி வைத்துக் கொள்ள அறியாத அவர்கள் வாழ்வு, வளமையும் வறுமையும் மாறி மாறி வரும் வாழ்வாகவே அமைந்தது. இஃது அவர் களுக்குப் பழகிப் போனதாகவும் அமைந்து விட்டது எனலாம்.

தமிழின் அகத்துறை புறத்துறை ஆகிய இரு துறைகளிலும் பாணர்க்கு இடம் இருந்துள்ளது. எனினும், புறத்துறையில் பாணர் பெற்ற இடம் பெருஞ்சிறப்புக்குரியதாம். அகத்துறையில் பாணர் இடம் பாராட்டுக்கு உரியதாக அமையவில்லை. அவர்கள் பழிப்பிற்கும் நகைப்பிற்கும் உரியவர்களாகக் காட்சி வழங்குகின்றனர். ஊடல் தீர்க்கும் வாயிலாக அமையும் பாணர், தம் கலைக்கு உரிய பெருமையை அடைய முடியுமா?

பாணர் குடியின் பெருமை காலம் காலமாகச் சரிதல் ஆயிற்று. கொடுமுடியில் இருந்து குழிக்குள் வீழ்ந்தது போன்ற நிலைமையும் ஆயிற்று. இந்நாளில் பாணர் என்பார் பெயரளவில் உள்ளனர். அவர்களுக்கும் பழங் கலைக்கும் எத் தொடர்பும் இல்லை! இசைத் துறையை அறவே விடுத்துத் தையல் தொழிலில் ஊன்றியுள்ளனர்.

ஒருகுடி தன் உருக்குலைதலால், எத்துணைக் கலைச் செல்வங்களை நாடு இழந்து போகின்றது என்பதை விளக்குவதற்குப் பாணர் குடியிற் சிறந்த சான்று இல்லை. இசை கூத்து இலக்கணங் கண்ட அவ்வினம், அவற்றின் பரப்புநராகத் திகழ்ந்த அவ்வினம், காலந்தோறும் கடிய வறுமையிலும் அக்கலைகளை அழிந்து படாமல் கட்டிக் காத்த அவ்வினம், தன்னுருவே அழிந்து படுதலால் இசை நூல்களும் கூத்து நூல்களும் அழிந்தன; இருக்கும் நூல்களின் நுண்பொருள்களும் அறிதற்கு இயலாதனவாய் அருகின; இசையும் கூத்தும் தமிழில் இல்லை என்று கூறுமளவுக்கும் கூட வரலாற்றழிவுக்கு வழி செய்துவிட்டது. இவை சிந்திந்துச் செயலாற்றத் தக்கவையாம்.

## 2. பா - பாண் - பாணி

பா என்பது பரந்தது என்னும் பொருளது. பார், பாரி, பாரித்தல், பார்வை முதலியவை அப் பரவுதல் பொருளில் வருபவை.

'பாஅ' என அளபெடை கொண்டு வருதல் அவ்வமைப் பாலேயே அகலுதல் பொருளை விளக்குவதாம். யானையின் அகன்ற அடியைப் 'பாஅ அடி' என்பர் (புறம். 233). வண்ணங்களிலே ஒன்று 'பாஅ வண்ணம்'. 'இப் பாஅ வண்ணம்' என்பது, நூற்பா வண்ணமாம் (தொல். செய். 242)

பா என்பது, ஓசையால் பரந்துபட்டுச் செல்லும் பாடலைக் குறிக்கும். வெண்பா முதலாகச் சொல்லப்படும் பாக்கள், பரந்து செல்லும் ஒலியால் பெற்ற பெயர்களே யாம். அதனால், பா என்பதை விளக்கும் பேராசிரியர் "சேட்புலத் திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற்கு ஏதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை" என்றார் (தொல். செய். 1).

நெசவுத் தொழிலில் அமைந்த பாவைப் பார்ப்பினு அதன் பரவுதல் விளங்கும். வேளாண் தொழிலில் பாத்தியில் விதையிட்டுப் பரவுதல் உண்டு. அதனாலும் பரவுதல் பொருள் தெளிவாம். சிறுகுழந்தை யுடுக்கும் 'பாவாடை' அதன் பரவுதல் பொருளைத் தெளிவுற நிறுவும். 'பாவடி

எனவரும் புறப்பாடல் சொல்லுக்குப் பழைய உரையாசிரியர் 'பரந்த அடி' எனப் பொருள் கண்டார் (15).

பா என்பது பாட்டு என்னும் பொருள் தருவது போல் 'பாண்' என்பதும் அப்பொருள் தரும்.

ஒப்பு நோக்குக: ஏ > ஏண்; ஏ = உயர்ச்சி; ஏண் = உயர்ச்சி; பாவும் பாணும், பாடல் என்னும் பொருள் தரினும் 'பாண்' என்பது இசைப் பாடல் என்னும் பொருளைச் சிறப்பாகத் தருவதாம். இதனைப் பாணி என்னும் சொல் நன்கனம் தெளிவிக்கும்; இசையும் பாட்டும் தாளமும் இயைந்து வருவதே பாணியாம்:

> "செங்கயல் நெடுங்கண் சின்மொழிக் கடைசியர்
> வெங்கள் தொலைச்சிய விருந்திற் பாணி"

என்றார் இளங்கோவடிகளார் (சிலப். 10. 130 — 1). "கானல்வரிப் பாடற் பாணி" என்பதும் சிலம்பே (7. 24: 4)

பாடற் பொருள் தரும் பாண், அப்பாடல் இசைக்கும் இசைத் தொழிலை மேற்கொண்டவர்க்கும் பெயர் ஆயிற்று. 'பாண்' என்பதற்குப் 'பாண் சாதி' என்றார் அடியார்க்கு நல்லார் (சிலப். 4: 75). அவரே பாணைப் பாட்டாக்குதலையும் தழுவிக் கொண்டார், அதன் விளக்கவுரைப் பகுதியிலே. 'பாண்சேரி'ப் பெயர் பண்டே இருந்தது. (மதுரைக். 269)

ஊணிலேயே கருத்துக் கொண்டு வாழ்வாரை 'ஊணர்' என்பர். பாடும் பணியே பணியாகக் கொண்டவர்கள் பாணர் எனப்பட்டனர் என்க.

பாண் என்பது பாட்டாய், இசையாய், இசைக்குடியாய் பொருள் வளமுற்றதுடன் நிற்காமல் மேலும் விரிவுற்றது. 'பாண்' என்பது பாணாற்றுப் படை என்னும் நூல் வகையைக் குறிப்பதும் ஆயிற்று. "முருகு பொருநாறு பாணிரண்டு" எனவரும் பத்துப் பாட்டின் அடைவுப்

பாட்டில் 'பாண்' என்பது பாணாற்றுப்படையாதல், அறிக.

பாண் இசைப்பாட்டு எனப்பட்டதுடன், வண்டின் இசையும் 'பாண்' எனப்பட்டது. "சுரும்பு பாண் செய" என்றார் கம்பர் (பால. 541)

பாண் சிறத்தற்குப் பண்ணுதல் வேண்டும்; பண்ணுதலாவது பலவகை இசை வகுப்புத் திறங்களும், அவற்றைச் சிறப்பித்துப் பருந்தும் நிழலுமென இயலும் கருவியிசை இணைத்தலுமாம். இவற்றைக் கொண்டே "பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல்" என்றார் திருவள்ளுவர் (திருக். 573)

பண்வகுத்துப் பாடுதல் பண்டு தொட்டே இருந்தது என்பது பரிபாடலால் இனிது விளங்கும். "கடவுள் வாழ்த்து, கடுவன் இளவெயினனார் பாட்டு, பெட்டன் நாகனார் இசை, பண்ணுப் பாலையாழ் (3)" என்றும், "கடவுள் வாழ்த்து, கடுவன் இளவெயினனார் பாட்டு, கண்ணன் நாகனார் இசை, பண்ணுப் பாலை யாழ் (5)" என்றும், "ஆசிரியன் நல்லந்துவனார் பாட்டு, மருத்துவன் நல்லச் சுதனார் இசை, பண்ணுப் பாலை யாழ்" (6) என்றும், இன்னவாறு வருவனவற்றால் பண் வகுத்தற் பழமை தெளிவாக அறியப்பெறும். பாடினோர் ஒருவராய், இசை வகுத்தோர் வேறொருவராய் இருந்தமையும், ஒருவர் பாடற்கே இசை வகுத்தோர் பலராக இருந்தமையும் பரிபாடற் குறிப்புகளால் விளங்கும்.

பண்படுத்துதல் வழியாகப் பயன் சிறப்ப வழங்குவது நிலம்; பண்படுதல் வழியாக உண்டாம் பண்பாட்டால் மக்கள் உயர்வு விளங்கும். இசைச் சிறப்பும் பண்பாட்டால் விளைவதே என்பதும் தெளிவாகும். பண், பண்ணத்தி, பண்ணல், பண்ணாளத்தி, பண்ணுப் பெயர்த்தல், பண்மாறு, பண்முறை, பண்வகை எனவரும் இசைத்துறைச் சொல்லாட்சியும் இவற்றின் விளக்கமும் பண்ணின் நீர்மையைக்

காட்டவல்லன. பண் என்பதன் காரணத்தை அடியார்க்கு நல்லார் காட்டும் எடுத்துக்காட்டு வழியே சிறப்ப அறியலாம்.

"பாவோ டணைதல் இசையென்றார்; பண்ணென்றார்
மேவார் பெருந் தானம் எட்டானும் — பாவாய்,
எடுத்தன் முதலா இருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்றார் பார்"

என்பது அது. (சிலப். 3: 26).

செய்நேர்த்தியும் செம்மை வடிவும் அமைந்தவற்றைப் பண்ணைப் பட்டவையாகச் சொல்லுதல் பெருவழக்காம்: பண்ணமை காழ், பண்ணமை கோலம், பண்ணமை சுவர், பண்ணமை நல் யாழ், பண்ணமை நெடுந்தேர், பண்ணமை படுகால், பண்ண்மை படைமதில், பண்ணமை பற்று, பண்ணமை பிடி, பண்ணமை புணை, பண்ணமை இருக்கை, பண்ணமை வனப்பு என்பவை பெருங்கதையில் வரும் ஆட்சிகளாம்.

பண்ணுதலால் சிறக்கும் நிலமும் நிலத் தொகுதியும் பண்ணை எனப்படும். "பச்சைத்தேரை தாலாட்டும் பண்ணை"யைக் குறித்தார் கம்பர் (பால. 58). பண்ணையார், பண்ணையாள், பண்ணையடித்தல், பண்ணையம் என்பவை இந்நாளிலும் பெருக வழங்கும் வழக்கில் உள்ளவை.

பண்ணை என்பது, கரும்புப் பண்ணை, மூங்கிற் பண்ணை எனப் பலவாகக் கிளைத்துச் செறிந்த மூடுகளைக் குறிப்பதாக வழக்கில் இன்றும் உள்ளது. பல செறிந் திருத்தலே பண்ணை ஆதலால், கோழிப்பண்ணை, மீன் பண்ணை எனப் புதுப் பண்ணைகள் வழக்கில் வந்துள்ளன. பண்டே பண்ணை யென்பதற்குப் பலர்கூடும் செறிவும், பல கூடும் செறிவும் பொருளாக உண்மை அறிய முடிகின்றது.

ஆசிரியர் தொல்காப்பியனார்,

" கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு"
(உரி. 21)

என்றும்,

" பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்"
(மெய்ப். 1)

என்றும் கூறினார்.

"பண்ணை விளையாட்டாயம்" என்றும், "பண்ணை யுடையது பண்ணை" என்றும் இளம்பூரணர் குறித்தார். 'பண்ணை' என்பதற்குப் பேராசிரியரோ, "முடியுடை வேந்தரும் குறுநிலமன்னரும் முதலானோர் நாடகமகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமநுகரும் இன்ப விளையாட்டு" எனப் பொருள் விரித்தார்.

கருவிகள் பலவற்றைக் கொண்டு இசைத்துப் பாடுதலும் 'பண்ணை' எனப்பட்டது. பலர் சேர்ந்து பாடும் கூட்டிசையோ 'பண்ணைக் கானம்' எனப் பட்டது. தொகுதிக்கு வந்த இப்பெயர் இசைக் கருவிகளையும், இசைஞரையும் குறிப்பதாக வழக்கில் ஊன்றியது. 'பண்ணவர்' என்பதற்கு இசைஞர் என்ற பொருளும் இயல்பாக அமைந்தது.

இசைக்கு அமைந்த காலக் கணிப்பும், தாளக்கட்டும், இனிமையும் எல்லாம் அமைந்த சிறப்பே அதனைப் பண்ணாக்கியது என இச் சொல்லாட்சிகளால் அறியலாம்.

# 3. யாழ்

யா என்பது ஓரெழுத்து ஒருமொழி வினாச் சொல்லாகும். இது 'கட்டு' என்னும் ஏவற் சொல்லாதலும் உண்டு. 'யா' என ஒரு மரமுமுண்டு.

யாக்கை, யாப்பு, யாத்தல் என்பனவெல்லாம் கட்டுதல் பொருள் வழியாக வந்த சொற்கள். எலும்பு நரம்பு தோல் முதலியவற்றால் கட்டுதல் அமைந்தது யாக்கை. எழுத்து அசை சீர் முதலியவற்றால் கட்டப்படுவது யாப்பு.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

என்னும் நன்னூல், யாப்புக்கும் யாக்கைக்கும் உள்ள கட்டுதல் ஒப்புமையைக் கூறும் (268). "தாதுக்கள், ஏழும் புணர்த்த தியாக்கை எழுத்தாதி, ஏழும் புணர்த்த தியாப்பு" என்னும் யாப்பருங்கல விருத்தி (1).

யாத்தல் என்பது ஆத்தல், ஆர்த்தல் எனத் திரிந்தும் கட்டுதல் பொருள் தரும். "பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு" என்பது திருக்குறள் (482)

யாழைப் பார்த்த அளவானே அஃதெவ்வகை யாழாக இருப்பினும் அதன் அடிப்படை கட்டாதல் தெளிவாம். முதல் யாழாம் 'வில்'லியாழாயினும் சரி, ஆயிரம்

நரம்பிற்றாம் 'ஆதி'யாழாயினும் சரி கட்டால் அமைந்ததே.

கட்டுகளைக் கட்டுதற்குப் பயன்படும் புளியவளார், கருவேல் வளார் முதலியவும் நார் வகைகளும் 'ஆக்கை' என வழக்கில் உண்மையும் அறியத் தக்கனவாம்.

யாழ்க்கலையில் வல்ல பாணர் 'யாழ்ப்பாணர்' என்றும், 'யாழோர்' என்றும் வழங்கப்பட்டனர். அவர்கள் யாழைத் தம் கைப்பொருளாகக் கொண்டு இருந்தமையால் யாழ், 'பாணர் கைவழி' என்னும் பெயர் பெறுவதாயிற்று.

"கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி"

"கையது கடனிறை யாழே"

என்பவை புறநானூறு (149, 69). பாணர் தம் இடையிலே யாழை வைத்துத் தழுவிக் கொண்டு போதலையும், அவ்வியாழ் அவர்தம் இடப்பக்கத்து இடுப்பில் இருப்பதையும் சான்றோர் கூறினர்:

"சீறியாழ் ஒல்கல் உள்ளமொ டொரு புடைத்தழீஇ"
—(புறம். 135)

"சீறியாழ் வாடுபுடைத் தழீஇ" —(புறம். 155)

"வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇ"
—(சிலம்பு. 28. 31)

"இன்குரற் சீறியாழ் இடவயின் தழீஇ" —(சிறுபாண். 35)

"தொடைவயின் கேள்வி இடவயின் தழீஇ"
—(பெரும்பாண். 16)

என்பவை அவை.

இடையில் குடங்கொண்டு நீர் எடுத்துச் செல்லும் மகளிரையும், குழந்தையை எடுத்துச் செல்லும் மகளிரையும் காண்பார் 'இடவயின் தழீஇ' என்பதன் வழக்காற்றின் பழமை அறிவர்.

பாணர் இந்நாட்டின் நிலை மக்களே எனினும் தொழில் வகையால் அலைமக்களாகவே பண்டு விளங்கியுள்ளனர். ஆகலின், தம் கலைப் பொருள்களை எங்கெங்குச் செல்லினும் அங்கங்கு எடுத்துக்கொண்டு சென்றனர். ஊரூராகத் திரிவார்க்கு — பலப்பல கலங்கள் (இசைக் கருவிகள்) — கொண்டு திரிவார்க்கு ஒரு கலமே பெரிதாகி விடின் பலவற்றை விடுத்துச் செல்லவே நேரும். இன்றேல் தாங்காச் சுமையாய் அமையும். அன்றியும் 'யாழ்க் கருவி'யை எடுத்துச் செல்லுதல் பிறந்த குழந்தையை எடுக்கும் திறனமையக் கையாளப் படுவதாம். ஆகலின், பாணர் சிறிய யாழையே பெரிதும் கொண்டு சென்றனர் என்னும் செய்தி அறியக் கிடத்தல் இயற்கையொடு கூடியதாம். "குறைந்த சுமை நிறைந்த இன்பம்" எனச் சுற்றுலாக்காரர்க்குத் தொடரி (Train) களில் விளம்பரம் செய்யப்படுதலை அறியும் நாம், பாணர் சிறிய யாழையே பெரிதும் கொண்டு சென்ற நடைமுறைத் திட்டத்தை எண்ணி மகிழலாம்.

" மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ் "
—(பொருந. 109)

" இன்குரற் சீறியாழ் —(சிறுபாண். 35)

" ஏழ்புணர் சிறப்பின் இன்றொடைச் சீறியாழ் "
—(மதுரைக். 559)

" தேஎந் தீந் தொடைச் சீறியாழ் " —(புறம். 70)

" சுகிர்புரி நரம்பின் சீறியாழ் " —(புறம். 109)

" களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ் "
—(புறம். 127, 145)

" வள்ளுயிர்ச் சீறியாழ் " —(புறம். 138)

" சீறியாழ் செவ்வழி பண்ணி " —(புறம். 144, 146, 147)

" வணர்கோட்டுச் சீறியாழ் " —புறம். 155)

" சீறியாழ் இல்லோர் சொன்மலை "—(புறம். 176)

" தீந் தொடைச் சீறியாழ் " —(புறம். 285)

" ஐதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ் "—(புறம். 302)

" பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரல் சீறியாழ் "
(புறம். 308)

"கருங்கோட்டுச் சீறியாழ் "
—(புறம். 316; மலை. 534. நெடு 70)

" கைவல் சீறியாழ் " —(புறம். 398; ஐங். 472)

" பெரிது புலம்பினனே சீறியாழ்ப் பாணன் —(ஐங். 475)

" பாணன் கையது பண்புடைச் சீறியாழ் " —(நற். 30)

" பொன்புனை நரம்பின் இன்குரல் சீறியாழ் "
—(நற். 380)

" அருந்துறை முற்றிய கருங்கோட்டுச் சீறியாழ் "
—(அகம். 331)

" விளரி நரம்பின் சீறியாழ் " —(அகம். 279)

புறப்பாடல்களில் 'சீறியாழ்' இடம் பெற்ற எண்ணிக்கையை நோக்குதல் வேண்டும். புரவலர்களைத் தேடிச் சென்ற பாணர் செலவியல் காட்சியொடும் சீறியாழை எண்ண வேண்டும். இனிப் பேரியாழைப் பற்றிக் காணலாம்

" தொடைபடு பேரியாழ் பாலைபண்ணி" (46)

" வாங்கிரு மருப்பிற் றீந்தொடைப் பழுநிய
இடனுடைப் பேரியாழ்" (66)

" பாணர் கையது பணிதொடை நரம்பின்
விரல்கவர் பேரியாழ்" (57)

பதிற்றுப்பத்து, பதிகப்பாடல்; அரண்மனைப் பாடல்; அவைக்கண் இருந்து அரங்கேற்றிய பாடல் எனினும் ஆம். ஆகலின் 'பேரியாழ்' இசைத்தல் இயல்வதே! தனித் தனி

வழிகளில் சென்று தனித் தனிக் குடியிருப்புகளையும், வள்ளல்களையும், வேந்தர்களையும் அடைந்து தனிப் பாடல் யாத்தவர் பாண்பாட்டில் சீறியாழ் இடம்பெறுதல் இயற்கையே! ஆகலின், புறநானூற்றுப் பாடல்களில் பேரியாழ் இடம் பெற்றிலது என்றும் பதிற்றுப் பத்தில் இடம் பெற்றது என்றும் கொள்ளலாம். பெரும் பாணாற்றுப் படையில் ''இடனுடைப் பேரியாழ்'' என்றும் (462) மலைபடு கடாத்தில் ''வள்ளுயிர்ப் பேரியாழ்'' என்றும் (37) வருதல் நோக்கத் தக்கதாம். இவை ஆற்றுப்படைகள் என்பதையும் எண்ணல் வேண்டும்.

'' பேரியாழ் பின்னும் மகரம் சகோடமுடன்
சீர்பொலியும் செங்கோடு செப்பினார்—தார்பொலிந்து
மன்னும் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னும் உளவே பிற''

என்பது சிலம்பு. (3.26. அடியார்க்கு நல்லார்).

''இந்நால்வகை யாழிற்கும் நரம்பு கொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத் தொன்றும், மகரயாழிற்குப் பத்தொன்பதும், சகோடயாழிற்குப் பதினாறும், செங் கோட்டியாழிற்கு ஏழும் கொள்ளப்படும்: என்னை?

'' ஒன்றும் இருபதும் ஒன்பதும் பத்துடனே
நின்றபதி னான்கும் பின்னேழும்—குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி
என்றாராகலின்''

என்றும் கூறினார் அடியார்க்கு நல்லார்.

அவரே தம் உரைப் பாயிரத்தில், ''பெருங்கலமாவது பேரியாழ்; அது கோட்டின தளவு பன்னிருசாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிருசாணும், இப் பெற்றிக் கேற்ற ஆணிகளும் திவவும் உந்தியும் பெற்று ஆயிரங்கோல் தொடுத்து இயல்வது; என்னை?

"ஆயிரம் நரம்பிற் றாதியா ழாகும்
ஏனை யுறுப்பும் ஒப்பன கொளலே
பத்தர தளவும் கோட்டின தளவும்
ஒத்த வென்ப இருமூன் றிரட்டி
வணர்சா ணொழித்தென வைத்தனர் புலவர்"

என நூலுள்ளும்,

"தலமுத லூழியிற் றானவர் தருக்கறப்
புலமக ளாளர் புரிநரம் பாயிரம்
வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச்
செலவுமுறை யெல்லாம் செய்கையிற் றெரிந்து
மற்றை யாழும் கற்றுமுறை பிழையான்"

எனக் கதையுள்ளும் (பெருங்கதை 4.3:51—5) கூறினாராக லாற் பேரியாழ் முதலிய ஏனவும் இறந்தன எனக் கொள்க" என்றார்.

"ஆயிரம் நரம்புகளை யுடைய பெருங்கலம் என்ற பரவையாழ் ஒருபோதும் இருந்திருக்க முடியாது; அது அறிஞர்கள் கற்பனையில் கண்ட ஒரு செய்தியே யொழிய உண்மையாக இராது என்று மேனாட்டு நாகரிக மோகங் கொண்ட இன்றை இளைஞர்கள் சிலர் நவில்கின்றனர். இது தவறான கருத்தேயாகும். சுமார் ஆயிரம் நரம்பு களைக் கொண்ட யாழ்போன்ற இசைக் கருவி இத்தாலி நாட்டில் இன்றும் இசைக்கப் பெறுகின்றது. சுரமண்டலம் என்னும் இந்த இத்தாலி வாத்தியம் இன்றும் இருப்பதை நம்பும் நமது நண்பர்கள், ஆயிரம் நரம்புகளையுடைய பெருங்கலம் இருந்ததை நம்ப மறுப்பதேன் என்று தெரியவில்லை. இதைவிட விந்தை, இன்று இத்தாலியில் ஆயிரம் நரம்புகளை யுடைய சுரமண்டல வாத்தியம் இருக்க லாம். முற்காலத்தில் வடஇந்தியாவில் ஆயிரம் நரம்பு களையுடைய நாரதப் பேரியாழ் இருந்திருக்கலாம்; ஆனால், தமிழகத்தில் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆயிரம் நரம்புகளையுடைய பெருங்கலம் இருந்தது

என்பதை நம்ப முடியாது என்று கூறும் தமிழ் இளைஞர்கள் போக்கிற்கு என் சொல்வது?'' என இரங்குகிறார் இசையும் யாழும்' இசைத்த நுண்கலைச் செல்வர் அ. இராகவனார் (பக். 246—7).

யாழ் வடிவினை யாங்குக் காணலாம் என்பதையும் இராகவனார் உரைக்கிறார் (பக். 229—30)

"யாழினை இன்று காண முடியாவிட்டாலும் சிற்ப வடிவில் அதன் உருவினைத் தமிழகத்தில் திருமெய்யம் (திருமயம்) திருஎருக்கத்தம் புலியூர், தாராசுரம் முதலிய இடங்களில் உள்ள கோயில்களில் இன்றும் காண முடிகிறது. திருஎருக்கத்தம் புலியூரில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் சிலையில் ஒரு யாழை அவர் தாங்கி நிற்பதைக் காண முடிகிறது. இஃதன்றி ஆந்திராவில் உள்ள அமராவதியில் உள்ள கோலி என்னும் இடத்தில் கி. பி. 2ஆம் நூற்றாண்டில் எழுந்த சிற்ப வடிவங்களில் வளைந்த பழைய சீறியாழ் போன்ற யாழையும், கோடு நிமிர்ந்த புதிய செங்கோட்டியாழ் போன்ற அழகிய யாழையும் காண முடிகிறது. மேலும் தமிழர்களின் முன்னோர்களாகிய திராவிடர்கள் பிறப்பிடமாக மேனாட்டறிஞர்கள் கூறும் சுமேரியா நாட்டின் (மெசபொத்தாமியாவின்) தலை நகராகிய ஊர் என்னும் நகரில் அகழ்ந்து கண்ட புதை குழியில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வழக்கிலிருந்த பொற்றகட்டால் பொதியப் பெற்ற நல்யாழ் உருவங்களைப் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டெடுத்துள்ளனர். அது தமிழர்கள் கண்ட யாழொடும் மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் பொறிக்கப் பெற்ற யாழ் உருவங்களோடும் நெருங்கிய தொடர்புடையதாய்க் காணப்படுகின்றது.

யாழைப் பற்றிய விரிவான செய்திகளை அறிய விரும்புவார் கருணாமிர்தசாகரம், யாழ் நூல், பாணர் கைவழி, இசையும் யாழும் முதலாய நூல்களைக்

காண்பாராக. பஞ்ச மரபில் முதல் மரபு யாழ் மரபாக உண்மையும் அறிய வேண்டுவதே.

விபுலானந்த அடிகளார் தம் யாழ் நூலில் யாழாம் நங்கை பிறந்து வளர்ந்து மறைந்த நிலைகளை அருமையாக விளக்குகிறார்:

''சரித்திர கால எல்லைக்கு எட்டாத காலத்திலே 'வில்யாழ்' எனப் பெயரிய குழவியாய் உதித்து, மழலைச் சொற்பேசி, இடையர் இடைச்சியரை மகிழ்வித்துச் 'சீறியாழ்' என்னும் பேதைப் பருவச் சிறுமியாகிப் பாணனொடும் பாடினியொடும் நாடெங்கும் திரிந்து, ஏழைகளும் இதயங்களிப் பெய்த இன்சொற் கூறிப் பின்பு 'பேரியாழ்' என்னும் பெயரொடு பெதும்பைப் பருவ மெய்திப், பெரும்பாணரொடு சென்று, குறுநில மன்னரும் முடிமன்னரும் தமிழ்ப்புலவரும் கொடை வள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரை பகர்ந்து, அதன்பின் மங்கைப் பருவம் எய்தி, அப்பருவத்திற் கேற்பப் புதிய ஆடையும் அணிகலனும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமை காட்டி, மடந்தைப் பருவம் வந்தெய்துதலும், திருநீலகண்டப் பெரும்பாணரொடும் மதங்கசூளாமணி யாரொடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து தெய்வ இசையினாலே அன்ப ருள்ளத்தினை உருக்கி முத்தமிழ் விரகராற் பாராட்டப் பட்டு அரிவைப் பருவம் வந்தெய்துதலும் அரசிளங்குமரி களுக்கு இன்னுயிர்ப் பாங்கியாகி அவர்க்கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்திச் சீரும் சிறப்பு மெய்தி நின்ற 'யாழ்' என்னும் மென்மொழி நங்கை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயினாள்'' (யாழ் நூல் பக். 38)

இனி யாழ் உறுப்புகளைக் காணலாம். ஆற்றுப்படை நூல்களிலே யாழ் உறுப்புகளை உவமை நயத்துடன் எடுத்துரைத்துள்ளனர். அப்பகுதியே இவண் எடுத்துரைக்கப் படுகின்றதாம்.

## 4. யாழ் உறுப்பு

ஒரு பெண்ணின் வாழ்வில் அவள் திருமணத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு. அவள், ஆடை அணிகளால் அழகுறுத்தப்படும் தனிச் சிறப்புநாள் அன்றே. அழகுக்கு அழகு செய்யும் அருமையும் அப்பொழுதில் ஏற்படுவதே. 'யாழ்' இயல்பாகவே வனப்புற அமைக்கப்படுவது. அதன் தனித்தனி உறுப்புகளும் தகவுற அமைக்கப்பட்டு முழு அழகுக்கு உறைவாகச் செய்யப்படுவது. அதன் மேற் போர்வையும் கலைமணங் கமழச் செய்யப்படுமெனின் பிறவுறுப்பு நலங்களைச் சொல்ல வேண்டுவ தில்லையாம்.

யாழை மணமகளாகக் காண்கிறது பொருநராற்றுப் படை.

> "மணங்கமழ் மாதரை மண்ணி யன்ன
> அணங்குமெய்ந் நின்ற அமைவரு காட்சி"

என்கிறது அது (19-20).

புதுமணக்கோலம் கொள்ளும் நங்கையை அணியுறுத்தி அழகு செய்தாற்போலத் திகழ்கின்றதாம்! தெய்வத் திருக்கோலமே அதில் நிலைபெற்றுத் திகழ்கின்றதாம்! கண்டார் கண்ணையும் கருத்தையும் வேற்றிடத்திற்குச் செல்லாவகையில் நிலைபெறுத்தி நோக்க வைக்கும் தனிப் பேரெழில் உடையதாகத் தோன்றுகின்றதாம்! யாழ் நூலில் யாழை யாழாம் நங்கையாகக் கண்டாரே விபுலானந்தர்; அதன் ஊற்றுக் களம் இங்கே அமைகின்றது!

இழந்த இசை நூல்கள் கூத்து நூல்கள் முதலியவற்றின் பரப்பையெல்லாம் அறிந்து கொள்ள மூல பண்டாரமாகத் திகழ்கின்ற சிலம்பினை அருளிய இளங்கோவடிகளார் இம் மணக்கோல அழகைத் தம்மனத்துக் கொண்டு தழைகிறார். அதனால்,

**'' சித்திரப் படத்துட் புக்குச்**
**செழுங்கோட்டின் மலர்புனைந்து**
**மைத்தடங்கண் மணமகளிர்**
**கோலம்போல் வனப்பெய்தி''**

என்றார் (கானல்வரி. 1-2). ''சித்திரப்படம்-உறை. கோடு-யாழ்க்கோடு, மணமகளிர்-கலியாண மகளிர்'' என வரைந்தார் அரும்பத உரையாசிரியர். ''சித்திரத் தொழிலமைந்த ஆடையுட் புகுந்து அழகிய கோட்டிலே மலர் சூடி மை தீற்றிய பெரிய கண்களையுடைய மணமகளின் ஒப்பனைக் கோலம் போல் அழகினைப் பொருந்தி'' என உரை வரைந்தார் நாவலர் ந. மு. வே.

யாழில் தெய்வம் உறைவதாகப் பொருநராற்றுப் படை குறித்த குறிப்பையும் விடாமல் அடிகளார், ''யாழ்கையில் தொழுது வாங்கி'' என்பதால் இயைத்துக் கொண்டார். (கானல். 4).

பண்டைத் தமிழ் நூல்களால் அறியப்பெறும் யாழுறுப்புகளைத் தொகைப்படுத்திப் பதினெண்வகை யாழுறுப்புகள் உண்மையைக் கண்டார் வரகுணபாண்டியர்: (பாணர் கைவழி. பக். 78)

1. பத்தல்
2. போர்வை
3. யாப்பு
4. வறுவாய்
5. நுண்துளையாணி
6. கவைக்கடை
7. உந்தி
8. ஒற்றுறுப்பு
9. ஆணி
10. வணர்
11. மாடகம்
12. பண்மொழி நரம்பு

13. கோடு
14. திவவு
15. புரிநரப்புக் கோல்
16. தந்திரிகரம்
17. தகைப்பு
18. ஐம்பத்தோருறுப்பு

என்பவை அவை.

இப்பதினெண் உறுப்புகளில் தண்டு, சுள்ளாணி, போர்வை, வறுவாய், மாடகம், தகைப்பு, உந்தி, வணர், பத்தர் என்ற ஒன்பதும் தண்டு, முள்ளாணி, முடிப்பலகை, கண், மாடம், மேரு, மெட்டு, வளைவு, பானை அல்லது குடம் என முறையே வேற்றுத் தமிழ்ப் பெயர்களையே பெற்றிருக்கின்றன என்றும், யாப்பு, கவைக்கடை, ஒற்று, முடுக்காணி, புரிநரம்பு அல்லது கோல், பண்மொழி நரம்பு, தந்திரிகரம் என்பன முறையே டகாரி, நாகபாசம், வளைவு ரேக்கு, பிர்டை, சுரமெட்டு, தந்தி, காடிச்சக்கை என்ற வேற்றுமொழிப் பெயர்கட்கு மாற்றம் பெற்றிருக்கின்றன என்றும், திவவு, புரிநரம்பு அல்லது கோல்கள், போர்வை, நரம்பு என்பன முறையே மெழுகு, வெண்கலம், மரப்பலகை, எஃகு எனச் செய் பொருளில் மாத்திரம் மாற்றம் பெற்றிருக்கின்றன என்றும் காண்கிறோம் என்று யாழுறுப்புகளின் பெயர் மாற்றங்களையும் செய்பொருள் மாற்றங்களையும் சுட்டுகிறார் (பாணர் கை வழி. 156 — 7).

யாழின் தனித்தனி உறுப்புகளிலும் கலைவல்ல புலவர்கள் தோய்ந்துள்ளனர். அதன் வடிவிலும் வனப்பிலும் நெஞ்சைப் பறிகொடுத்திருக்கின்றனர். அவர்கள் ஆர்வப் பெருக்கு ஒவ்வோர் உறுப்பையும் இன்ன உறுப்பெனப் பெயர் கூறும் அளவில் நில்லாமல் உவமை நலங்கொழிக்கச் சொல்லச் செய்துள்ளது.

யாழின் 'பத்தல்' குடம் போன்று அமைந்தது. அதன் மேற்பகுதி இருபாலும் தாழ்ந்தும் நடுவே உயர்ந்தும் இருக்குமாறு இரு பிளவுகளை இணைத்தது. அதனால், மான் குளம்பு பதிந்த தடத்திற்கு உவமை கூறினர்,

" குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்" — (பொருந. 4)

யாழியின் உறுப்புகளில் ஒன்றாகிய 'பச்சை' என்பது 'தோல்' என்பதாம். அது விளக்கொளியின் நிறம் அமைந்த தாகவும் நன்கு இறுக்கிப் போர்க்கப்பட்டதாகவும் இருத்தலைப் பொருநராற்றுப் படை குறிக்கும் (5).

" விளக்கழல் உருவின் விசியுறு பச்சை"

என்பது அது. அப்பச்சையைப் பாதிரிப்பூவின் உள்ளக நிறத்தைப் போன்றது என்று பெரும்பாணாற்றுப் படையும், குமிழங்கனியின் நிறத்தைப் போன்ற பொலிவினையுடையது என்று சிறுபாணாற்றுப் படையும், பொன்போலும் நிறத்தை யுடையது என்று மலைபடு கடாமும் கூறுகின்றன.

" பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்ததன்
உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சை"
— (பெரும்பாண்.4 —7)

" கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சை"
—(சிறுபாண். 225 —6.)

" புதுவது புனைந்த பொன்போற் பச்சை"
—(மலைபடு. 28.)

என்பவை அவை.

சிவந்த நிறத்தையுடைய அத்தோலின் இரண்டு தலைப்பினையும் இழுத்து மூட்டுதல், சிவந்த நிறமுடைய நங்கையின் இளஞ்சூல் வயிற்றின் நடுவிடத்தே யுள்ள மயிரொழுங்கு போல்வது. பத்தரின் நடுவிடம் சிறிதே உயர்ந்திருத்தலின் இளஞ்சூல் வயிறு என்றார்.

" எய்யா இளஞ்சூல் செய்யோள் அவ்வயிற்
றைதுமயிர் ஒழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை"
—(பொருநர். 6 — 8)

பத்தரை இணைத்தற்குத் திறந்த துளை மறைய முடுக்கிய ஆணி, நண்டின் கண்ணை ஒத்ததாம்.

"அளைவாழ் அலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை ஆணி"
— (பொருநர். 9 — 10.)

யாழின் துளையாம் உறுப்பு கமுகம் பாளையின் அழகிய பசும்பூ விரியாமல் கருவாய் இருந்தாற் போன்ற இரண்டு கண்ணுங் கூடிய செறிந்த துளை என்றும், வரகுக்கதிர் ஒழுகிய தன்மையதான நெருங்கிய நுண்ணிய துளை என்றும் சொல்லப்படுகின்றது.

"பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை"
— (பெரும்பாண். 7-8)

"வரகின், குரல் வார்ந் தன்ன நுண்டுளை"
— (மலைபடு. 24-5)

யாழின் போர்வையில் அமைந்த திறப்பு வாய் ஒன்று உண்டு. அதனை வறுவாய் என்பார்; வறுவாய் என்பது உள்வீடு இல்லாத வெறுவாயாம். வாய்க்கு நா உண்டே! இவ்வறுவாய்க்கு அஃது இல்லை என்க.

எட்டாம் நாள் தோன்றுகின்ற மதிபோன்ற உண்ணாக் இல்லாத வறுவாய் அது என்றும், சுனை வற்றி இருண்டு கிடந்தாற்போன்ற வறுவாய் அது என்றும் கூறப்படுகின்றன.

"எண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
அண்ணா வில்லா அமைவரு வறுவாய்"
— (பொருநர். 11-12)

"சுனைவறந் தன்ன இருள்தூங்கு வறுவாய்"
— (பெரும்பாண். 10)

யாழின் தண்டு, கோடு மருப்பு எனவும் படும். அதனைப்,

"பாம்பணந் தன்ன ஓங்கிரு மருப்பு"

என்கிறது பொருநராற்றுப்படை (13). பாம்பு தலையெடுத்தாற்போல் ஓங்கிய கரிய தண்டு என்பது இதன் பொருளாம்.

யாழில் 'திவவு' என்பது வார்க்கட்டு எனவும் சொல்லப் படும். கருநிற மங்கையின் முன் கையில் அணியப்பட்ட அழகிய வளையலை ஒத்ததும் ஒன்றோடு ஒன்று நெருங்கின இருப்பினையுடையதும் திண்ணிய பிணிப்பையுடையது மாகிய வார்க்கட்டு என்கிறது பொருநராற்றுப்படை; இதே கருத்தையே பெரும்பாணாற்றுப்படையும் கூறுகின்றது. மலைபடுகடாம் இக்கருத்துடன் திவவின் எண்ணிக்கை யையும் சுட்டுகின்றது.

பசிய கண்களையுடைய கரிய குரங்கு பாம்பின் தலையைப் பற்றிக் கொள்ள அப்பாம்பு ஒருபோதிறுகவும் ஒருபோது நெகிழவும் அதன் கையைச் சுற்றுமாறு போன்ற அழகிய தண்டிடத்தே சுற்றிய வார்க்கட்டு என்கிறது சிறுபாணாற்றுப்படை.

"மாயோள் முன்கை ஆய்தொடி கடுக்கும்
கண்கூடிருக்கைத் திண்பிணி திவவு"
— (பொருநர். 14-15)

"நெடும்பணைத் திரடோள் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கும் மெலிந்துவீங்கு திவவு"
— (பெரும்பாண். 12-13)

"தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவு"
— (மலைபடு. 21)

" பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன
அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவு"
— (சிறுபாண். 221-222)

தேர்ந்தெடுத்த தினையரிசியைத் தீட்டி வைத்தாற் போன்றது யாழின் நரம்பு என்கிறது பொருநராற்றுப்படை. பொற்கம்பி போன்ற முறுக்கடங்கின நரம்பு என்கிறது பெரும்பாணாற்றுப்படை. தேன் ஒழுகுகின்ற தன்மையைத் தன்னிடத்தே கொண்டு அமிழ்தத்தைப் பொதிந்து துளிக்கும் நரம்பு என்கிறது சிறுபாணாற்றுப்படை.

" ஆய்தினை அரிசி அவையல் என்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பு"
—(பொருநர். 16-17)

" பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பு"
—(பெரும்பாண். 15)

" தேம்பெய்து, அமிழ்து பொதிந் திலிற்றும் அடங்குபுரி
நரம்பு" —(சிறுபாண். 226-227)

கவைக்கடை என்னும் யாழுறுப்பைப்

' பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை'

என்கிறது பெரும்பாண் (11). 'பிறை தோன்றி ஏந்தியிருந் தாற்போன்ற பின்பு ஏந்தியிருக்கின்ற கவையினையுடைய கடை' என்பது இதன் பொருளாம்.

யாழுறுப்புகளை உவமை வகையால் கண்ட நாம் யாழும் பிறவுமாம் பாணர் கருவிகளொடு பிறபிற இசை முழக்கங்கள் இசைதலைப் பாடும் பரிபாட்டைக் கண்டு அமைவோம் (17).

"ஒருதிறம், பாணர் யாழின் தீங்குரலெழ
ஒருதிறம், யாணர் வண்டின் இமிரிசையெழ
ஒருதிறம், கண்ணார் குழலின் கரைபெழ
ஒருதிறம், பண்ணார் தும்பி பரந் திசையூத
ஒருதிறம், மண்ணார் முழவின் இசையெழ
ஒருதிறம், அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப
ஒருதிறம், பாடல்நல் விறலியர் ஒல்குபு நுடங்க
ஒருதிறம், வாடையுளர்வயிற் பூங்கொடி நுடங்க
ஒருதிறம், பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒருதிறம், ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற
மாறுமா றுற்றனபோன் மாறெதிர் கோடல்
மாறட்டான் குன்ற முடைத்து."

# 5. யாழ்நயம்

யாழிசை நயம், "குழலினிது யாழினிது" என்னும் குறளாலும் (66) "குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின் மழலைக் கிளவி" என்னும் சிலம்பாலும் (2: 58-59) இனிது விளங்கும்.

தலைவியின் இனிய சொல் நரம்பார்த்தன்ன தீங் கிளவி' எனப்படும். (ஐங்குறு. 185). "பாணர் நரம்பினும் இன்கிளவியள்" என்றும் கூறப்படும் (ஐங்குறு. 100).

தலைவி மணம் செய்து தலைவன் இல்லின் கண் இல்லறம் நடத்தும் பான்மையை அறியுமாறு சென்று அறிந்து வந்த செவிலித்தாய் பெற்ற தாயிடம் கூறுவ தாக அமைந்தது ஐங்குறு நூற்றுச் செவிலி கூற்றுப் பத்து (41). அதில் யாழின் இன்புறு நயம் ஈரிடங்களில் இயம்பப்படுகின்றன (402, 407)

"தன் புதல்வனை அணைத்துக் கிடந்த தாயின் புறத்தைத் தழுவி, அவள் கணவன் விருப்பமுடையவனாய் வதிந்து கிடந்த கிடக்கை, பாணர்களின் யாழின் நரம்பிடை எழும் இசைபோல இனிமைத்தாதலேயன்றி நற்பண் பினையும் உடைத்து" என்பது முதற் பாடலின் பொருள்.

தான் விரும்பிய காதலியைத் தழுவி, உயிர்களை இசையின்பத்தில் படிவிக்கும் யாழின்கண் பாணர் யாத் திசைத்த இசைப்பயனைத் தேர்ந்து நுகரும் இன்பம் போலும் புணர்ச்சியினை நுகருவானாயினன், மென்புல

மாகிய முல்லை நிலத்தினையுடைய நாட்டுக்குரியோன்'' என்பது அடுத்த பாடலின் பொருள்.

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தான் சென்ற வினைமுடித்து, தான் தலைவியால் பெற்ற இன்பத்தை நினைவுகூர்ந்தான். வைகறைப் பொழுது அது; மழை பொழிந்தது. அம் மழைப் பொழிவை யாழ்ப் பொழிவுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றான். பார்த்ததைப் பாகற்கும் உரைத்து மகிழ்கின்றான்:

**மாக்கடல் முகந்து மாதிரத் திருளி**
**மலர்தலை யுலகம் புதைய வலனேர்பு**
**பழங்கண் கொண்ட கொழும்பல் கொண்மூப்**

**போழ்ந்த போலப் பலவுடன் மின்னித்**
**தாழ்ந்த போல நணிநணி வந்து**
**சோர்ந்த போலச் சொரிவன பயிற்றி**
**இடியும் முழக்கும் இன்றிப் பாணர்**
**வடியுறு நல்யாழ் நரம்பிசைத் தன்ன**
**இன்குரல் அழிதுளி தலைஇ நன்பல**
**பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறை''**

—(அகம். 374)

திருமணம் கொண்டு புக்ககம் போய பின்னர்த் தலைவியைக் காணச் சென்றாள் தோழி. அத்தோழி, தலைவன் இயல்புகளை நன்கனந் தெரிந்து நயனுறக் கூறி முன்னர் ஆற்றுப்படுத்தியவள். அவள் கூறியதன் மெய்ம்மையை உணர்ந்து கொண்டவளாய், மேலும் தலைவன் மேம்பாடு கூறுவாளாய்க் கூறுகின்றாள், தலைவி. பாணர் இசைக்கும் பண்ணினும், புதிது புதிதாக இயற்றிப் பாடும் திறங்களினும் தலைவன் இனியனாந் தன்மையை எடுத்து விளக்குகின்றாள்.

**'' குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்**
**கெடுநா மொழியலன் அன்பினன் எனநீ**
**வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்**

நல்லை காணில் காதலந் தோழி
கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே''

—(அகம். 352)

*இனிய இசையை எழுப்பிக் கொண்டிருக்கும் யாழின் நரம்பு எதிர்பாரா வகையில் அறுந்துபடின் எத்தகு துன்புண்டாம் என்பதைக் கலிப்பாடல் இசைக்கின்றது.* (8)

'' வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோல்
ஏழுந்தம் பயன்கெட இடைநின்ற நரம்பறூஉம்
யாழ்''

*யாழிசை எங்கே பிறக்கின்றது; யாழிலே பிறக்கின்றது. அவ்வியாழிசையால் யாழுக்கு ஆகும் பயன் என்ன? அதனை இசைத்துத் துய்ப்பார்க் கன்றோ, பயன்? அதுபோல் பெற்ற மகளால் நீவிர் உறும் இன்பமென்ன? அவ்வின்பம் அவள் உள்ளங் கொண்ட தலைவனுக்கே உரித்தாம் என ஏழிசை நரம்பு இனிய அறவுரையாய்க் கலியிலே இடம் பெறுகின்றது.* (9)

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.

*யாழின் வயப்படுத்தும் ஆற்றல் எத்தகையது? வலிய கட்டுத் தறியையே பெயர்த் தெறிந்து ஓடவல்ல களிற்றையும் தன்னிசைக்குள் அடக்கிவிட வல்லது யாழ் என்கின்றது மற்றொரு கலிப்பாட்டு* (1)

'' காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு''

*என்பது அது.*

மதங்கொண்ட யானை ஊரையே அலைக்கழிக்கிறது. உதயணன் யாழொடும் வருகிறான்; இசைக்கிறான். ஆசிரியனைக் கண்ட அளவாற் பணியும் மாணவன் போல மதக்களிறு படிவதைக் காட்டுகின்றது பெருங்கதை (2.9:57-9)

" வீணை எழீஇ வீதியின் நடப்ப
ஆணை ஆசாற் கடியுறை செய்யும்
மாணி போல மதக்களிறு படிய"

வேறு வேறு வண்ணம் காட்டும் ஓந்தி வேனிற்பொழுதில் ஒரு மரத்தில் ஏற இயலாது வருந்திய விடத்து அம்மரத்தின் கீழ் இருந்த பாணர் இசைத்த யாழிசை கேட்டுச் சோர்வு நீங்கிப் பக்கத்தில் உயர்ந்து நின்ற 'யா' மரத்தின்மேல் ஏறும் என்றொரு நற்றிணைப் பாட்டு நயமுற நவில்கின்றது (186):

" வேனில் ஓதி நிறம்பெயர் முதுபோத்துப்
பாண்யாழ் கடைய வாங்கிப் பாங்கர்
நெடுநிலை யாஅம் ஏறும் தொழில"

கன்மனக் கள்வரையும் கரைக்கவும், தாங்கள் கைக் கொண்ட கொலைக் கருவிகளைக் கைவிட்டு அருள் சுரப்பிக்கவும் வல்லது யாழிசை என்பதைப் பொருநராற்றுப் படை புகல்கின்றது (21-22).

" ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"

இதற்குப் பெருமழைப் புலவர் வரையும் விளக்கத்துடன் அமைவாம்:

"இசை, தன்னைக் கேட்டோர் உள்ளத்தே இன்பம் விளைத்தலொடு அவ்வுள்ளத்தைப் பண்படுத்தித் தூய்மை செய்து வீட்டின்பம் எய்தத் தகுதியுடையதாக்கும். இத்தகைய பெரும்பயன் உண்மையான் அன்றோ

சான்றோர் அதனைப் பெரிதும் போற்றி வளர்ப்பாரா யினர் என்க. ஈண்டு ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார் இவ்விரண்டு அடிகளாலும் இசைப்பயனைத் தெள்ளிதின் விரித்தோதுவார், மறமே செய்து திரியும் வேடரையும் அம்மறத்தொழிலை விடுத்து அருள் நெறியிற் சேர்க்கும் பெற்றிமையுடைய யாழ் என்னு மாற்றால் விளக்குதல் காண்க. மேலைநாட்டு நல்லிசைப் புலவராய சேக்சுபியர் என்பாரும் 'இசைக்கு இளகாதான் கொலை செய்யவும் துணிவான்' என இக்கருத்தை எதிர்மறை முகத்தான் நன்கு விளக்கிப் போந்தனர். அவர் கருத்தையும் இதனோடு ஒப்புக் காண்க.

''ஆறலை கள்வரையும் அருள் நெறிப்படுத்தும் எனவே, ஏனையோர் எளிதிற் பெரும்பயன் பெறுதற்குரியது யாழிசை என்றாராயிற்று. இத்தகைய பேரின்பம், இம்மை மறுமை இரண்டினும் எய்துவிக்கும் சிறப்புடைய இனிய யாழினை இறக்கவிட்ட இடைக்கால மதுகையிலாத் தமிழர் அளியரோ! அளியர்!''

'யாழ' என்பது முன்னிலை அசை எனப்படும். ஒரு கணவன் தன் மனைவியை அன்புடன் அழைக்கும் விளிச் சொல்லாக அரும்பி, ஓரன்பன் தன் அன்புடையானை விளிக்கும் சொல்லாக வளர்ந்து முன்னிலை அசைச் சொல்லாக இலக்கணத்தளவில் நின்றுவிட்டது.

இன்னும் 'ஏழா' என வழங்கும் வழக்கம் அற்றுப் போய்விடவில்லை. அது கணவன் தன் மனைவியை அன்புடன் விளிக்கும் விளிச் சொல்லாகவே வழங்குகின்றது. ஆண்பாலுக்கு 'ஏலா' என்றும் 'ஏடா' என்றும் வழங்குதல் ஏழா என்பதன் திரிபு வடிவே. பாணர்கள் தம் துணைமேல் கொண்ட அன்புக்கும் அவர்கள் உடனுறை வாழ்வுக்கும் போக்குக்கும் சீரிய சான்றாகத் திகழ்வது 'யாழ' என்னும் முன்னிலை அசைச் சொல்லாம். யாழ் தந்த கொடைச் சொல் அஃதென்க.

இனி 'யாழோர்' எனப்படுவது கந்தருவர் என்னும் இசைக்கூட்டத்தாரைக் குறிப்பதாகக் கூறுவர். அவர் யாழ்வல்ல பாணரைக் கண்ணிற் கண்ட எண்ணத்தில் வடித்துக் கொள்ளப்பட்ட வடிவு எனின் தகுதியாம். எங்கும் யாழொடும் துணையொடும் சுற்றத்தொடும் இன்பியல் வாழ்வினராய் இசைப் பறவையாய்த் திரிந்த அன்னார் காட்சி வழியதே கந்தருவக் காட்சி என்க.

'யாழோர் கூட்டம்' காதற் கூட்டம். யாழோர் மணவினை என்னும் மணிமேகலை (22:86). யாழோர் கலைத் தொழிலும் உடன் செலவும் காதல் மணத்திற்கு முற்றிலும் பொருந்தியதாக அமைந்திருத்தலை எண்ணிப் பார்ப்பவர் யாழோர் கூட்டத்தை விண்ணுக்குக் கொண்டு செல்லாது மண்ணிலே காண்பர். பாணர் காதல் வாழ்வொடும் இணைத்து அதுவே கரவற்ற உயர்வான காதல் நெறியாகச் சான்றோர் பெருமக்களால் போற்றிக் கொள்ளப் பட்டதுடன், இலக்கணமும் வகுத்துக் காக்கப் பட்டது என்பதையும் அறிவர்.

# 6. பாணர்குடி

பண்பு வாய்ந்த ஒரு குடியின் இலக்கணத்தை அறிய வேண்டுமானால் வள்ளுவர் கூறும் 'குடிமை'யை அறிதல் சாலும். அக் குடிமையைச் சார்ந்து மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை என்னும் அதிகாரங்கள் (96—100) தொடர்ந்து அமைந்திருத்தல் குறிக்கொண்டு நோக்க வேண்டுவதாம்.

"இழுக்கார் குடிப்பிறந்தார்" (952) "குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர்" (954) "பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் இன்று" (955) என்பவை குடிப்பிறந்தார் இயல்பைத் தெளிவாக்குகின்றன.

மாங்குடி கிழார் பாடிய புறப்பாடல் ஒன்று (335),

> " துடியன் பாணன் பறையன் கடம்பனென்
> றிந்நான் கல்லது குடியும் இல்லை"

என்கிறது.

மற்றை மற்றைக் குடிகள் பலவும் இருப்பினும் அவற்றை விடுத்து "இந்நான் கல்லது குடியும் இல்லை" என்றது குன்றக் கூறியதாகவே தோன்றும். ஆனால், அவர் ஒரு குறித்த நோக்கிலே எண்ணிக் குறித்த செய்தி ஈதென அறியக் கிடக்கின்றது.

மாங்குடிகிழார் பாடல் வாகைத்திணையில் மூதின் முல்லை என்னும் துறை சார்ந்தது. அம் மூதின் முல்லை,

"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்
மடவரல் மகளிர்க்கும் மறமிகுத் தன்று"

என்னும் இலக்கணத்தது (பு. வெ. மாலை). மறக்குடி மகளிர் வீரம் கூறும் இப்பாடலில் அம்மறக்குடியொடு போர்த் துறையில் பங்குகொள்ளும் துடியன் முதலியவரை எண்ணியுரைத்தாராம்.

துடிகொட்டுபவன், யாழ்மீட்டுபவன், பறையறைபவன், வெறியாடுபவன் ஆகிய இவர்கள், மறவர்கள் போர்க்குக் கிளர்ச்சி கொண்டு செல்லுதல் முதலாக வாகைசூடிப் பரிசு பெறுதல் ஈறாக உடனிருந்து மகிழ்வித்தும் மறம்பாடியும் பணி செய்வோர் என்பதை அறியுங்கால் மாங்குடி கிழார் எண்ணிய எண்ணம் விளங்குவதாம்.

இனிப் பொருநர் கூத்தர் என்பாரும் உளரே எனின், 'இந்நான்கல்லது பூவும் இல்லை; இந்நான் கல்லது உணர்வும் இல்லை" என்று எண்ணியதற்கு ஏற்ப, "இந்நான் கல்லது குடியும் இல்லை" என ஓர் ஒழுங்குறச் செய்தாராம் என்க. அன்றியும் பொருநரும் கூத்தரும் பாணருள் அடங்குவர் என்பதுமாம்.

பாணர் குடியிருப்பு 'பாண்சேரி' எனப்பட்டது. உழவர், ஆயர் முதலியோர் குடியிருக்கும் ஊர்களை அடுத்துத் தனித்திருந்த சில வீடுகள் 'சேரி' எனப்பட்டன.

உறையூரை அடுத்து 'ஏணிச் சேரி' என ஒன்று இருந்ததை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவர் பெயர் காட்டும். மதுரையின் புறத்தே 'புறச்சேரி' இருந்ததைச் சிலப்பதிகாரம் சொல்லும். ஆனால், சேரி என்பது தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு என இக்காலத்து வழங்கும் பொருளில் வழங்கிற்றில்லை. தாழ்த்தப்பட்டோர், தீண்டாதார் என்னும் பகுப்பே அறியாக் காலத்து, அப்பொருள் தருமாறு சேரி அமைவதற்கு வழியில்லையே!

வண்ணக்கஞ்சேரி, பார்ப்பனச் சேரி என்னும் பழஞ்சேரிப் பெயர்களை அறியுங்கால் சேரிப் பெயரின் பொதுமை விளங்கும்.

பாண்சேரியை மதுரைக் காஞ்சி குறிக்கின்றது (269). புறநானூறும் புகல்கின்றது (348). "பாண்சேரிப் பல் கிளக்குமாறு" என்றொரு பழமொழி வழக்கைப் பழமொழி நானூறு குறிக்கின்றது (21).

"விரிந்த அறிவுடையார் இடத்தே அறிவிலார் புகுந்து புல்லிய சொற்களைச் சொல்லுதல், கலை வளமிக்க பாணர் குடியிருப்பில் போய் பாடல் திறமறியாத ஒருவன் வாயைத் திறப்பது போலாகும்" என்னும் கருத்தை வெளியிடும் இப்பழமொழி பாணர்தம் இசைத் திறத்தைப் பறையறைந்து முழக்குவதாம்.

குடியிருக்கும் இடம், 'குடியிருப்பு' எனவும், 'இருப்பு' எனவும், 'இருக்கை' எனவும் வழங்கப்படும். பாணருள் ஒரு பிரிவினராகிய பெரும்பாணர் இருப்பிடத்தைக்

" குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபின் பெரும்பாண் இருக்கை "

என்பார் இளங்கோவடிகளார் (சிலப். 5. 35 - 7).

பெரும்பாணர் வாழ்ந்த குடியிருப்புச் சூழலை மதுரைக் காஞ்சி நன்கு விளக்குகின்றது. வையையாற்றின் நீர்த் துறைகளை அடுத்திருந்ததும் பூந்தோட்டங்களால் சூழப் பட்டதுமாகிய குடியிருப்பில் அவர்கள் இருந்தனர் என்றும், வழிவழியாக அக்குடியிருப்பில் இருந்து வந்தனர் என்றும் அது குறிக்கின்றது.

"அவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரள் தண்டலை சுற்றி
அழுந்துபட் டிருந்த பெரும்பாண் இருக்கை "

என்பது அது (340 — 2).

இக்காலத்தும் பாணன் குளம், பாணன் ஏரி, பாணன் திட்டு, பாணன் வயல் என்னும் பெயர்களில் இடங்களும் ஊர்களும் உள. இவற்றின் திரிந்த வடிவங்களும் உள.

பசும்பொன் மாவட்டத் திருப்புத்தூரைச் சார்ந்து பாணன் வயல் உள்ளது. காமராசர் மாவட்டத்துத் தென் எல்லை சார்ந்து பாணாங்குளத்துப்பட்டி யுள்ளது. பாணர் குடி 'பாணாக்குடி' என வழக்கில் பெருக வழங்கு கின்றது.

யாழில் வல்ல பாணனுக்குப் பரிசாக வழங்கப்பட்ட இடமே யாழ்ப்பாணம் என யாழ்ப்பாண வரலாறு கூறு கின்றது.

"யாழ்ப்பாணம்" அது யாழில் வல்ல பாணனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டமையின் யாழ்ப்பாணம் எனப் படுவதாயிற்று.

"யாழ்ப்பாணன் ஒருவன் தன் மனைவியொடு சண்டை யிட்டுக் கொண்டு, 'ஈழமண்டலம் போகின்றேன்' என்றான். அவன் தொண்டை நாட்டைச் சேர்ந்தவன். அவன் மனைவி, "வளநாடும் மழகளிறும் வாங்கி வரப் போகின்றீரோ?" என்று வினாவி நகைத்தாள். பாணன் ஈழம் சென்று அரசனைக் கண்டு தன் திறம் காட்டினான். அவன் மகிழ்ந்து 'மணற்றி' என்னும் ஊரையும் ஒரு யானை யையும் பல்லக்கையும் பணியாள்களையும் வழங்கினான். அம் மணற்றி யாழ்ப்பாணனுக்கு வழங்கப்பட்டதால்' 'யாழ்ப்பாணம்' எனப் பெயர் பெறலாயிற்று.

பாணன், நல்லூருக்குப் பக்கத்தே தனக்கொரு மாளிகையும், தன் பணியாளர்களுக்குக் குடியிருப்பும் அமைத்துக் கொண்டான். ஒரு குளமும் வெட்டினான். அக்குளம் தூர்ந்ததாயினும் இன்றும் 'பாணன் குளம்' என்றே வழங்கப்படுகின்றது.

"யாழ்ப்பாணன் தொண்டைநாட்டுக்குத் திரும்பி வந்தான். மணற்றியில் இயல்பாக உப்பு விளையும் வளத்தைத் தொண்டைமானுக்குக் கூறினான். தொண்டைமான் உப்புத் திரட்டுதற்கு ஆள்களும், அதனைக் கொண்டு வருதற்கு மரக்கலமும் உதவினான். தொண்டைமான் ஏவலாள்களால் அமைக்கப்பட்ட கால்வாய் 'தொண்டைமான் ஆறு' என இன்றும் வழங்குகின்றது.

— இச்செய்திகளை 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்னும் நூல் விரித்துரைக்கின்றது (1 - 13).

ஈழ நாட்டுக்குப் பாணன் போதற்கு முன்னரே, அதனை ஆட்சி செய்த வேந்தன் தமிழன் என்பதும், அவன் பாணனது யாழிசையையும் தமிழ்ப் புலமையையும் அறிந்தே தன் நாட்டின் ஒரு பகுதியைப் பரிசாக வழங்கினான் என்பதும், அப்பாணனால் குடியேறிய தமிழ் மக்களே அந்நாட்டை வளப்படுத்தினர் என்பதும் இச்செய்தியால் இனிது விளங்கும். சங்க காலத்திலேயே ஈழத்துப் பூதன் தேவனார் என்றொரு புலவர் ஈழத்தில் இருந்து மதுரைக்கு வந்து தமிழ்ச் சங்கத்தில் பங்கு பற்றியிருந்தனர் என்பதும் இவண் அறியத் தக்கதாம். அங்கும் இங்கும் ஒரே குடிவழி மக்கள் இருந்தனர் என்பது ஈழவர், ஈழத்துப் பிள்ளைமார் என வழங்கப் பெறும் குடிவழிப் பெயர்களால் திட்டமாக அறிய வரும்.

சங்க இலக்கியத்தில் பாணாற்றுப் படைகளுக்கு எத்தகைய பெருமையான இடம் உண்டோ, அத்தகைய பெருமை, யாழ்ப்பாணத்தாலும் பாணர்க்கு உண்டு. அவர்கள் குடிப் பெயரை உலகுக்குத் தன் பெயரால் என்றும் உரைத்துக் கொண்டிருப்பது அந்நகரே அன்றோ!

# 7. பாணர் குடியினர்

பாணர் குடியினர் இருபெரும் பிரிவினராக வெளிப்பட விளங்குகின்றனர். அவர் பெரும்பாணர், சிறுபாணர் என்பார்.

பெரும்பாணர் 'பேரியாழ்ப்பாணர்' என்றும், சிறு பாணர் 'சீறியாழ்ப்பாணர்' என்றும் வழங்கப்படுவதால், அவர்கள் பயன் படுத்திய யாழைக் கொண்டே அப்பெயர் பெற்றனர் எனலாம்.

மறவருள் ஒரு பிரிவார் பெருந்தாலி கட்டுவதும், மற்றொரு பிரிவார் சிறுதாலி கட்டுவதும், முன்னவர் 'பெரிய மறவர்' என்றும், பின்னவர் சின்னமறவர்' அல்லது சிறுதாலி கட்டி மறவர் என்றும் வழங்குவதுமாகிய வழக்கை எண்ணினால் இப்பாணர் பிரிவு தெளிவாம்.

யாழ்ப்பாணர் இரு வகையரேனும் அவர்கள் பாணர் என்னும் ஒரே குடிவகையினரே என்பது வெளிப்படை. இப் பாணருள் இசைப்பாணர் என்பாரும் மண்டைப்பாணர் என்பாரும் இருந்தனர் என்பது "பாணருளும் இசைப் பாணரும், யாழ்ப்பாணரும், மண்டைப் பாணருமெனப் பலராம்" என்று வரும் நச்சினார்க்கினியர் குறிப்பால் தெரியவரும் (தொல் புறத். 36)

**இசைப்பாணர் என்பார், வாய்ப்பாட்டு இசைப்பார்.**

**யாழ்ப்பாணர் என்பார், நரம்புக்கருவி இசைப்பார்.**

**மண்டைப்பாணர் என்பார், தோற்கருவி இசைப்பார்.**

மண்டை எனப்படும் உண்கலத்தைக் கொண்டிருந்தவர் மண்டைப் பாணர் எனப்பட்டனர் என்று கூறுவாரும் உளர்.

மண்டை என்னும் உண்கலம் மற்றை மற்றையோரும் கொண்டிருந்தனர் என்பதும், பிறபாணர் தம் பாடற் கருவியாலேயே பெயர் பெற்றனர் என்பதும் எண்ணினால் மண்டை இசைக் கருவியே எனக் கொள்ள முடியும்.

மண்டை என்பது பறையின் பெயர் என்பதைப் பாவாணர் விளக்கியுள்ளார்.

''கருவிகளில், தோற்கருவிகளெல்லாம் பறை என்னும் பொதுப் பெயரால் குறிக்கப்படும். தொல்காப்பியத்தில் 'தெய்வம் உணாவே மாமரம் புள்பறை' என்னும் கருப் பொருட் சூத்திரத்துள்ளும், 'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு, நல்ல படாஅ பறை' என்னும் திருக்குறளினும் பறை என்பது தோற்கருவிப் பொதுப் பெயராயுள்ளமை காண்க.

'மணப்பறை,' 'பிணப்பறை', 'பறை சாற்றினான்' முதலிய வழக்குகளில் பறை என்பது பல்வேறு தோற்கருவி களைக் குறித்தது. பறைகளை அடிப்பவர் பறையர் எனப் பட்டனர். இப்பெயர் இக்காலத்துப் பிணப்பறை யறைபவரை மட்டும் குறிக்கின்றது.

''பண்டைக் காலத்தில் மண்டை என்னும் பெயர் பறைக்கு வழங்கி வந்த மறு பெயராகும். பறைகள் அடிக்கும் பாணர் மண்டைப் பாணர் எனப்பட்டனர். மண்டையோடு போன்று மண் மரம் பித்தளை முதலிய வற்றாற் செய்து தோற் கட்டிய பறைகளை மண்டை என்றது ஒருவகை உவமையாகுபெயர்.

'மண்டை என்பது இக்காலத்தில் 'மொந்தை' என்று திரிந்து அவ்வடிவாயுள்ள மட்கலயத்தைக் குறிக்கின்றது. 'தவலை' என்பதன் மறுவடிவாகிய 'தபேலா' என்னும் இந்துத்தானிச் சொல், ஒரு நீர்ப் பாத்திரத்தையும் ஒரு பறையையும் குறித்தல் காண்க. கோயில் மேளத்தைக் குறிக்கும் 'தவல்' (தவுல்) என்னும் பெயரும் இதன் திரிபு போலும்.''

"பல்வகைப் பறைகளையும் அடித்துக் கொண்டு ஒரே குலமாயிருந்த மண்டைப்பாணர் பிற்காலத்துத் தொழில் கருவி ஒழுக்கம் முதலியவற்றின் வேறுபாட்டால் பல்வேறு பிரிவாய்ப் பிரிந்து போயினர்" (பாணர்; செந்தமிழ்ச் செல்வி சிலம்பு. 17; பக். 9-10).

இனிக் குழற்பாணர் என்பாரும் இருந்தனர் என்றும் அறிய வாய்க்கின்றது. சிலப்பதிகாரத்து வரும் 'பெரும் பாண்' என்பதற்குக் குழலாமுதலோர் என்று அரும்பத வுரைகாரர் உரைவரைதலால் (இந்திர. 38) இது விளங்கும். இதனைக் கருதியே நச்சினார்க்கினியர் பாணர் மூவகையர் என்னாது 'பலராம்' என்று கூறினார் போலும்! (தொல். புறத். 36)

இசை வாயிசை, கருவியிசை என இருவகையாய் இயலுதல் கண்கூடு. இவ்விரு வகை இசையிலும் திறம் பெற்றுத் தேர்ந்த குடியினர் பாணர். முன்னவர் 'பாடற் பாணர்' (சிலப். 4: 186) 'குரல்வாய்ப்பாணர்'(சிலப். 4: 200) என்னும் பெயர்களாலும் பின்னவர் கருவிப் பெயர்களாலும் வழங்கப்பட்டனர்.

இருவகை இசைத் திறமும் பாணர் பெற்றிருந்தது போலவே அவர்தம் துணைவியராம் பாடினியரும் பெற்றிருந்தனர். இவ்விரு வகையினரும் ஆடற்கலையிலும் தேர்ச்சி மிக்கிருந்தனர். செயிரியர், வயிரியர், குயிலுவர், மதங்கர், கண்ணுளர், கூத்தர், கோடியர், விறலியர் எனப் படுவார் இப்பாணரே. இப்பெயர்கள் கூத்துத் திறத்தால் இவர்கள் பெற்றவையாம்.

> " செயிரியர் மகரயாழின் தேம்பிழி தெய்வகீதம்"
> —(கம்ப. கார். 40)

> " பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
> மண்ணமைமுழவின் வயிரியர்" —(புறம். 164)

> "கண்ணுளாளர் கருவிக் குயிலுவர்
> பண்ணியாழ்ப் புலவர் பாடற் பாணர்"
> —(சிலப். 5 : 184-5)

"கண்ணுளாளர் - மதங்கர்; ஆவார் பெரும்பாணர். குழலரும் என்ப; கருவிக் குயிலுவர் - தோற்கருவி வாசிப்பார்."—அடியார்க்.

"ஆடு கூத்தர்." —(சிலப். 26:228)

"விழவிற், கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்து." —(புறம். 29)

"நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லாமோதில் சில்வளை விறலி." —(புறம். 64)

என்பவற்றைக் காண்க.

ஏர்க்களம் பாடுவார், போர்க்களம் பாடுவார், பரணி பாடுவார் எனப் பொருநர் மூவகையர். நின்றேத்தும் 'சூதர்', இருந்தேத்தும் 'மாகதர்', வைதாளியாடும் 'வேதாளிகர்' என ஏத்தெடுப்பார் மூவகையர். இவரும் பாணர் குடியினரே. அகவர், அம்பணர், இயவர் எனப்படுவாரும் இக்குடியினரே. துன்னர், துன்னகாரர், தோலின் துன்னர் எனத் தையல் தொழில் வழியாகப் பெயருற்றவரும் இக்குடியினரே. இத்தொழில் கருவிக்கும் கருவியைப் போர்த்தும் போர்வைக்கும் உரியதாய்ப் பொருந்தியதாம். இவற்றால் பாண்குடி எத்தகு பெருங்குடி என்பதும், கலைவளர் குடி என்பதும் மேலோட்டமாகப் பார்த்த அளவிலும் விளங்குவதாம்.

"இசைத் தொழில் முழுமையும் கொண்டு இக்காலத்து மேளகாரர் போல இருந்தவர் பாணர்" என்று கூறும் பாவாணர் கருத்து ஏற்றுப் போற்றத் தக்கதென்க. (பாணர்: செ. செ. 17:8)

பாணர்குடி முழுமையும் தழுவிய ஆய்வு என்பது மிக விரிந்ததாம். இங்கே பாணர் பாடினியர் விறலியர் என்பார் அளவில் ஆய்வு இயல்கின்றது.

# 8. பாணன் திறம்

ஒவ்வொரு தனிமாந்தரும் குமுகாயத்தின் ஓர் உறுப்பே. குமுகாய உதவியின்றி முற்றுந் துறந்த முனிவராலும் உயிர் வாழ்தற்கு இயலாது. ஒருவேளை உண்ணும் உணவை எண்ணினாலே, உண்மை தெளிவாக விளங்கும்.

அந்த ஒருவேளை உணவுக்குரிய தவசத்தை — காய்கறியை — பருப்பு வகைகளை — துணைப் பொருள் களை — உண்டாக்கித் தருதலில் எத்துணைப் பேர்களின் உழைப்பு அடங்கியுள்ளது! உழுதவர், விதைத்தவர், விளைவித்தவர், காத்தவர், ஆக்கியவர், அறைத்தவர், சமைத்தவர் என்றும், பிறபிறவாறும் எண்ணினால் எத் துணைப் பேர் பங்கு பற்றியுள்ளனர்? இவர்களுக்கு நாம் திருப்பித் தரும் பொருள் என்ன?

குமுகாயம் தனித்தனி மாந்தருக்குக் கடன் வழங்கி யுள்ளது. காலமெல்லாம் கடன் வழங்கி வருகின்றது. அக் குமுகாயத்திற்குத் தனிமாந்தன், எவ்வளவை கடமைப் பட்டுள்ளான்? கடனைத் தீர்க்கக் கடமைப்பட்டவன் அவன் அல்லனோ? கடனை வாங்கிக் கொண்டு கண்ணுக்குப் படாமல் மறைந்து போகின்ற கயமையை அவன் செய்தால் கடமை உணர்ந்தவன் ஆவனோ? இதனை ஆழமாக எண்ணிய முந்தையோர் கடன் என்பதற்குக் கடமை, கடப்பாடு என்னும் பொருள்களையும் கண்டனர்.

ஒருவன் உடைமையைப் பயன்படுத்திக் கொள்ளுதல் கடன்; அதனைத் தீர்த்தல் கடமை அல்லது கடப்பாடு. இது பொருட்கடன் பற்றியது. இதனினும் விஞ்சிய பிறவிக் கடப்பாடும் உண்டு.

நாம் பெற்றுள்ள அறிவு வளம் கலை வளம் முதலியன எத்துணைப் பெருமக்களின் கொடை. இக்கொடை வழங்கிய பெருமக்கள் ஒருவரா? இருவரா? அவர்கள் வழங்கிய கால அளவும்தான் எல்லையிட்டுக் காட்டக் கூடியதா? இத்தகு கொடையைத் தடையின்றி வரையறையின்றி வாரிக் கொள்ள வாய்த்த நாம், அவற்றை உதவிய உலகுக்கு மீட்டும் தரவேண்டிய பங்கென்ன? பணியென்ன? தன் ஆற்றலெல்லாம் காட்டியும் கூட்டியும் தான் பெற்ற திறத்தை உலகுக்கு வழங்க வேண்டும் அன்றோ! தன் பிறப்பால் உலகம் பெற்ற வளம் இதுவெனப் பின் வருவார் பெறுதற்கு அருளவேண்டும் அன்றோ! அஃதன்றோ பிறவிப் பயன்! அப்பிறவிப் பயனை முற்றாகப் புவிக்குத் தந்த குடி பாணர்குடி! தாம் வறுமையுற்ற காலையும் தம் கலைத்திறம் வறுமையுறாமல் பேணிக் காத்துக், கோடியைத் தேடி வைத்துக் கொண்டு கொள்ளை கொள்ளையாய் வேண்டுவார்க்கெல்லாம் வேண்டுமிடத் தெல்லாம் வேண்டும் அளவுக்கெல்லாம் வழங்கும் கொடைஞர் போலத் தாம் பெற்ற கலைத்திறத்தை உலகுக்கு வழங்கிய வள்ளன்மையர் இப்பாணர் குடியினர். இவர்தம் திறமறிந்தே சங்கச் சான்றோர் தம் படைப்புகளில் இவர்கள் திறங்களைப் பலபடச் சுட்டியுள்ளனர்.

பாணர் மரபு 'கடனறி மரபு' என்பது அவர்கள் கணிப்பு. "கடனறி மரபிற் கைவல் பாண" என்பது பதிற்றுப்பத்து (67). மரபின் வழி வருவார்க்கே அம்மரபுக் கொடையை மரபில் வருவார்க்கு மரபு நிலை திரியாமல் — மரபு நிலை மயங்காமல் — வழங்க முடியும்? "குலவித்தை கல்லாமல் பாகம் படும்" என்பது பழமொழி நானூறு (21).

பாணர் கடனறி மரபினர் ஆகலின் தம் கடமையைத் தவறாது ஆற்றிவந்தனர் என்பதாம்.

மரபு வழிக் கடன் உடைய பாணர் கையிலே உள்ள யாழும் வழிவழி வந்த கருவியாம்; வழிவழி வந்த கருவி யெனின் வழிபடத் தக்க கருவியுமாம். வழிபடத்தக்கதாய் வழிமுறையில் வந்ததாய் அமைந்த அக்கருவி கடமை புரிதற்குக் குடிமையின்படி வாய்த்த கொடைமையாம். ஆகலின் அது, 'கடனிறை யாழ்' எனப்பட்டது. "கையது கடனிறை யாழே" என்பது புறப்பாடல் (69).

மதிக்கத்தக்க ஒன்றையிட்டே சூள் செய்தல் மரபு. பாணர் மதிக்கத்தக்க பொருள் யாழினும் ஒன்று உண்டோ. இல்லையே! ஆகலின், 'யாழொடும் எடுத்துச் சூள் பலவுற்ற பாணன்' எனப்படுகிறான் (கலி. 71).

யாழ் மெல்லியது; வனப்பு மிக்கது; சிறு குறையாலும் பெருகிய மாற்றத்திற்கு ஆட்படுவது; இவற்றையெல்லாம் உணர்ந்தே சங்கச் சான்றோர் யாழினை மணமகளுக்கு ஒப்பாகக் கூறினர். 'மணம் புகு மகளொடு உடன்புணர் கங்குல்' மேற் கொள்பவன் எத்தகு நயவனாக இருத்தல் வேண்டும் என்பதை உணரின், பாணர் யாழியக்கும் கலைத் திறம் உணரவரும். இதனை உணர்ந்த சான்றோர் பாணர் யாழை இயக்கும் முறைமையைக் கூறுங்கால் 'கடன் அறிந்து' இயக்குவதாகக் குறித்தனர்.

மரபுவழிக் கடனாக வந்தது மட்டுமன்றி அதன் மேலே தன்பங்கெனப் பாணன் புதிது கொண்ட கலைத் திறமும் வேண்டுமன்றோ! இருக்கும் நிலையை இருந்தபடி காப்பது கடப்பாடே எனினும், தன்பிறவியால் இருக்கும் நிலையைச் சற்றேனும் உயர்த்திக் காட்டுதல் அன்றோ சிறப்பு நிலையாம். அந்நிலையையும் பாணர் எய்தி யிருந்தனர் என்றும், அதனை இயக்கும் தம் கை வன்மையால் நிறுவிக் காட்டினர் என்றும் பண்டைச் சான்றோர் பகர்ந்துள்ளனர்.

" கைவல் பாணன் கடனறிந்தியக்க"

என்பது சிறுபாண் (37).

" கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க"

என்பது புறம் (398). "கைவல் சீறியாழ்ப் பாணன்", "கைவல் பாண்மகன்" என்பவை ஐங்குறுநூறும் (472) பெரும்பாணுமாம் (37).

கைத்திறம் சிறப்பானதே; ஆயின், அக் கைத்திறம் நல்வழி அல்வழி இரண்டற்கும் பயன்படலாமே! நல்வழியில் மட்டும் அமைதல் அன்றோ பயன் மிக்கது; பாராட்டுக்கும் உரியது! ஆகலின், திட்டவட்டமான கொள்கை வழிப் பட்ட கைவன்மையாகவும் இருத்தல் வேண்டும். "குறிக் கோளிலாது கெட்டேன்" என்பதை உணர்வார் எத் துணையர்? 'குறிக்கோள் பிறழேன்' என்று உறுதிப்பட்டு நிற்பார் எத்துணையர்?

குறியாவது அடையாளம், இலக்கணம், நூல், விதி முறை. இவற்றைச் சிக்கெனக் கொள்ளல் குறிக்கோள்; கடைப்பிடி என்பதும் அது. கல்விக்கும் கலைக்கும் 'கோள்' முதன்மையானது. கோளாவது கொள்ளுதல். அதனால் தான் பயில்வார் கோளாளர் எனப்பட்டனர். அவர்கள் கல்விமுறை கோடல் மரபு (கொள்ளுதல் மரபு) எனப்பட்டது. அவற்றை வழங்குபவர் கொடையாளர் எனப்பட்டனர். 'கொடுப்போர் கொடுப்பவை உளங் கொளல்' எனக் கற்பதைச் சுட்டினார் நன்னூலார். குறிக்கோளையும், அதனைத் தவறவிடாது கடைப்பிடித் தலையும் உயிர்ப்பாகக் கொண்டு வாழ்ந்த பாணர் இயல்பை அறிந்த சங்கச் சான்றோர் அவர்களைக் 'கோள்வல் பாணர்' என்றனர்.

" கோள்வல் பாண்மகன்"

என்பது பெரும்பாணாற்றுப்படை (284).

தமிழின் துறைகள் பல; அகத்துறை, புறத்துறை என்பவை அவை. அவற்றுள்ளும் உட்டுறைகள் பல; தமிழின் துறைகளுள் ஒன்றாம் யாழின் துறை, 'நரம்பின் மறை' நரம்பின் துறை' எனப்படும். அதன் துறைகளும் பல. ஆகலின், யாழ் பண்டையோரால், ''துறையமை நல்லியாழ்'' எனப்படுவதாயிற்று. யாழின் துறை என்பவை எவை? யாழோர் வகுத்துக் கொண்டவைதாமே! 'தமிழின் துறைவாய் நுழைந்தனையோ?' என்னும் திருக்கோவை யார் வினா, யாழின் துறையையும் உட்கொண்டது தானே! அதனால், பாணரைச் சுட்டும் சான்றோர், 'துறை பல முற்றிய பாணர்' என்றனர்.

துறைபல முற்றுதலுக்கு ஏந்துகள் வேண்டுமே! அவ்வேந்துகளுள் தலையாயது அடிப்படைத் தேவைகளாம் ஊண் உடை முதலியவை தட்டின்றி வாய்த்தலாம். ''இடும்பைக்கும் இடும்பை'' ஆக்கவல்ல ஊக்க முடை யாரையும் ''பசிப்பிணி என்னும் பாவி'' வருத்தாமல் விடமாட்டானே! அதனால் துறைபல முற்றிய பாணர் பசி முதலிய துன்பம் இலராய் இருந்தமையை எண்ணிய சான்றோர்,

'' துறைபல முற்றிய பைதீர் பாணர்''

என்றனர். (மலைபடு 40).

மணிமுற்றிய நெற்கதிர் தலைதாழ்வது போலத் துறை முற்றிய பாணர் பண்பு நலங்களிலும் சிறந்து விளங்கினர். நல்லதையே எண்ணி, அதனையும் பிறர் நயந்து விரும்பும் வகையில் இசைக்க வல்லவராய் இயன்றனர். அதனால்,

'' நன்மை நிறைந்த நயவரு பாணன்''

எனச் சான்றோர் பாராட்டினர் (புறம். 308).

இவ்வாறு பல்வகையானும் ஓங்கிய பாணர், குடிப் பிறப்பு வழியால் பெற்ற பழம்புகழும், தம் தகுதியால்

தேடிக் கொண்ட புதுப்புகழும் உடையவராய் விளங்கினர். அதனால்,

" தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன் "

எனச் சான்றோர் பாடும் புகழுக்கும் இலக்காயினர் (அகம். 352).

முதுமை இருவகையான் ஏற்படும். ஒன்று அகவை மிகுதலால் ஏற்படுவது; மற்றொன்று அறிவு மிகுவதால் ஏற்படுவது. அறிவுமீக் கூர்ந்தவர் 'முதுக்கு உறைஞர்' எனப்படுவர். மகளிராயின் 'முதுக்கு உறைவி' எனப் படுவர். இயல்பாக வரும் முதுமையினும் தேர்ச்சிவகை யால் இளமையிலேயே வரும் முதுமை பல்லோர் பாராட் டுக்கும் உரியதாம். அத்தகு பாராட்டே 'சிறுப்பெரியார்' என நம்மாழ்வாரைச் சிறப்பிக்கச் செய்தது. 'சிறுமுதுக் குறைவி எனக் கண்ணகியாரைச் சிறப்பிக்கச் செய்தது. பாடுதுறை இளமையிலேயே சிறப்பாகக் கைவரப்பெற்ற பாணன் ஒருவன் "முதுவாய்ப்பாணன்" எனச் சான்றோ ரால் சொல்லப்பட்டான் (புறம். 319) "முதுவாய் இரவலன்" எனவும் பட்டான் (பதிற். 66).

கற்ற கல்விக்கும் பெற்ற தேர்ச்சிக்கும் உரிய மதிப்பும் வாய்ப்பும் இல்லாக்கால் - கிடைத்தல் அரிதாங்கால் - தன் மீதும், தான் கற்ற கல்வி மீதும், தான் எடுத்துக்கொண்ட முயற்சி மீதும் தனக்கே வெறுப்பு உண்டாதல் இயற்கை. அவ்வியற்கையைப் பாணன் அடைய வேண்டிய சூழல் அமையாமலும் இல்லை. "இருவே(று) உலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு" என்று திருவள்ளுவர் இதனால் தானே கூறினார். அதனால் தான் கற்ற கல்வியை வெறுத்துப் பேசுகின்ற பாணனைப் 'புலவுவாய்ப் பாணன்' என்றனர் சங்கச் சான்றோர் (பெரும். 22).

இனிப் 'புலவுவாய்' என்பதற்குப் புலால் நாறும் வாய் எனப்பொருள் கொள்ளக்கூடாதோ எனின், கொள்ளக்

கூடாது என்றே ''புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாணன்'' என்றாராம்!

பல்கால் பட்டினி கிடந்தும் நோய் நொடியுற்றும் தன் பொலிவழிந்து காட்சி தரும் பாணன் புலால் உண்டு நாறும் வாயையுடையவனாய் இருந்தான் எனல் பொருந்தாதாம். அன்றியும் அவன் சுற்றத்தாரும் பசிக்கு ஆற்றாராய் அரற்றிச் சூழவரும் நிலையும், 'புலால் பொருளுக்கு' இடந் தரவில்லையாம். என்னைப் பேணிக் கொள்ளவும் முடியாமல் என்னைச் சார்ந்த சுற்றத்தையும் பேணுதற்கு முடியாமல் வாட்டும் இப்பாட்டுத்திறம் பெற்ற பய னென்னை என்ற வெறுப்பு எழுதலே இயற்கையாம். இதனால்தான் ''கற்ற கல்வியை வெறுத்துரைக்கும் பாணன்'' என உரைகண்டார் நச்சினார்க்கினியர்.

சங்கச்சான்றோர் வழங்கிய தொடர்களின் வழியே பாணன் திறம் கண்டோம்; பாடினியர் திறம் காண்போம்.

## 9. பாடினி திறம்

அகவன் மகள், ஆடன் மகள், கிணை மகள், கூத்தியர், பாடினி, பாட்டி, பாணிச்சி, மதங்கி, விறலி எனப்படு வாரும் இப்பெயர்களின் திரிபாக வழங்கப்படுவாரும் பாணர் குடிப் பெண்டிராவர். அழைத்துப் பாடல், ஆடல், கிணை கொட்டல், தாளமிடல், வேடமிட்டாடல், மெய்ப்பாடு தோன்ற நடம்பிடித்தல் முதலிய செயல் வகைகளால் இவர்க்குப் பெயர்கள் பலவாயினும் குடிவழியால் ஒரு வகையரே.

பாணன் என்னும் ஆண்பாலொடு பெரிதும் இடம் பெறும் பெண்பாற் பெயர் பாடினி என்பதே; பாட்டியர் என்பதும் அரிதாக வழங்குகின்றது. விறலி என்பதும் பாணரொடு இணைத்து வரும் பெயரே; கூத்தரொடு இணைந்து வருவதும் உண்டு. அக்கூத்தர் பாணரே.

பாடினியின் திறம் சங்கச் சான்றோர் வாக்காலேயே பெரிதுற அறியக் கிடக்கின்றது. 'பாணாற்றுப் படை' களில் பாணனைப் பற்றிய வண்ணனைச் செய்தியினும் பாடினியைப் பற்றிய செய்திகளே மிக விரிவுடையதாம். அவற்றை அப்பகுதியில் காணலாம்.

பாடினி மெல்லியள்; மெல்லியலாகப் பிறந்து அவ்வியல்பிலேயே வளர்ந்து, மெல்லியல் கலைக்கே தன்னை ஆட்படுத்திக் கொண்டு, மெல்லியல் கலைக்கே தன்னை ஆளாக்கிக் கொண்ட பாணனுக்குக் காதலால் தன்னை

ஆளாக்கிக் கொண்டவள், மெல்லியளாக அல்லாமல் எப்படி இருக்கமுடியும்? அதனால், அவளைச் சுட்டும் சங்கச் சான்றோர் 'மெல்லியல் விறலி' என்றனர் (புறம். 133).

பாடினி, தன் பஞ்சன்ன அடியை எடுத்து வைக்கிறாள்; அசை நடை நடக்கிறாள்; அந் நடையில் விரைதல் இல்லை; அதிர்தல் இல்லை; அழகின்மை இல்லை; "நடை என்றால் இப்படி இருக்கவேண்டும்"; "இப்படி நடப்பதற் கென்று, இந்த மென்மை இயற்கை வாகாய் அமைந்திருக்க வேண்டும்" என்று நயந்துரைக்கத் தக்க நடையாய் நடக்கிறாள். அதனைக் கொடைப் பொருளாக வாய்க்கப் பெற்ற பாணனுக்குமே, அம்மெல்லியல் நடை கைவரப் பெற்று விடுகின்றது. பிறந்த இடத்து மெல்லியல், புகுந்த இடத்து மெல்லியற் கொடையாட்டியாக விளங்க லாகின்றாள். இதனை நயந்து கண்ட சான்றோர்,

"மென்மெல இயலி" என்கிறார் (புறம். 70). பாணனே மென்மெல இயலுமாறு செய்து வைக்கின்ற மெல்லியலி என்பது எத்தகைய இயன்மை!

மெல்லியல் விறலியின் 'பைப்பய' நடையைப் பசுமையாகப் பார்த்து மகிழ்ந்த சான்றோர் ஒருவர், அவள் ஆடற்களத்தில் ஆடுகின்ற நிலையில் அருமையாக அடியெடுத்து வைத்தும் மெய்ப்பாடுகளையும் காட்டியும், மின்னென அசைந்தும், இயலுவதை எண்ணிப் பார்க்கிறார். அவள் கூந்தலும் இடையும் அடியும் ஆட்டமும் உடையும் எல்லாம் அவளை மயிலாகக் காட்டுகின்றன! தோற்றத்தைக் காணத் தோகை மயிலெனத் தோன்றினாலும், அஃதாண் மயிலன்றோ? அதனிடம் மெல்லியல் உண்டேனும் பாலியல் ஆணியல் அன்றோ! அதனால் அவ்வாறு கூற விரும் பாராய்ப்,

"பெடைமயில் உருவிற் பெருந்தகு பாடினி"

என்றார் (பொருநர். 47).

பாடினி தொலைவில் வருகிறாள்; வரும்போதே கூந்தலில் இருந்து மணம் வருகிறது; கடந்தும் போய் விட்டாள்; எனினும் மணம் அவள் நடந்த வழியில் தவழ்கிறது! தனக்குள்ள மணத்தைத் தன்னை வைத்த இடத்தெல்லாம் பலநாள்களுக்கு மணக்க வைக்கும் பாதிரிப் பூவின் மணம் பாடினி கூந்தலில் இருந்து மணக்கிறது. பாதிரிப் பூ வைத்த கலத்தில் நீர் விட்டால் நீரும் பாதிரி மணம் பெற்றுவிடும் நறுமையை உடையது அது. அதனை நினைவில் கொண்டு வந்த சான்றோர் பாடினியைப்

" பாதிரி கமழும் ஓதி" —(புறம். 70)

என்றார். ஓதியாவது கூந்தல்.

கூந்தல் மணமிக்கதாக மட்டுமா உள்ளது? எவ்வளவு தழைத்து நீண்டு தாழ்கின்றது! கொடியிடையைக் கடந்து அடிதாழ்ந்து கிடப்பதாக அல்லவோ உள்ளது. அதனால், "விரையொலி கூந்தல்" என்றார் (புறம். 109). விரையாவது மணம்; ஒலித்தலாவது தழைத்தல்.

தழைத்த கூந்தல் மென்மெல இயலும் காற்றில் தவழ்கின்றது; மென்மெல இயலும் நடையும் தவழ்தற்குத் துணையாக நிற்கின்றது. அதனால்,

" துயலுங் கோதைத்; துளங்கியல் விறலி" (பதிற். 49)

என்றார் சான்றோர்.

கூந்தல் அழகானது; அதன் அசைவு அதனினும் அழகானது; அதற்கு மேலும் அழகு சேர்க்கின்றது நெற்றி. நெற்றியின் அமைப்பும் அழகும் ஒளியும் ஒன்றில் ஒன்று சிறக்கின்றன. அதனால், "ஒண்ணுதல் விறலி" (புறம். 32),, வாணுதல் விறலி (புறம். 89, 105) என்றனர்.

நெற்றிக்குத் தனிப் பேரழகை ஊட்டுகின்றன விறலியின் விழிகள்! அசைந்தும் உருண்டும் பிறழ்ந்தும் கடையோடியும்

எழுந்தும் குவிந்தும் சுருங்கியும் விரிந்தும் கோலங் காட்டிக் கோலங் காட்டிக் கோலமே வடிவாகிய எழில் விழிகள் அல்லவோ அவை! அதனால், மெல்லியல் மானின் மேதக்க மருட்சி நோக்கைத் தன் நோக்காகக் கொண்டவள் இவ் விறலி என ஒரு சான்றோர் எண்ணினார்.

"மடமான் நோக்கின் வாணுதல் விறலி"

என்றார் (சிறுபாண். 31). ஒளியுடைய கண்ணா? மையுண்ட கண்ணா? கண்டாரை உண்ணும் கண்ணா? மூன்றுமா? "உண்கட் கிணைமகள்" என்கிறார் சான்றோர் (புறம். 111).

நோக்கு மட்டுமா இனிமை? வாக்கு எத்தகையது? வாக்கின் இடமாம் வாய் எத்தகையது?

"இன்னகை விறலி" — (புறம். 70)

"அம்சொற் பாண்மகள்" — (அகம். 126)

என்கின்றனர் சான்றோர்.

கழுத்திலே காதிலே கையிலே அணிகலன்கள் பூண்டுள்ளாள் பாடினி. அவை அழகியவை; தக்கவை; எவர் கண்ணையும் மனத்தையும் உறுத்தாதவை. ஆதலால், அவை "மாணிழை" என்று பாராட்டப் படுகின்றன (புறம். 141).

'வளைக்கை' விறலி (புறம். 135, 140) எனப்படும் அவள் கையில் பல வளையல்களா உள்ளன? இல்லை! அவள் சில வளையல்களே அணிந்துள்ளாள். ஆகலின், அவள் "சில்வளை விறலி" (புறம். 60, 64, 103; பதிற். 40, 57, 78) எனப்பட்டாள். சில்வளையணிதலே தனிப் பேரழகு என்பதை இப்பாடல்களின் பன்மையே சொல்லுமோ?

வயிற்றுக்கு வனப்பூட்டும் கொப்பூழ்; அசை நடைக்கு அடிப்படையாம் கொடியிடை! "அவ்வாங்குந்தி" (அகம். 126) "கொடி மருங்குல் விறலி" (பதிற். 49) என்று சொல்லப்படுகின்றன.

பாடினி பாடல் வல்லாள்; ஆடலும் வல்லாள். அவள் கருவியிசையும் பாட வல்லாள்; வாய்ப்பாட்டும் பாட வல்லாள்; புல்வர் இயற்றித் தந்த பாடலைப் பாடுதல் மட்டுமன்றிப், பாணனொடு இசைந்து பாடுதலும் அன்றித் தனித்துப் பாடவும் வல்லாள். புதியது புனைந்து பாடவும் வல்லாள் என்பவை விளங்கச் சான்றோர் குறிப்புகள் உள.

"பாடுவல் விறலி" —(புறம். 280)

"மறம் பாடிய பாடினி" —(புறம். 11)

"பாடினி பாடும் வஞ்சிக்கு" —(புறம். 15)

என்பவற்றைக் காண்க.

"ஆடல் பாடல் அழகு என்ற மூன்றின்" ஒன்றும் குறை படாதவள் மாதவி என்று அடிகளார் சுட்டுவது பாடினிக்குப் பொருந்தும் இலக்கணத்ததாம்.

# 10. பாணர் வறுமை

பொருள்தனைப் போற்றி வாழ்தல் அறியாத பாணர் நிலையை முன்னர் அறிந்துள்ளோம். அவர்கள் சுற்றத்தோடு பல இடங்களுக்கும் சென்றனர் என்பதையும் அறிந்துள்ளோம். 'சுற்றந் தழால்' என்பது செல்வர்கள் செய்தக்க செந்தண்மைக் கடன் என்பதைத் திருக்குறள் செவ்விதிற் றெரிவிக்கும். அச்சுற்றந்தழால் இலக்கணத் திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் பாணர் எனின் மிகத் தக்கதேயாம்.

பாணர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றதையே சங்கச் சான்றோர் சாற்றுகின்றனர். தொல்பழங் கலைத் துறைகள் பெரும்பாலும் உருமாறியும் மறைந்தும் போய இந்நாளிலும் பாவைக் கூத்து, கழைக் கூத்து, குடமாடல் (கரகாட்டம்), வளைய ஆட்டம் (Circus), நாடகம் என நடாத்துவார் குழுவாகச் செல்லும் வழக்கம் கண்கூடாக இருப்பதை அறிக.

பாணர் கூட்டம் பெருங்கூட்டம் ஆகலின் 'இருங்கிளை' எனப்படுகிறது (மதுரைக். 750). இருமையாவது பெருமை. பெரிதிற் பெரிது அக்கூட்டம் என்பதை 'இரும்பேர் ஒக்கல்' என்கிறது ஒரு புறப்பாடல் (60). ஒக்கலாவது சுற்றம்.

என்ன வாய்க்குமோ, எங்கே செல்வேமோ என்று மயங்குகின்ற பாணர் கூட்டத்தைக் 'காரென் ஒக்கல்' என்கிறது மற்றொரு புறப்பாடல் (141). காரென் ஒக்கல்

என்பதற்குப் 'புல்லென்ற சுற்றம்' என்றார் பழைய உரையாசிரியர். வறுமையால் வாடி மேனியும் முகமும் கறுத்துத் தோன்றுதலால் 'காரென் ஒக்கல்' என வேண்டிற்று என்றார் புது விளக்கம் கண்ட ஔவை.

பாணர் சுற்றம் கல்லென் சுற்றம் எனப் பெரும்பாண் பேசுகின்றது (21). கல்லெனலாவது ஒலித்தல். இவண் அழுகை ஒலியுடைய சுற்றத்தைச் சுட்டியது. இனிப் பைதற் சுற்றம் என்றும் பாணர் சுற்றம் சொல்லப்படும் (புறம். 212). பசியால் வாடியிருக்கும் சுற்றம் என்பது இதன் பொருளாம்.

இனிக் 'கடும்பு' என்பதும் சுற்றம் என்னும் பொருள் தரும் சொல்லேயாம். பாணர் சுற்றத்தின் பசியும் துயரும், 'கடும்பின் கடும்பசி' எனவும் (புறம். 68), 'கடும்பினது இடும்பை' எனவும் (புறம். 173) கூறப்படுகின்றன.

பாணர் சுற்றத்தையும் அதன் வறுமையையும் இவ்வாறு சுட்டிய சான்றோர் அச்சுற்றத்தைப் புரத்தலைத் தன் தலைக் கடனாகக் கொண்ட பாணன் வறுமைப்பாட்டைப் பலபடப் பாடாமல் இருப்பரோ?

கையிலே யாழ்; மெய்யிலே பசி; இடையிலே மறைக்கும் அளவுக்கு மறைக்க அமைந்த உடை; அதுவும் தன்னிழை யூடு வேற்றிழை நுழைந்து வேர்வையால் நனைந்த கந்தை. இஃது ஆலத்தூர் கிழார் பாட்டு (புறம். 69).

"கையது கடனிறை யாழே; மெய்யது
புரவலர் இன்மையிற் பசியே; அரையது
வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்:
ஓம்பி யுடுத்த உயவற் பாண"

இன்னொரு பாணனும் கந்தையுடையே கட்டியுள்ளான்; அவன் அகவையால் மூத்து அலைக் கழிவும்

உடையவனாகத் திரிகிறான். அவனைப் பாடுகிறார் மருதன் இளநாகனார் (138).

"சிதாஅர் உடுக்கை முதாஅரிப் பாண"

பரிசு பெற்று வரும் பாணன் ஒருவனைக் காண்கிறான் பரிசு பெறப்போகும் பாணன். அவனுக்குள் ஒரே வியப்பு. என் வறுமை என்ன? இவன் வளமை என்ன? எங்குப் பெற்றான் இவ்வளமையை? எவன் தந்தான் இவனுக்கு? நாமும் அவனைக் கண்டாக வேண்டுமே! எப்படிப் போவது? எனப் பலப் பல வினாக்களைத் தன்னுள் எழுப்பித் தயங்குகின்றான். இதனைக் கண்ட பரிசு பெற்று வரும் பாணன் அவனை,

"வினவல் ஆனா முதுவாய் இரவல"

என்கிறான். இரவலன் முதுமையும் சொல்லின் வாய்மையும் விளங்க முதுவாய் இரவலனாகச் சொல்லப்படுகிறான். அவன் உணர்வோர் யாரென் இடும்பை தீர்க்கெனக் கிளக்கும் பாணனாகவும் தோன்றுகிறான் (புறம் 173).

இன்னொரு பாணன் எலும்பும் தோலுமாகத் தோன்றுகிறான். அவன் மட்டுமா அப்படித் தோன்றுகிறான்? அவன் சுற்றம் முழுவதுமே அப்படித் தோன்றுகிறது. உடும்பின் தோலை உரித்துவிட்டால் அதன் எலும்பு வெளிப்பட்டுத் தோன்றுதல் போல அக்கூட்டம் எலும்புக் கூட்டுக் காட்சி வழங்குகின்றது. அந்நிலையிலும் பசி தீர்க்கும் உள்ள முடையாரைக் காணாமல் உலமருகின்றது. பலரிடம் சொன்னால் சிலராவது கேட்டு உதவுவார்களே என ஏங்குகிறது. தான் கற்ற கலையிருந்தவாறும்' அதனால், தன் வாழ்வைக் காக்க முடியாமல் வறுமை யிருந்தவாறும் எண்ணித் தன் கலைமேலேயே பல்கால் நோகின்ற வெறுப்பும் உண்டாயிற்று. இத்தகு பாணன் கூட்டத்தைப் படமாக்கிக் காட்டுகிறார் கோவூர் கிழார் (புறம். 68).

"உடும்புரித் தன்ன என்பெழு மருங்கில்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது
சில்செவித் தாகிய கேள்வி நொந்துகொந்
தீங்கெவன் செய்தியோ பாண"

கொள்கையாளன் உள்ளம் கிளர்ச்சியோடிருக்கும் ஒய்தல் சாய்தல் இன்றி உந்துகோள் நிலையில் அமைந்திருக்கும். அந்நிலைப்பட்டவன் தான் பாணனும். எனினும், அவனை வாட்டும் வறுமையால் சோர்ந்து கிடக்கிறான். அவன் உடலைப் பார்ககப் பூட்கை இல்லோன் யாக்கை போலத் தோற்றமளிக்கின்றது (புறம். 69). பூட்கையாவது கடைப்பிடி அல்லது மேற்கோள்.

நல்லோன் ஒருவன் வறுமையடைகிறான்! அதனால், அவனுக்குப் பெருங்கேடு இல்லை; அவனைச் சார்ந்து நிற்பவர்க்குக கேடு; அவனைச் சார்ந்த தொண்டுக்குக் கேடு; அவன் செய்யவேண்டிய செயல்களெல்லாம் படுத்து விடுகின்றனவே; இவை குமுகாயக் கேடன்றோ! (திருக் குறள். 219) பாணர் உற்ற வறுமை இதனையே நினைக்க வைக்கின்றது. வளமான பழமரம் வாடிப்போனால் அம் மரத்துக்கு வந்ததென்ன? அம்மரத்துப் பயன் கொள் வார்க்கு வந்ததன்றோ வளக்குறை?

# 11. பாணர் செலவு

புரவலரைத் தேடிப் பாணர் செல்லும் செலவு இவண் அறியப் பெறுகின்றதாம். செலவு என்பது செல்லுதல் பொருளது. அதனைப் பெருவழக்காக்கியவர் தமிழ்த் தென்றல் திரு. வி. க. 'செங்கோன் தரைச் செலவு' என்பது அழிந்துபட்ட பழையதோர் நூல்.

பாணர் சொகினம் (சகுனம்) பார்த்துப் புறப்பட்டனர் என்னும் குறிப்பு அறியக் கிடக்கின்றது. போருக்குச் செல்லும் வீரர்கள் உருவிலி (அசரீரி) ஒலிகேட்டல் 'விரிச்சி' எனப்படும். விரிச்சி கேட்டு வெட்சிப் போர் முதலியவற்றுக்குப் புறப்படும் மறவர் செய்கையைப் பாணர் அறியாதவர் அன்றே! ஆகலின், அவ்வழக்கம் இவர்க்கும் உரியதாயிற்று எனலாம்.

பாணன் ஒருவன் புரவலன் ஒருவனை நாடிப் புறப்படுகின்றான். அவன் வரும் வழியில் ஒரு பெண்மகள் தன் கூந்தலை வாரிக் கொண்டுள்ளாள். அக்காட்சி, தான் காணச் செல்லும் தலைவனைக் காண முடியாமையை அறிவிக்கும் தடையோ என ஐயுறுகின்றான். தன்னை வாட்டும் பசியை நினைந்து கசிவுண்டாகின்றது. கடவுளே! எண்ணிய எண்ணம் எவ்வகையாலேனும் தடைபடாமல் நீதான் அருளவேண்டும் என வாழ்த்துகிறான். அப் பாணனை விளித்துப் பாடுகின்றார் வடமோதங்கிழார் (புறம். 260).

பாணன் புறத்தே கண்ட சொகினக் காட்சி இது. அவன் அகத்தே கண்ட காட்சி ஒன்றும் அவனை உறுத்தியது. தேர்ச்சி மிக்க அவன் இன்னிசை சிறக்கவேண்டும் என்று யாழை மீட்டினான்; அவ்வியாழோ ஓசையை உள்வாங்கி இரங்கற் பண்ணை எழுப்புமாறே கைபோய் விழுகின்றது. எண்ணியது நிறைவேறாதோ என்னும் ஏக்கமே உள்ளுள் உறுகின்றது! வீட்டிலே, புறப்படுங்கால் தானுணர்ந்த இக் காட்சியும், துணிந்து புறப்பட்டு வெளியேறிய பின்னர் வீதியிலே கூந்தல் வாரக் கண்ட காட்சியும் எண்ணி மறுகும் பாணனை எண்ணி விளிக்கிறார் புலவர்.

> " வளரத் தொடினும் வெளவுபு திரிந்து
> விளரி யுறுதரும் தீந்தொடை நினையாத்
> தளரும் நெஞ்சம் தலைஇ மனையோள்
> உளரும் கூந்தல் நோக்கிக் களர
> கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்
> பசிபடு மருங்குலை கசிபுகை தொழாஅக்
> காணலென் கொல்லென வினவினைவருஉம்
> பாண கேண்மதி"

"என் தலைவன் மார்பில் உண்டாகிய புண்களும் பெரிய; நடுப்பகற் பொழுதிலே வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்றன; பெரிய மனைக்கண்ணே ஏற்றிவைத்த விளக்கும் நின்று எரியாமல் அணைகின்றது; உறங்காத என் கண்ணிலும் உறக்கம் உண்டாகின்றது; அச்சந்தரும் கூகையும் குரலெடுத் தொலிக்கின்றது. நெல்லும் நீரும் தெளித்து நிமித்தம் கேட்கும் முதுமகளின் சொல்லும் முழுதாகத் தோன்ற வில்லை; துடியனே, பாணனே, விறலியே உங்களுக்கு என்னாமோ? நீங்கள் இரங்கத்தக்கவர்களாக உள்ளீர்கள்; இனி இங்கிருந்து நீங்கள் வாழ்தல் என்பது அருமைப் பாடுடையதாம்" என்னும் கருத்துகளைத் தொகுத்துச் சொல்கிறார் மாறோக்கத்து நப்பசலையார் (280).

" என்னை மார்பிற் புண்ணும் வெய்ய;
நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்;
நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா;
துஞ்சாக் கண்ணே, துயிலும் வேட்கும்;
அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்;
நெல்நீர் எறிந்து விரிச்சி யோர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா;
துடிய பாண பாடுவல் விறலி
என்னா குவிர்கொல்; அளியிர்; நுமக்கும்
இவணுறை வாழ்க்கையோ அரிதே"

இப்பாடலில் பாணர் கூட்டத்துடன் துடியரும் விறலியரும் சொல்லப்படுதல் அறியத் தக்கதாம்.

வல்வில் ஓரி என்பானின் வில்லாற்றலை நேரில் கண்டவன்பரணர் வியப்புற்றார். விறலியை விளித்துப் பாடினார்; சில கட்டளைகளைக் கலை வல்லார்களுக்கு இட்டார்.

"விறலியே, யான் ஓர் வண்ணம் பாடுவேன்; நீங்கள் முழவை முழங்கச் செய்யுங்கள்; யாழிலே பண்ணிசைத்துப் பாடுங்கள்; களிற்றின் கை போன்ற பெருவங்கியத்தை இசையுங்கள்; எல்லரியாம் சல்லியை வாசியுங்கள்; ஆகுளி எனப்படும் சிறுபறையை அறையுங்கள்; பதலையில் ஒரு முகத்தை மெல்லெனக் கொட்டுங்கள்" என்கிறார். இதனால், விறலியுடன் இருந்த கூட்டம் இனிது புலப்படும்.

மதுரைக் காஞ்சியில்,

" பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென
இருங்கிளை புரக்கும்" —(749-51)

எனவரும் பகுதியாலும் பாணர் கூட்டமாகச் சென்று பரிசு பெற்ற செய்தி தெளிவாம்.

பறவைகள் பறந்து செல்லுதற்கும் பயன்கொள்ளுதற்கும் நாட்டெல்லையென ஓரெல்லை இல்லை. தமிழகத்து

வேடந்தாங்கலுக்கு உலகத்துப் பறவைகளெல்லாம் ஒரு பருவத்தில் வந்து தங்கிச் செல்லுதல் உலகறிந்த செய்தி. வானிலும் எல்லை வகுத்துக் கொண்டு வல்லாண்மை செய்யும் எல்லைப்படையுள்ள நாளிலும், பறவைக்கு நாட்டெல்லையென ஒன்றில்லை. அப்பறவையெனக் கரவிலா உள்ளம் உடைய புலமைச் செல்வர், கலைச் செல்வர் ஆகியோருக்கும் பழந்தமிழகம், நாட்டெல்லைக்குள் அடக்கிவைக்காத பெருமனத்தைக் கொண்டிருந்தது.

சோழன் நலங்கிள்ளியினிடமிருந்து உறையூர்க்குச் சென்ற இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்று வந்தான் என்று கொல்லப் புகுந்தான். அதுகால் கோவூர்கிழார் உண்மை உணர்த்திப் புலவனை உய்யச் செய்தார். அப்பாடலில் (புறம். 47) பரிசில் வாழ்வினர் நிலைமையைப் பரிவுடனும் மிகுதிறனுடனும் பகர்கிறார்:

> வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
> நெடிய என்னாது சுரம்பல கடந்து
> வடியா நாவின் வல்லாங்கு பாடிப்
> பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
> ஓம்பா துண்டு கூம்பாது வீசி
> வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
> பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே''

என்கிறார். ஆற்றுப்படை நூல்கள், பாணர் முதலியோர் வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகும் காட்சியை அப்படியே மொழிகின்றன:

> '' பழுமரம் உள்ளிய பறவையின்'' —(பொருநர். 64.)
>
> '' பழுமரம் தேரும் பறவை போல'' —(பெரும்பாண். 20)
>
> '' கனிபொழி கானம் கிளையொ டுணீஇய
> துனைபறை நிவக்கும் புள்ளினம் மான''
> —(மலைபடு. 54-55 )

காடு மலையெனக் கருதாமலும் பனிவெயில் எனப் பாராமலும் நடந்து செல்வது அருமைதான்! 'வகுந்து செல் வருத்தம்" உரைக்கும் சிலம்பு (14:17). பாணன் மெல்லிய நல்ல வழிகளைத் தேர்ந்தே விறலியை அழைத்துச் சென்றான் என்பது,

"மெல்லிய வகுந்திற் சீறடி யொதுங்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி''

என்பதால் விளங்கும் (பதிற். 57). வகுந்தாவது வழி. கல்லும் முள்ளும் கிடந்து வருத்தாத செவ்விய வழி செல்லும் இடங்களுக்கெல்லாம் வாய்க்குமா? இதோ ஒரு பாணன் வருகின்றான். அவன் வரும்வழி ஒரு தன்மைத் தன்று. ஆனினந் திரியும் வழிபல கடந்தான்; மானினம் மிகுந்த மலைபிற்பட நடந்தான்; மீனினம் நிறைந்த துறை பல நீந்தினான். காடு கடந்தும் மலை கடந்தும் புனல் கடந்தும் வர வேண்டிய வயிற்று நெருக்கடி இருக்கிறதே; என் செய்வான்? (புறம். 138).

"பகற்பொழுது நீளாமல் இரவுப் பொழுது நீளும் காலம்; விலங்குகளும் பனியால் நடுக்கமுறும் மாசிமாதம்; எனினும், பனிகொட்டும் வழியிலே நடந்து செல்லத் துணியும் பாண்மகன்; அவனுக்கு மகிழ்வு உண்டாகவும் இருளாலும் பனியாலும் ஏற்படும் வருத்தம் அகலவும் கதிரோன் தன் கதிர்களை விரித்துக் கிழக்குத் திக்கிலே தோன்றுகின்றான்'' என்று பாடுகிறார் காக்கைபாடினியார் நச்செள்ளையார் (பதிற். 59). இவற்றால் பாணர் செலவு ஒருவாறு அறியப் பெறும். ஆற்றுப்படைகள் பாணர் செலவு பற்றிய விரிநூல்களாகலின் அவற்றுக் கண்டு கொள்க.

# 12. புரவலர் உள்ளம்

"இரப்பவர் என்பெறினும் பெறுவர் கொடுப்பவர் கொடையின் சீர்" என்பது ஔவையார் மொழி. "இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே யுள" என்பது வள்ளுவர் வாக்கு.

'இவன் இல்லாதவன் என்று பழியாது கொடுத்தல்'

'யான் இல்லாதவன் என்னும் பழிச்சொல் சொல்லாது கொடுத்தல்'

'பிறிதொருவனிடத்தே போய் யான் இல்லாதவன் என்று இழிவுரைக்காவாறு கொடுத்தல்'

'யான் இல்லாதவன் என்னும் இழிவினை இரவலன் கூறுமுன்னாகவே கொடுத்தல்'

எனப் பலவகையாகப் பொருள்படும் வகைக்கெல்லாம் சான்றாகப் புரவலர்கள் உள்ளம் இருந்துள்ளமையைச் சங்கச் சான்றோர் பாடல்கள் மெய்ப்பிக்கின்றன.

இரத்தலின் கொடுமையையும் இழிவரவையும் கருமிகளையும் எண்ணி 'இரவச்சம்' பாடிய திருவள்ளுவரே 'இரவு' பாடியதும் 'ஈகை' பாடியதும் குமுகாய நலங் கருதியதேயாம். தந்நலம் விடுத்துப் பொதுநலம் நாடி உழைப்பார்க்கு எந்நாளும் பிறர் உதவுதலும் அரசின் அரவணைப்பும் கட்டாயம் வேண்டத் தக்கதேயாம். அவர்க்கு உதவுதல் பழவித்து ஊன்றி நீர்விட்டு வளர்த்து

வருவது போன்றதேயாம். அதுவே ஒருகால் 'நடுவூர்ப் பழுத்த பயன் மரமாய்' நாளும் பொழுதும் உதவும் என்பதாம்.

இரத்தல் இழிவுதான்; ஐயுறுதற்கு இல்லாத செய்தி; ஆனால், இரத்தலும் ஈவதே போன்ற பெருமையுடையதாம் பேறும் (திருக். 1054) உண்டு அன்றோ! அதனால் "இரக்க இரக்கத் தக்கவரைக் காணின்" என்றும், "கரப்பின் தம் பழியன்று அவர்பழி" என்றும் வள்ளுவர் உரைத்தார்.

உழவர் ஏர் கொண்டு உழுவர்; விளைவு காண்பர்: புலமையாளர் புலமையையே ஏராகக் கொண்டு புரவலராம் நிலத்து உழுது ஈகை விளைவு காண்பர். ஆதலால், புலவர்கள் 'சொல்லேர் உழவர்' எனப்படுவர். பாணரோ, முற்றாகக் கலைவாழ்வினர். வாய்ப்பாட்டும், கருவிப்பாட்டும், கூத்துமாக வாழ்வு நடாத்துபவர். அவர்களுக்கு விளை நிலமாக இருப்பவர் கலையார்வமிக்கவராகவும் கலை வல்லார்க்கு உதவும் உளமும் வளமும் வாய்ந்தவராகவும் உள்ள புரவலர்களே. ஆகலின், புரவலர்களைத் தேடிப் பரிசில் பெற்று வாழும் வாழ்வைக்—கேவலம்—இரந்தூண் வாழ்வாக எண்ணுதல் கூடாதாம்.

பாணர்கள் உள்ளவெலாம் உவந்தியும் வள்ளலன்ன கலைச் செல்வர்கள்; வற்றாக் கொடை வாழ்வர். அவர்க்குப் பொருட்கொடை புரிந்து புரத்தல் பொருளுடையார் கடப்பாடேயாம்.

புலமையாளர்களைக் கல்வி நிலையங்களில் கற்பிப்பாராக அமர்த்தி அரசு பொருள் வழங்குகின்றது. இசைக் கல்லூரி, நடிப்புக் கல்லூரி, ஓவியக் கல்லூரி இன்னபல கல்லூரிகளில் பயிற்றுவார்க்கு மாதச் சம்பளமும், பயில்வார்க்கு உதவித்தொகையும் அரசு வழங்குகின்றது. இக் கலைகளை வளர்க்க வேண்டும், எதிர்கால மக்களுக்குக் கொடைப்பொருளாக வழங்குதல் வேண்டும் என்னும்

நோக்கங்களால் அல்லவோ அரசு தலைப்பட்டுச் செய்கின்றது. அன்றியும், கலை வல்லார்க்கு உதவித் தொகையும், பரிசளிப்பும் பாராட்டும் பட்டமும் வழங்கவும் செய்கின்றது. இவையெல்லாம் பழங்கால வேந்தர்களையும் வள்ளல்களையும் சார்ந்திருந்தமையால், கலை வல்லார் அவர்களைத் தேடியும் திறங்காட்டியும் பரிசும் வரிசையும் பெற்றுக் கலை வளர்த்தனர் என்க.

இரத்தலும் ஈதலே போலும் என்றும் (1054) இரப்பும் ஓர் ஏர் உடைத்து என்றும் (1053) திருவள்ளுவர் போலும் அறவோர் உரைத்தமை, குமுகாய ஒப்புரவு கருதியதே என்பதை எளிதாக உணர்ந்து போற்றலாம் என்க. உழுவார்க்கு ஏர் இருப்பதுபோல், கலை வல்லார்க்கும் ஓர் 'ஏர்' உண்டு என்பது இரட்டுறலாய் உழவுத் தொழில் போலும் பழுதற்றது என்பதை விளக்குவதும் கண்டு கொள்க.

பழ மரம் நாடும் பறவை போலப் புரவலர்களை நாடிப் பரிசு பெறுவது மட்டுமன்றி, வளைத்துக் கொண்டு பொருள் வாங்கவும் பாணர் முதலியவர்க்கு உரிமை இருந்தது என்றால் அது கடப்பாடு ஆகுமேயன்றி இரவொடு சேருமோ? தலை எடுப்பொடும் வளமனைக்குள் புகுந்து தருக என்று ஆணையிட்டுக் கேட்கும் உரிமை புலமையாளர்க்கு இருந்தது என்றால் அஃதிரவு ஆகுமோ? கொடுப்போரை ஏத்துதலோடு கொடாரைப் பழிக்கவும் உரிமை பூண்டவர் கலைத் திறவோர் என்றால் அவர் பரிசில் பெறுதலில் இரவன் மாக்கள் நிலையர் ஆவரோ?

இரத்தலை இழிவென எண்ணி அவர்தம் கலைத் துறையைக் கைவிட்டிருந்தால் எத்துணைக் கலை நயங்கள் அரும்பாமலே போயிருக்கும்? இன்று கையின்கண் எட்டியுள்ள கலைகளேனும் வாய்த்திருக்கக் கூடுமோ? இடைக் காலத்தே போற்றுவார் இன்மையால் தம் கலைத்தொழில் மறந்து, பிழைப்புத் தொழிலில் சடுபட்டவர்களால் வழி

வழி வந்த கலைகளைக் காக்கவும், முறையறிந்து இயக்கவும் இயலாமல் போயதை நாம் அறிய மாட்டோமோ? எத்தனை எத்தனை கலைச் செல்வங்கள் நாட்டைவிட்டு அழிந்தேகின?

"மலரினும் மெல்லிது காமம்" என்றார் திருவள்ளுவர். "மலரினும் மெல்லியர் கலைவல்லார்" எனலுமாம். ஆகலின், கலைவல்லார் தம் மெல்லியல் உள்ளத்திற்குத் தாழ்வு வாராமையைப் பெரிதும் போற்றிக் கொள்பவர். சிறிது தாழ்வு வந்ததேனும் பெரிதாக எண்ணி மருகுபவர். இவற்றைப் புரிந்து கொண்டு போற்றிய புரவலர்கள் பல்கியிருந்த காலம் சங்கச் சான்றோர் காலம் என்பது வெள்ளிடைமலையாக விளங்குகின்றதாம்.

கொடைக்கடன் பூண்ட புரவலர்க்கு வேண்டத்தக்க தலையாய தன்மை காட்சிக்கு எளிமையாம். காட்சிக்கு எளிமையில்லாதான் பெற்ற செல்வம் 'பேய்ச் செல்வம்' என்பது அறவோர் முடிவு. காது கொடுத்துக் கேட்கவும் மாட்டாதவனா, காசு கொடுத்துக் கேட்பான்? அதனால், புரவலன் ஒருவன் தன்மையைப் பரிசுபெற்று வந்த பாணன், பரிசு பெறப்போகும் பாணனுக்குத் தன்பட்டறிவால் உரைத்தான்: "நெடுங்கடை நிற்றலும் இலையே" என்பது அது (புறம். 69).

புரவலன் முடிமன்னருள் ஒருவன் ஆகலின், கோட்டை கொத்தளம் இருக்கும்; கட்டு காவல் இருக்கும்; நேரே சென்று விடமுடியுமா? குடிசை வாழ் மக்களைக் காண்பது போல் கோவேந்தனைக் கண்டுவிட முடியுமோ? காடு மலை வழிகளில் கால்கடுக்க நடந்து வந்ததுடன் நெடுங் கடையில் நெடுங்காலம் காத்துக் கிடக்கவும் நேர்ந்து விடுமோ? என ஐயுறுவான் என்று எண்ணிப் பார்த்து,

'நெடுங்கடை நிற்றலும் இலையே'

என்றான். உன்னை இன்னார் என அறிந்ததும் தடுப்பார் இலர்; நேரே செல்லலாம் என்பதாம் (புறம். 70).

பரிசு பெற்றுவந்த பாணன் பரிசு பெறச் செல்வானுக்கு ஒரு திட்டமான செய்தியையும் உரைத்தான்.

"செல்வை யாயிற் செல்வை யாகுவை"

என்பது அது. "சென்றாலே போதும் செல்வமுடைய வனாகி விடுவாய்" என்கிறான். 'செல்வை' என்னும் சொற்கள் செல்லுதல், செல்வனாதல் என்பவற்றோடு 'செல்க' என உய்த்துத் தள்ளும் கட்டளையாகவும் அல்லவோ அமைந்து விடுகின்றது. தான் பெற்ற நலப் பாட்டை இவனும் பெறவேண்டும் என்னும் பேரெண்ண மன்றோ இவ்வாறு ஏவி வழி காட்டுகின்றது.

வள்ளலைக் காணச் சென்றால் 'இல்லை' என்னாமல் வழங்குவான். வழங்கும் செல்வத்தின் அளவு என்னவாக இருக்கும்? என எண்ணமுண்டாதல் ஏக்க மனத்திற்கு இயற்கை தானே. அதனால், நான் சுட்டிச் சொல்லும் வள்ளல் நினக்குப் "பிறன்கடை மறப்ப நல்குவன்" (புறம். 68) என்றான். இவ்வொரு வள்ளலைப் போய் நீ பார்த்து விட்டால், இன்னொருவர் வழங்குவாரோ என வாயிலைத் தேடி நிற்கவேண்டிய நிலையே இராது. அது மட்டுமன்று. முன்னர் எவரெவர் மனை வாயிலை யெல்லாமோ தேடியலைந் திருப்பாயே, அம் மனை வாயில்கள் தாமும் மறந்துபோம் வண்ணம் வழங்குவான் என்று தெளிவித்தான்.

நெடுங்கடை நிற்காமல் போகலாம்; செல்வமும் பெறலாம்; பிறன்கடை மறக்கவும் நேரலாம்; ஆனால், இப்பொழுது இல்லை; இன்னொரு முறை இவண் வா; வேண்டுவவெல்லாம் வேண்டுமாறு வழங்குவேன் என்று புரவலன் சொன்னால் என்ன செய்வது என்று எண்ணுதல் கூடாது என்று மிகவிழிப்பாக,

"மாறிவாவென மொழியலன்"

என்றான் (புறம். 138).

எத்துணை எத்துணையோ பேர்கள் தலைவனைக் காண வந்திருக்கலாம். கலைவல்லார் காத்திருக்கலாம். நாமும் அப்படி அவன் அரண்மனையே தஞ்சமாகப் பன்னாள் காத்திருக்க நேர்ந்துவிடுமோ எனப் பரிசில் வேண்டிச் செல்வான் நினைவானோ என நினைத்த பரிசில் பெற்றோன் "உனக்கு எள்ளளவும் ஐயம் என்பது வேண்டா; பாணர் வேண்டுதலை நிறைவித்த பின்னரே பிறர் பணியை நினைத்துப் பார்ப்பான் வள்ளற் பெருமான் என்பதை நினைத்துக் கொள்க" என்றான்:

"நயவர் பாணர் புன்கண் தீர்த்தபின்
மாசெல வொழிக்கும்" —சிறுபாண். 248-249.

பரிசு தரும் வள்ளல் கலந்து உரையாடுவனோ? அளவளாவி மகிழ்வனோ? என்றெல்லாம் நினையாதே. பாணரைத் தன் சுற்றமெனவே கொள்பவன், நான் கூறும் வள்ளல். அவன் நின்னோடும் நின் சுற்றத்தோடும் ஒன்றாகி உடனாகி, உயிராகி உணர்வாகி உவப்புறுவன்; தன் அரண்மனையிலேயே தன்னோடு உறையவும் செய்வன். "கலந்தளைஇய நீளிருக்கையான்" (புறம். 361) என்றான்.

பல இடத்துக் காட்சிகளை இயைத்துக் காட்டியது இது.

பாணர் முதலியோர் இவை எமக்குரியவை என எடுத்துக் கொள்வராயின் அவை எம்மைச் சேர்ந்தவை எனச் சொல்லாத தகவாளன் ஒரு புரவலன் (புறம். 135).

நீயே எம் பரிசில்; இவ்விடம் விட்டுச் செல்லேல் என ஒரு கோடு இழுத்தால் அக்கோட்டைத் தாண்டி வாராத பெருந்தகையன் ஒரு புரவலன் (புறம். 108).

பாணர் முதலியோர் யானைகளைப் பரிசிலாகப் பெற்றுக் கொண்டு போய்விட்டனர்; யானைமால்களில் காட்டு மயில்கள் கூட்டொடும் வந்து குடியிருக்கின்றன" என்பது ஒரு புரவலன் வளமனைக் காட்சி (புறம். 146).

எறும்புகள் முட்டைகளைத் தூக்கிக் கொண்டு மேட்டுக்கு ஏறுவது போலச் சோற்றுத் திரளைகளை அள்ளிக் கொண்டு சிறுவர்கள் செல்கிறார்களே; அப்'பசிப் பிணி மருத்துவன்' இல்லம் அணித்தோ சேய்த்தோ என்பதொரு காட்சி (புறம். 173).

இவனைப் பார்; இவன் மாபெரும் வீரன் தான்; இவன் மாற்றாரையெல்லாம் வெல்ல வல்லான் தான்; எனினும், இவன் தன் பெருந்தகைமையால் ஒன்றே ஒன்றை ஒழிக்கும் குறிக்கோளுடையவனாகத் திகழ்கிறான். அவ்வொழிப்பு 'பசியொழிப்பு!' 'பாண்பசிப் பகைஞன்' அவன் என்பதோர் அருட்காட்சி (புறம் 180, 212).

''பிறர் பிறரெல்லாம் உண்டி கொடுத்தனர்; உடை கொடுத்தனர்; "அணிமணி அளித்தனர்; ஊரையே கொடுக்கும் உயர் கொடையாளன் இவன்'' என்பது ஒரு வீறுமிக்க காட்சி (புறம். 302).

> '' முட்டில் பாணரும் ஆடியன் மகளிரும்
> எட்டொடு புணர்ந்த ஆயிரம் பொன் பெறுப''

எனக் கலைவல்லார் பெறுதற்குரிய பரிசிலுக்கு இலக்கணம் கண்ட சான்றோர், வாழ்வியலில் கண்டறிந்தே இவ்விலக்கணம் அமைத்தனர் என்பது இச்சான்றுகளால் புலப்படுவதே.

# 13. ஆற்றுப்படை

ஒரு நெடுஞ்சாலையில் பேருந்தில் செல்கிறோம்: எத்தனை குறியீடுகள்—எத்தனை செய்திகள்—ஆங்குள. வழிநிலைக் காட்சிகளையெல்லாம் வாய் திறந்து சொல்வது போல் சொல்லவில்லையா அவை? கைகாட்டிகள் எல்லாம் வழிகாட்டிகளாக அல்லவோ உள்ளன!

ஒரூர்க்குப் போய்வர ஒருவர் எண்ணுகிறார்; அதற்கு முன்னே போய் வந்த ஒருவரிடம் வழியும் விளக்கமும் பெறுகிறார். தங்கல் இடம், பார்க்க வேண்டிய இடம் ஆகியவற்றைக் கேட்டுக் கொள்கிறார். அறிந்தவர் இருந்தால் அவர் முகவரியையும் தவறாமல் எடுத்துக் கொள்கிறார். இவை நடைமுறைச் செய்திகள்.

வளமும் வாய்ப்பும் உடையவர்கள் உலக வலம் வருவது பொதுச் செய்தியாய் விட்டது. அவ்வாறு உலா வந்தவர்கள் தாங்கள் கண்ட நாட்டைப் பற்றிய செய்திகளைப் பிறரும் அறிந்து கொள்ளுமாறு நூலாக வரைவதும், சொற்பொழிவு செய்வதும் எவரும் அறிந்தனவே. அந் நாடுகளைப் பார்க்க விரும்புவார் பார்த்தவர்கள் கூறும் குறிப்புகளை மனத்துக் கொண்டு தம் உலாவைத் தொடங்குவதும் வழக்கமே!

உலகம் பெரியது தான்! ஆனால், உலகப்படத்தை ஒரு கையகலத் தாளுக்குள் அமைத்து வானூர்தி வழியா, கப்பல் வழியா, மலைத் தொடரா, ஆறா, நகரமா, கடலா

எல்லாவற்றையும் காட்டுகின்ற வாய்ப்பு அதனுள் அமையச் செய்து விட்டனரே!

பேருந்துத் தடமும், தொடர் வண்டித் தடமும் நிலையங்களும் அச்சிட்ட குறிப்புகள் எத்தகு வழித்துணை களாக இடம் பெற்று வருகின்றன. இவற்றை எண்ணுங்கால் பல்லாயிரம் ஆண்டுகளாக மாந்தரினம் செய்து வந்த பல்வேறு முயற்சிகளின் வெற்றிப்படிகளே இவை என்பது தெளிவாம்.

காட்டு வழியிலே பின்னே வருவார்க்கு வழிகாட்டி யாக ஊகம் புல்லை முடிந்து போட்ட செய்தியுண்டு. கற்களை அடுக்கிச் சென்ற குறிப்பு உண்டு. எழுத்துக் குறியிட்ட கல்லிருந்த சான்றும் உண்டு; கைகாட்டி மரங்கள் இருந்து உதவிய குறிப்பும் உண்டு. இவை யெல்லாம் ஆற்றுப்படை என்னும் இலக்கியத்திற்குத் தூண்டு தலாக இருந்தனவும், அவ்விலக்கியத்தால் துலங்கியன வாக அமைந்தனவுமாம்! வழியும், வழிச் செலவும், வழிச் செல்வாரும் தமிழ் நிலத்திற்கு மட்டும்தாமா உரியர்? "யவனர் தந்த வினைமாண் நன்கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" செய்தி சங்கநூற் காட்சியாக இருக்கும்போது, அதனைக் குறுகிய வட்டத்துள் அடைத்து விட முடியாதே!

தொல்காப்பியப் பழமை தமிழறிந்தார் அறிந்ததே. அதில் 'ஆற்றுப்படை' என்னும் சொல்லுண்டு. அதன் இலக்கணமும் உண்டு. ஆற்றுப்படையின் தோற்றமே, மாந்தன் உள்ளத்தால் வளர்ந்த உயர்நிலைச் சான்று எனின் மறுகருத்துச் சொல்ல இடமில்லையாம்.

வளம்பெற்று வருவார், அவ்வளம் பெற விரும்பு வார்க்கு வளம் பெறும் வழிதுறைகளைக் கூறி வழிப் படுத்துவது ஆற்றுப்படையாம். "யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்னும் பேருணர்வின் தளிர்ப்பே

யன்றோ இச்செய்கை! இதனைக் குறிப்பிடும் தொல் காப்பியனார்,

" கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

என்கிறார் (புறத். 36).

கூத்தர் பாணர் பொருநர் விறலி என நால்வரை எண்ணினார் தொல்காப்பியனாராக, பன்னிருபாட்டியலார் புலவர் என்பாரையும் உடனெண்ணி ஐவராக்கிக் கொண்டார்.

" புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கா னகத்திடை
வறுமை யுடன் வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்
ஆங்கு நீ செல்கென விடுப்பதாற் றுப்படை"

என்கிறது அது. ஆற்றுப்படை அகவற்பாவாற் கூறப்பட வேண்டுமென நவநீதப் பாட்டியலும் பிரபந்த தீபமும் சொல்லும்.

தொல்காப்பிய நூற்பாவுக்குப் பொருள், "ஆடன் மாந்தரும், பாடற்பாணரும், கருவிப் பொருநரும், விறலியும் என்னும் நாற்பாலாரும் தாம்பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆங்குச் சென்று தாம் பெற்றவற்றை யெல்லாம் பெறுமாறு கூறிய பகுதியும்" என்பதாம்.

கூத்தர் முதலிய ஐவரைச் சுட்டி ஆற்றுப்படை கூறுதல் எதற்கு? என்று வினாவுவார்க்கு மறுமொழியாகப் பெரு மழைப் புலவர் உரைப்பது வருமாறு:

"எத்திறத்து மக்களும் வறுமையுறுதல் இயல்பே எனினும் கூத்தர் முதலிய கலைவாணர் நல்கூர்தல் இயற்கைக்கு மிகவும் பொருந்தியதொரு நிகழ்ச்சியாம்; என்னை?

இயல் இசை நாடகமென்னும் இம்முத் திறக் கலைகளினும் ஈடுபட்டு இன்புறும் திருவுடையார், தாமின்புறும் இக்கலைச் செல்வங்களையே மேலும் மேலும் ஈட்டிக் கொள்ள முயல்வரன்றி, ஏனை மாந்தர் போன்று உடல் ஓம்புதற்கு இன்றியமையாத உண்டியே, உடையே, உறையுளே இன்னோரன்ன பொருளை இறப்ப ஈட்டிக் கொள்ள முயல்வாரல்லர். 'பொருளாட்சி போற்றாதார்க் கில்லை' என்பது இயற்கையாகலின், இவர் உண்டி முதலிய பொருட்பேறிலராய் நல்கூர்தல் இயற்கையொடு பொருந்தியதாயிற்று. இவர் உளத்தே நாவின் கிழத்தி உறைதலால், பூவின் கிழத்தி புலந்து புறக்கணித் தொழிவாள். நல்குரவு இவர்கட்கு என்றென்றும் ஒருவாத் தோழனேயாம். ஆயினும் காய்பசி யஞ்சும் கடையாய மாந்தர் போன்று இவர் பசியஞ்சுவாருமல்லர்.

" **செவிக்குண வில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்"**

என்னும் சீரிய திருக்குறளுக்குச் சான்றாவார் இக் கலைவாணரே. 'காவியங்களிலே கவிந்த உள்ளமுடையான் ஒருவனுக்கு அவை தரும் இன்பமே உயிர் வாழப் போதியதாம். அவன் உடலோம்புதற்கோ குளத்துநீரும், புளித்த சோறுமே சாலும்; உடல் உழைப்பை ஒரீஇ மனனுணர்ச்சியாலே வாழப் புகுந்த இக் கலைவாணன் உழைப்பான் மட்டுமே உளவாகும் உண்டி உடைகளில் நல்கூர்ந்தானாதல் இயற்கையே' என மேலை நாட்டு வித்தகன் எமர்சன் உரைத்த மொழிகள் இவர்கள் இயல்பை நன்கு விளக்கும்."

ஆசிரியர் தொல்காப்பியர் நூற்பாவின்படி 1. பரிசு பெற்று வருவார் 2. பரிசு பெறச் செல்வார் 3. வழியில் எதிரெதிராகக் காணல் 4. பரிசு பெற்று வருவார் பரிசு பெறாதார்க்குப் பரிசு பெறும் வகை சொல்லி விடுத்தல் என்னும் நாற்பகுதிகள் இடம்பெற்றுள. பெறாஅர்க்கு அறிவுறுத்துதல் என்பதில் செல்லும் வழி, கிடைக்கும் விருந்து ஆயனவற்றை அடக்கிக் கொள்ளலாம். வள்ளல் இயல்பும், வழங்கும் கொடைச் சிறப்பு இன்னவும் கூற வாய்க்கும். இந் நான்கு பகுப்புள் அடங்காத ஒன்று பரிசு பெற்று வருவாரைக் கண்ட பரிசுபெறச் செல்வான் வினாவும் வினாவாகும். இதனை ஆற்றுப் படை வளர்ச்சிப் பகுதியாகக் கொள்ளலாம். இது சங்கச் சான்றோர் நாளிலேயே ஏற்பட்டு விட்டதாம்.

இவ்வாற்றுப்படை இலக்கணம் முற்றாகத் தழுவியதும், வினாவுதல் அமைந்ததுமாம் ஆற்றுப்படையை ஒரு சான்றால் அறியலாம்:

"பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானாக்
காரென் ஒக்கற் கடும்பசி இரவல,
வென்வேல் அண்ணற் காணா ஊங்கே
நின்னினும் புல்லியேம் மன்னே; இனியே
இன்னேம் ஆயினேம் மன்னே; என்றும்
உடாஅ போராஅ ஆகுதல் அறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்

எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர்,
வறுமை நோக்கின்றவன் கைவண் மையே''

இது வையாவிக் கோப்பெரும் பேகனைப் பரணர் பாடிய பாட்டு.

திணை, பாடாண்டிணை; துறை, பாணாற்றுப்படை புலவராற்றுப் படையுமாம் என்பதும் பழங்குறிப்பு.

பொற்றாமரையும் மாலையும் அணிந்து கொண்டு தேரில் வந்து, குதிரைகளை அவிழ்த்து விட்டுப் பாலை நிலத்திடையேயும், தம் ஊரில் இருந்தாற் போல இருந்தவர் பரிசில் பெற்றுவரும் பாணர். அவர்களை யாரிரோ என வினவிய இரவலர் பரிசில் பெறச் செல்வார். இருவகை யாரும் சுரத்திடை எதிரெதிர் கண்டு கொண்டனர். பரிசில் பெற்றான் தன் முந்தை நிலையையும் பரிசில் பெற்றபின் உண்டாய வளமை நேர்வையும் அதனை அருளியோன் கொடை மாண்பையும் அவன் பெயரையும், கேளாக் காலும் தன் வண்மை இயல்பாலே, எதிர்பாரா வளத்தையும் வழங்குவான் என்னும் குறிப்பையும் உரைத்தாராதல் அறிக. இவ்வாறே பரிசு பெற்று வருவானை, ''வினவல் ஆனா முதுவாய் இரவலன்'' எனக் கோவூர் கிழார் பாடிய புறப்பாடலில் வருவதையும் அறிக (70).

பாணர் தம் பெருஞ் சுற்றஞ் சூழச் சென்றகாலையும் எம்மிடையே தங்கி விருந்துண்டு செல்க என்று வலியவந்து நிறுத்திப் புரவுக் கடன் பூண்டாரும் இருந்தனர் என்பதும், அப் புரவுக்கடனில் தலைவனும் தலைவியும் ஒருவரின்மிக்கு ஒருவர் விரும்பி ஈடுபட்டனர் என்பதும் பழம் பாடல்களால் அறியவருகின்றன.

" இரும்பே ரொக்கலொடு ஒருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண" —(புறம். 320)

" பாணரொ டொராங்கு,
வருவிருந் தயரும் விருப்பினள்; கிழவனும்
...........பெரும்பரி சிலனே" —(புறம். 326)

இன்னவை பிறவும் உள (புறம் 327, 328, 334).

பத்துப் பாட்டுள் செம்பாதி ஆற்றுப்படை; அவற்றுள்ளும் முருகாற்றுப் படை ஒன்று தவிர்ந்த எஞ்சிய நான்கும் பாணர், பொருநர், கூத்தர் சார்ந்தவை.

புறநானூறும், பதிற்றுப் பத்தும் புறப்பொருள் சார்ந்தன ஆகலின் அவற்றுள்ளும் ஆற்றுப்படைகள் உண்டு. ஆற்றுப் படைகளே யன்றிப் 'பாண்பாட்டு' என்பதொரு துறைப் பாடலும் உண்டு. அவற்றை முறையே சொல்லிச் செல்வாம்.

# 14. பொருந ராற்றுப்படை

"சோழன் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடிய பொருந ராற்றுப்படை" எனவரும் தொடர் பாட்டுடைத் தலைவன் பெயரையும் பாடியவர் பெயரையும் விளக்கும்.

இஃது இருநூற்று நாற்பத்து எட்டு அடிகளையுடையது. இவற்றுள் அகவலடி இருநூற்று இரண்டு; வஞ்சியடி நாற்பத்து ஆறு. 'அறாஅ யாணர்' எனத் தொடங்கி, 'காவிரி புரக்கும் நாடு கிழவோனே' என நிறைவுறுகின்றது.

'வேறு புல முன்னிய விரகறி பொருந'

என்னும் விளி (3) பொரு நராற்றுப்படை என்பதை நிறுவுகிறது. அவன் கோடியர் தலைவன் என்றும் (57) ஏழின் கிழவன் என்றும் (63) விளிக்கப்படுகின்றான். நெடும் பாடல் ஆகலின், இடை இடை விளியமைத்து இயலுதல் இனிய உத்தியாம்.

மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ் ஒண்ணுதல் விறலியரொடு சென்றமை அறிய வருகின்றது (109 — 110). இப்பொருநனை வழியிடைக் கண்டதை, 'ஆற்றெதிர்ப் படுதலும் நோற்றதன் பயனெனப்' பாராட்டுகின்றான் ஆற்றுப்படைப் பொருநன் (59).

பொருநர் என்பார் போர்வீரர்; இவண் அப்போர் வீரரைக் குறிக்கவில்லை. பொருதல் ஒப்பானவருடன்

போரிடல் என்னும் பொருளது. இப் பொருநர் ஒப்பான வேடமிட்டு ஆடல் பாடல் நிகழ்த்தும் பாணர் பிரிவினரைக் குறித்தது.

ஏர்க்களம் பாடுவார் போர்க்களம் பாடுவார் பரணி பாடுவார் என்னும் மூவகையாருள் இப் பொருநன் போர்க்களம் பாடுவோனாம். இப் பொருநன் தடாரிப் பறை கொட்டுபவன் என்பது 'என் கண்ணகன் தடாரி' (70) என வருதலால் அறியலாம்.

கள்வர் உளத்தையும் கனிவிக்கும் யாழ் மாண்பும் (23 — 24), ஊனும் உறைவும் வெறுத்தலால் ஓரிடத்தே இருத்தலை விரும்பாத பொருநர் இயல்பும் (119 — 121), பருகு அன்ன அருகா நோக்கமொடு உருகு பாவைபோல் என்பு குளிர் கொளீஇப் புரவலன் புரந்ததும் (77 — 83), காட்டு நிலத்தை உழுத கலப்பைக் கொழுப்போல் ஊன் தின்று பல் தேய்ந்ததும் (117 — 118), ஏழடி பின்சென்று பரிசிலொடு விடுத்த பான்மையும் (166) உளங்கவர் பான்மைய.

யாழின் வண்ணனை, விறலி வண்ணனை, திணை மயக்கம், கரிகாலன் கொடைச் சிறப்பு, போர்ச் சிறப்பு ஆகியவை விரித்துரைக்கப்படுகின்றன. யாழின் வண்ணனை 'யாழ்'ப் பகுதியில் தரப்படுகின்றது. இவண் விறலி வண்ணனையைக் காணலாம்.

பெடைமயில் உருவிற் பெருந்தகு பாடினியாகிய அவள் முடிமுதல் அடி (கேசாதிபாத) வண்ணனை (25 — 47), இருபத்து மூன்று அடிகளில் சொல்லப்படுகின்றது.

ஆற்றின் அறல் போலும் கூந்தல்;
பிறை போலும் நெற்றி;
விற் போலும் புருவம்;

அழகிய அருட் கண்;
இலவிதழ் போலும் வாய்;
இனிய சொல்;
முத்துப் போலும் பல்;
கத்தரிகையின் பிடிபோலும் குழையணிந்த காது;
நாணத்தாலே கவிழ்ந்த கழுத்து;
மூங்கில் போலும் பருத்த தோள்;
மெல்லிய மயிரை யுடைய முன்கை;
காந்தள் போலும் மெல்லிய விரல்;
கிளியின் வாய் போலும் உகிர் (நகம்);
தேமல் அணிந்த மார்பு;
நீர்ச் சுழி போலும் கொப்பூழ்;
உண்டென்று உணர்தற் கரிய இடை;
வண்டின் வரிசை போலும் மணிகள் கோக்கப்பட்ட
மேகலை அணிந்த பக்கம்;
இலக்கணம் பொருந்திய கணைக்கால்;
கணைக் காலுக் கமைந்ததாய் நாய் நாப்
போலும் சிற்றடி;
அரக்கை உருக்கிவிட்டாற் போலும் செந்நிலம்.

பிற ஆற்றுப் படைகளில் ''இவ்விவ் விடத்து, இன்னின்னார் இன்ன இன்ன தர, இனிதுண்டு செல்க'' என வழிதுறை கூறிவிடுக்கும் மரபு உண்டு. ஆயின், பொருநர் ஆற்றுப் படையில் அச் செய்திகள் இன்றிப் புரவலன் கொடை ஒன்றுமே புகலப்படுகின்றது. இதனால், இவ் வாற்றுப் படையே பிற ஆற்றுப் படைகளுக்கு முற்பட்ட தாகலாம் எனப் பொ. வே. சோமசுந்தரனார் கருதுவார். (பொருந ராற்றுப் படை, உரைப் பாயிரம்).

பொருந ராற்றுப் படை இயற்றிய ஆசிரியர் பெயர் 'முடத் தாமக் கண்ணி' என்பதும், 'ஆர்' விகுதி பெற்று,

முடத் தாமக் கண்ணியார் எனப்பட்டார் என்பதும் தொல் காப்பிய உரைகளால் புலனாகின்றன (தொல். சொல். 22; நச்; சேனா).

"வளைந்த ஒளியுள்ள தலைமாலை என்னும் பொருள் படும் 'முடத் தாமக் கண்ணி' என்னும் சொற்றொடரை இப் புலவர் தமது கவிதை ஒன்றில் கையாண்டிருக்கலாம்; அல்லது அசையும் வலிமையில்லாத ஒளியுள்ள கண்களைப் பற்றிப் பாடியிருக்கலாம்: அல்லது ஒளியுள்ள கண்களை யுடைய முடப் பெண்ணொருத்தியை இச் சொற்றொடர் குறிக்கிறது எனக் கொள்ளலாம்." என இப் பெயரைத் துரையரங்கனார் ஆய்கிறார். (சங்க கால இலக்கியச் சிறப்புப் பெயர்கள் (103 — 4).

"இப்பெயர் உறுப்பால் வந்ததென்றும், இவர் பெண் பாலார் என்றும் கூறுவாரும் உளர்" எனக் குறிக்கிறார் உ. வே. சா. (பத்துப்பாட்டு; பாடினோர் வரலாறு).

# 15. சிறுபாணாற்றுப் படை

பத்துப் பாட்டில் மூன்றாவதாக அமைந்தது சிறு பாணாற்றுப்படை. இஃது, இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரால் ஓய்மானாட்டு நல்லியக் கோடன் என்னும் வேந்தன்மேல் பாடப்பட்டதாம். இப்பாட்டு இருநூற்று அறுபத்தொன்பது அடிகளை யுடையது. அனைத்து அடிகளும் ஆசிரிய அடிகளேயாம்.

பத்துப் பாட்டுள் பாணாற்றுப் படைகள் இரண்டி ருத்தலால் அவற்றின் வேறுபாடு உணர்தற்கு அடியளவை அளவாகக் கொண்டு 'சிறு' 'பெரு' என அடைமொழிகள் வழங்கப் பெற்றனவாம். பெரும்பாணாற்றுப்படை ஐந்நூறடிகளை யுடையது என்பதும் முற்றிலும் அகவலடி யாலேயே இயல்வது என்பதும் எண்ணத் தக்கவையாம்.

திருமங்கைமன்னர் அருளிய சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பவை அடியளவால் பெயர் பெற்றதை எண்ணுதல் தகும். இனி இவ்வாற்றுப் படையில்,

"இன்குரற் சீறியாழ் இடவயிற் றழீஇ"

என்றும் (35), பெரும் பாணாற்றுப் படையில்,

"இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி"

என்றும் (462) வருவன கொண்டு முன்னது சீறியாழ்ப் பாணரையும் பின்னது பேரியாழ்ப் பாணரையும் பற்றிய

வாகலின் அப்பெயர் பெற்றது என்பர். அக் கரணியமும் பொருந்த வாய்த்த வாய்ப்பே யன்றி, நூற்பெயர்க் கரணியம் அதனால் வந்த தன்றாம். அவ்வாறு அமைவ தாயின் பாணாற்றுப்படை ஒன்றாதல் அன்றி, இருபெயர்ப் பகுப்பாதல் வேண்டுமாம்.

புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புறப் பொருள்சார் நூல்களில் பாணாற்றுப்படை யுண்டே யன்றி, சிறு பாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை என்னும் குறியீடுகள் இல்லாமை அறிதலும், அவ்வாற்றுப் படைகளில் சீறியாழ், பேரியாழ் ஆகிய இருவகை யாழ்களும் பயில வழங்கப் பெற்றிருத்தலை அறிதலும் தெளிவுறுத்தும். இனி, ஆற்றுப்படை இலக்கணம் வகுத்த ஆசிரியர் தொல் காப்பியனார் 'பாணர்' எனப் பொதுமையில் வகுத்தாரே யன்றிச் சிறுபாணர், பெரும்பாணர் எனப் பகுத்திலர் என்பதும் அறிந்து கொள்ளற் பாலதாம்.

இனி நரம்பு எண்ணிக்கை, திற எண்ணிக்கை, யாழுறுப்பு எண்ணிக்கை, செல்லிடத்துப் பெருக்க சுருக்கம் எனப் பல கூறுவதெல்லாம் பொருந்தாமை இக்குறிப்பாலே தெளிவாம்.

இச் சிறுபாணாற்றுப் படையில் விறலியின் எழில் நலம் விரித்துரைப்பதும், மூவேந்தர்களையும் அவர்களின் மூன்று தலைநகர்களையும் எடுத்துரைப்பதும், எழுவர் வள்ளல்களின் கொடைத் திறங்களை இயம்புவதும், ஓவியர் பெருமகன் நல்லியக் கோடன் கொடை நலம் நடை நலம் நவில்வதும், பாணர் செல்லும் வழிகளில் வதிவார் வரவேற்று விருந்தோம்பும் சிறப்புரைப்பதும், பாணன் பரிசு பெற்று மீளுதலாம் இன்புரைப்பதும் பயில்வார்க்குப் பல்வகைச் சுவையும் பயப்பனவாம்.

நல்லியக் கோடனைக் காண்டற்கு முன்னே பாணன் கொண்டிருந்த வறுமை நிலையைக் கூறும் பகுதி நெஞ்சை உருக்கி நீராக்குவதாம் (130-40).

"நாய் குட்டி போட்டிருக்கிறது; குட்டிகளுக்கு இன்னும் கண் திறக்க வில்லை. அக்குட்டிகள் தாயின் காம்பைப் பற்றிச் சுவைக்கின்றன; பால் வராமையால் விடாமல் சப்புகின்றன; நாயின் பாலைக் கறந்து கொண்டார் இல்லையே; பன்னாள் பசித்துக் கிடக்கும் அந்நாயின் மடியில் பால் சுரந்தால் அன்றோ குட்டிக்குக் கிட்டும்! 'கண்டதும் கழியதும்' தின்று வாழும் நாயே பசித்துக் கிடக்குமாயின் மாந்தர் பசி நிலை எத்தகைத்தாக இருக்கும்?

சமையற்களமாம் அடுக்களை எப்படி இருக்கிறது? முகட்டுக் கம்புகளும் கூரையும் வீழ்ந்து விட்டன; தூண் களைக் கறையான் அரித்துவிட்டது; கறையான் சேர்த்த புழுதியிலே காளான் பூத்திருக்கிறது; இயல்பாக மெலிந்த பாண்மகள் பசியால் மேலும் மெலிந்து குப்பையிலே முளைத்த வேளைக் கீரையை உப்பில்லாமல்—வீட்டில் உப்பு இல்லாமையால் — வேக வைக்கிறாள்; வறுமையைக் கண்டு இரங்குதல் இயற்கையாக இருக்கவும் எள்ளி நகைப் போரும் உளரன்றே! அவர்தம் காட்சிக்கு நாணித் தலை வாயிற் கதவை அடைத்துக் குடும்பத்துடன் உண்கின்றனர்."

பண மாற்று இல்லாத பண்ட மாற்றுக் காலத்தேயே இவ்வறுமையெனின் இரங்கத் தக்கதே யன்றோ!

நல்லியக்கோடன், பாணன் மொழியா அளவை யிலேயே கொடை வழங்குதலும் (235) தானே முன்னின்று ஊட்டும் பாங்கும் (245) எண்ணுதற்கு இன்பந்தரும் செய்திகளாம்.

விறலியின் வண்ணனையில் "அடி, அடிதொடர்ந்து," "குறங்கு, குறங்கென," வாழை, வாழைப்பூ வென" மீள் சொல்லடுக்கில் (15-31) தொடரும் நயம் ஓர் உயர் உத்தியாம்.

கிடங்கில் எயிற்பட்டினம் வேலூர் ஆமூர் மாவிலங்கை என்னும் ஊர்கள் அந்நாளில் சிறந்து விளங்கியமை இச் சிறுபாணாற்றுப் படையால் அறிந்து கொள்ளலாம்.

உப்பங்கழி சூழ்ந்த எயிற்பட்டினத்தில் பரதவமகளிரும் பரதவரும் அளிக்கும் விருந்தையும், முல்லை நிலத்து வேலூரின்கண் எயினமகளிர் வழங்கும் விருந்தையும், மருதஞ்சார்ந்த ஆமூரில் உழவர் தங்கை உதவும் விருந்தையும் கூறுமுகத்தான் இயற்கை வனப்புகளையும் உளநலங்களையும் விரித்துரைக்கும் அருமை பல்கால் பயிலத் தக்கதாம். இவ் விருந்தோம்பல் பொருநராற்றுப் படையில் காணப்பெறாத காட்சியாம்.

உழவர்மகளிர் பாணர் முதலியவர்களை விருந்தோம்பும் நயம் தனிச் சிறப்புடையது. உலகங் காக்கும் உழுதொழிலில் ஈடுபட்ட அம்மகளிர் தனித்தனியே தாய் நிலையில் இருந்து தம் மக்களுக்கு உண்பிப்பார் போல உண்பிக்கும் அருமையை இச்சிறுபாணாற்றுப்படை ஒளியூட்டிக் காட்டுகின்றது. அது,

'மகமுறை தடுப்ப' —(190)

என்பதாம். இதனை,

" அகமலி உவகை ஆர்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர் "

என மலைபடு கடாமும் (184 — 85)

" மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனா விருப்பிற் றானின் றூட்டி "

எனப் பெரும்பாணாற்றுப்படையும் (178 — 9) விரித்துரைக்கின்றமை எண்ணி மகிழத்தக்கவை.

கோவல கண்ணகியரை "என்மக்கள் காணிர்" என்ற கௌந்தியடிகளார் உள்ளம் விருந்தோம்பும் இம்மகளிர் மாட்டு இருத்தல் இன்பஞ் செய்வதாம்.

திறம்பட ஆடவல்ல விறலியர் நடைமெலிந்து சோர்ந்த காலை அவர்தம் மெல்லிய சிறிய அடிகளை, ஏவியதைச் செய்தல் அல்லது பிறிது அறியாத இளையர்கள் மெத்தென வருடும் காட்சியை வழங்கும் பரிவினை நோக்க, முடத் தாமக் கண்ணியாரின் உலகியல் திறம் நன்கறியவரும்.

ஆடல் பாடல் கருவியிசையாகிய கொட்டாட்டுப் பாடலை,

"முரசுமுழங்கு தானை மூவருங்கூடி
அரசவை இருந்த தோற்றம் போல"

என இவர் கூறும் உவமை அருமையாக இருப்பதுடன், உள்ளத்தால் ஒன்றுபட்டு இசைபோல் இசைந்து வாழும் அரசியல் தலைவர்களை விரும்பினார் என்னும் குறிப்பும் விளங்கும்.

## 16. பெரும்பாணாற்றுப் படை

ஆற்றுப்படை நூல்களில் அடிப்பெருக்கத்தால் பெரியது, 'மலைபடுகடாம்' எனப்படும் கூத்தராற்றுப் படையேயாம். அதன் அடியளவு 583. அதன் அளவை நோக்கப் பெரும்பாணாற்றுப்படை சிறிதே எனினும், சிறுபாணாற்றுப்படையின் அடி அளவை நோக்கப் பெரிதே யாம். ஆகலின், பெரும்பாணாற்றுப்படை எனப் பெயர் சூட்டப்பட்டது என்க. பாணாற்றுப்படை என்னும் இரண்டுள் பெரிது சிறிது பார்த்துப் பெயரீடு செய்தல் முறையாமே யன்றி அப்பெயரில்லாப் பிறிதொடு பார்க்க வேண்டுவதும் இல்லையாம்.

இப்பெரும்பாணாற்றுப்படை கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் சான்றோரால் இயற்றப் பெற்றது, அவரே பட்டினப்பாலையை இயற்றியவரும் ஆவர். அந் நூலுக்குப் பரிசாகப் பதினாறு நூறாயிரம் பொன் பெற்றார் என்னும் செய்தி, இச்சான்றோர் பெருமையை விளக்கும்.

பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன் என்பான். இப்பாட்டின் அளவு ஐந்நூறு அடி. அனைத்தும் அகவல் அடிகளே.

இவ்வாற்றுப்படையுள், யாழின் இயல்பு, இளந்திரையன் செங்கோற் சிறப்பு, உமணர் இயல்பு, எயிற்றியர் இயல்பு, கானவர் தொழில், எயினர் குடியிருப்பின் இயல்பு, மறக்குடி

மகளிர் சிறப்பு, ஆயர் ஊரின் இயல்பு, ஆய்மகள் தொழில், ஆயர் செயல், உழுவோர் செயல், மருதநில மாண்பு, வலைஞர் இருக்கை, அந்தணர் சேரி, அவர் உணவியல்பு, நீர்ப் பெயற்றென்னும் துறைமுகச் சிறப்பு, கலங்கரை விளக்கச் சிறப்பு, திருமால் பெருமை, திருவெஃகா இயல்பு. காஞ்சியின் பெருமை, இளந்திரையன் பெருமை, அவன் தரும் பரிசு, திருவேங்கட மலையின் கடவுட் பண்பு இன்னவும் பிறவும் விரித்துரைக்கப்படுகின்றன.

தொண்டைமானிடம் பரிசு பெற்று வந்த பாணன் ஒருவன் தன்னைப் பாலைவழியில் கண்ட பாணன் ஒருவனுக்குத் தொண்டைமான் வள்ளன்மையை விரித்துரைத்து அவன் உறையும் காஞ்சிமாநகர்க்குச் செல்லுமாறு ஆற்றுப் படுத்தியதாக அமைந்தது இவ்வாற்றுப்படை.

> ‘‘ பழுமரந் தேரும் பறவை போலக்
> கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
> புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண’’

எனவிளித்து (20 — 23), பெருவள னெய்தி (26), யாமவ ணின்றும் வருதும்; நீயிரும் (28), படர்குவிராயின் (37), கச்சியோனே கைவண் தோன்றல் (420) நின் பெரும் பெயர் ஏத்தி வந்தேன்; வாழிய நெடிதென (460 — 61), ஆனா விருப்பிற் றானின் றூட்டி (479), தாமரை சூட்டி (481 — 2), அன்றே விடுக்கும் (493), மலை கிழவோன் (500) என முடித்தான்.

சேய்மைக்கண்ணே நின்ற பாணரைத் தன்னை அணுக வருமாறு அழைத்துப் பாசி பற்றிய அவருடைகளை அகற்றிப் பாலாவி யன்ன துகில்களை உடுக்கச்செய்து அரசவைக்குத் தக அமைத்துக் கொள்வான் இளந்திரையன் என்னும் செய்தி ஆடைப் பொலிவும் அறிவுத் திறனொடு வேண்டத்தக்கதே என்பதைக் காட்டும். நாணத்தாலும், தம்மொடுக்கத்தாலும் பாணர் எட்டியே நிற்கும் இயல்பும், அவரைப் புரவலனாம் திரையனே அணுக அழைத்துப்

பெருமையுறுத்தும் தகைமையும் புரவாண்மை கொள்வார் கடைப்பிடியாகக் கொள்ளத் தக்க அருமை யுடையவை.

திரையன் பிறரைக் கொண்டோ ஏவலரைக் கொண்டோ உண்பிக்காமல் தானே நின்று உண்பிப்பான் என்றும், தாய்தன் பிள்ளையை உண்பிக்குமாறு உண்பிப்பான் என்றும் கூறும் செய்திகள் நெஞ்சிற் பசுமையாக நிற்கத் தக்கவை.

இலவின் காய் வெடித்து வெளிப்பட்ட பஞ்சின் வரியை அணில் வரிக்கு இவர் ஒப்பிடுவதும் (84 — 5), கொல்லர் கையில் பிடிக்கும் பற்றுக்குறட்டை நண்டின் பிளவுபட்ட காலுக்கு ஒப்பிடுவதும் (208) அருமை வாய்ந்தவை. கோரையைப் பல்லால் கிழித்து நாராக்கிப் பூத்தொடுக்கும் வழக்கத்தை இவர் எடுத்துரைப்பது (217) இந்நாளும் காணும் இயல்பொடும் பொருந்திய நிகழ்ச்சியாம். எந்த நோக்கும் இல்லாமலே புல்லை மெல்லுவாரைப் பார்த்து இதைப் புரியலாம்.

கரும்பு எந்திரம் (260), அடிபுதை அரணம் (69), பிழா (பெரும் பெட்டி) (276) இன்னவற்றை நயமாகக் கையாள்கிறார்.

கோவலர் குடியினர் நெய்விலையால் பொன் கொள்ளாமல், எருமை நல்லானும் கருநாகும் பெறூஉம் (165) என இவர் இயம்புவது உழவர் குடியிலும் ஆயர் குடியிலும் கடைப்பிடியாகப் பண்டு கொண்டிருந்த செய்திகள்.

"வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்" என இவர் சொல்வது (374) பின்வருவோர் பலர்க்கும் முன்னவர் கொடையாக விளங்குதல் ஆய்வாளர் அறிந்தது. இவ்வாறே சொல்லத்தக்க பிறவும் உள.

பாணன் மீன்பிடிப்பதற்குத் தூண்டில் கொண்டு செல்வதும், தூண்டிலில் கட்டும் இரைக்காக ஊனைக்

கொண்ட தோற்பையைத் தோளில் இட்டிருப்பதும், தப்பாமல் பிடித்தலில் வல்ல அவன் தூண்டில் இரையைக் கௌவித் தின்றுவிட்டு வாளை மீன் தப்பிவிடுவதும் ஆகிய செய்திகளை இவ்வாற்றுப்படையிலே படம் பிடித்துக் காட்டுகிறார் (283 — 288).

இக்குறிப்பால் பாணர் மீன்வேட்டமாடும் வழக்கைப் புலப்படுத்தினராதல் தெளிக. இவ்வழக்குண்மை புறத் துறையில் அரிதே சுட்டப்படினும், அகத்துறையில் பெரிதும் உரைக்கப்படும் செய்தியாதலும் எண்ணத் தக்கது.

வஞ்சியடிகளை வளமாக இடைப்பெய்து இனிமைப் படுத்த வல்ல கடியலூர் உருத்திரங் கண்ணனார், இப் பாட்டில் ஓரடி தானும் அவ்வாறு அமைத்துக் கொள்ளாமை வியப்பாக அமைகின்றது; பட்டினப்பாலையை ஒப்பிட்டுக் காண்பார் இதனைத் தெளிவர்.

# 17. கூத்தராற்றுப் படை

**பத்துப்பாட்டுள் பத்தாம் பாடலாம் மலைபடுகடாம் கூத்தராற்றுப்படை எனவும் வழங்கும். ஆற்றுப்படை நூல் களுள் அடியளவால் நெடியது கூத்தராற்றுப்படையே. இது 583 அடிகளை யுடையது.**

கூத்தராற்றுப்படை இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்பாரால், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் மேல் பாடப் பட்டதாகும்.

கலம்பெறு கண்ணுளர் ஒக்கற் றலைவ (50) என முன்னிலைப் படுத்தி வருதலால், இது கூத்தராற்றுப்படை என்பது புலப்படும். கண்ணுளர் எனப்படுபவர் கூத்தர். துறை பல முற்றிய பாணரொடு (40) விறலியர் புறஞ் சுற்ற (46) இருந்த (49) கண்ணுளர் ஒக்கல் தலைவன் (50) செய்தியே மிக விரித்துரைக்கப்படுகின்றது.

'மலைபடுகடாம்' என்பதன் பொருள் மலையின்கண் உண்டாம் ஒலி என்பது. மலையில் கேட்கும் பல்வகை ஒலி களையும் உரைத்து இறுதியில் அவ்வொலிகளின் எதிரொலி மலையில் இருந்து எழுதலையும் கூறி 'மலைபடு கடாஅம் மாதிரத் தியம்ப' என்னும் தொடரால் குறித்தலால் இத் தொடரின் பெயரே நூற்பெயராய் அமைய லாயிற்று. பாடலில் வரும் தொடரைக் கொண்டு அப்பாடற்குப்

பெயர் தருவதும், அப்பாடலைப் பாடிய புலவர்க்குப் பெயர் தருவதும் பழைய நாளில் பயில வழங்கிய வழக்குகளாகும்.

இவ்வாற்றுப்படையில் பலவகை இசைக் கருவிகளின் பெயர்கள், யாழின் வண்ணனை, பண்ணியல்பு முதலியவை பெருகிய அளவில் இடம் பெற்றிருத்தலை நோக்கக் கூத்தராற்றுப்படை என்னும் பெயரின் பொருத்தம் நன்கு விளங்கும்.

பேராந்தையின் பேடும் சேவலும் ஒன்றை ஒன்று மாறி மாறிக் கூப்பிடுதல் ஆகுளி என்னும் சிறுபறை ஒலிப்பது போன்றது எனவும் (140-141), பலாப்பழங்கள் கிளையில் தொங்குதல் கூத்தருடைய தோளில் மத்தளங்கள் தொங்குவது போன்றது எனவும் (143-144), மூங்கில் கிளைகளில் கடுவன் குரங்கு பாய்ந்து விளையாடுவது கூத்தர்களின் பிள்ளைகள் விளையாடுவது போன்றது எனவும் (236-237), ஆலமரத்தில் பல்வேறு பறவைகள் கூடி ஒலிப்பது கூத்தர்களின கூட்டியம் ஒலிப்பது போன்றது எனவும் (268-269), அருவி நீராடும் அரமகளிர் அருவி நீரைத் தட்டி ஒலியெழுப்பி நீராடுவது கூத்தர் இசைக்கருவி ஒலி போன்றது எனவும் (295-296), இடையீடு இல்லாமல் ஆடல்பாடல் நிகழும் பேரூர்த் திருவிழாப் போன்றது நன்னன் நவிரமலை எனவும் (350-351), பொழில்களாலும் குடியிருப்புகளாலும் அடையும் இன்பம் போன்றது யாழில் பண்ணுப் பெயர்த்து இசைத்தலால் ஏற்படும் இன்பம் எனவும் (450-451) இவர் கூத்தியற் செய்திகளைத் தேர்ந்தெடுத்து உவமையாக்கிக் காட்டுதல் கற்பார்க்குக் கழிபேரின்பம் பயப்பதாம்.

இன்ன செய்தியை யான் சொல்லப் புகுகிறேன் என்று சொல்லி அதனைப் பின்னே விரித்துரைத்தல் நூல் உத்தி வகையுள் ஒன்று. அதனை 'நுதலிப் புகுதல்' என்பர். கௌசிகனார் அவ்வுத்தியை அருமையாகப் போற்றிக் கொள்கிறார்.

கூத்தர் தலைவனை விளிக்கும் அவர் (50) யாம் அவணின்றும் வருதும் (53) நீயிரும், சேறிராயின் (65) ஈகை மாரியும் (72) கேளினி (94) என்று உரைத்தவற்றையே விரித்துரைக்கும் சிறப்பு ஒரு புதுநெறி காட்டுதல் என்க.

நன்னன் ஓம்பும் திறத்தை,

"தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து
பலநாள் நிற்பினும் பெறுகுவிர்"

என நயமாகக் குறிக்கிறார் கௌசிகனார் (565-566).

"அன்றை யன்ன விருப்போ டென்றும்
இரவரன் மாலையன்"

என்னும் கபிலர் வாக்கையும் (குறிஞ்சிப். 238-239).

"பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
தலை நாட் போன்ற விருப்பினன்"

என்னும் ஔவையார் வாக்கையும் (புறம். 101) எண்ணின் பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்னும் பழமொழி பொய்த்துப் போதல் விளங்கும்.

இழை போனவிடம் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய நூலாடையை நன்னன் வழங்குவதைச் சுட்டுமுகத்தான் அந்நாள் நெயவுச் சிறப்பை அருமையாய் ஆசிரியர் விளக்குகிறார். 'நோக்கு நுழைகல்லா நுண்மை' என்றும், 'பூக் கனிந்து' என்றும், 'அரவுரி யன்ன' என்றும், 'கொட்டைக் கரைய' என்றும் (பொருநர். 82-83; 155) 'காம்பு சொலித் தன்ன' என்றும் (சிறுபாண். 236), 'ஆவியன்ன' என்றும் (பெரும்பாண்-469) பிற ஆற்றுப்படைகள் துகில் நேர்த்தி கூறுதல் மனங்கொளத் தக்கவை.

கணவன் பட்ட புண்ணைக் குறமகளிர் தம் இசை மருந்தால் ஆற்றும் திறத்தை இவர் உரைப்பது உளவியல் மேம்பாடும் மருத்துவ இயல் தெளிவும் உடைமையின் சுரப்பு எனத்தக்கது. "துன்பம் நேர்கையில் யாழெடுத்து இன்பம் சேர்க்க மாட்டாயா?" எனப் பாவேந்தர் பாடு

தற்கு மூலவைப்பு மலைபடு கடாத்திலே அமைந்து கிடத்தல் நினைதோறும் இன்பம் பயப்பது!

ஒன்பது என்பதன் பழைய வடிவம் 'தொண்டு'. தொல் காப்பியத்தில் ஒன்பதும் உண்டு; தொண்டும் உண்டு; பரிபாடலில் உண்டு; மலைபடுகடாமும் அதனைக் குறிக் கின்றது (21).

மலைபடுகடாம் இயற்றிய ஆசிரியரின் ஊரைப் பற்றிய அரிய குறிப்புகளைப் பத்துப்பாட்டு ஆராய்ச்சி தெளிவிக் கின்றது (354)!

''பத்துப்பாட்டுள் இறுதிப் பாட்டுக்குரியவன் சவ்வாது மலை நாட்டையாண்ட செங்கண் மாத்துவேள் நன்னன் என்பவன். இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் என்பவர், அவன்மீது கூத்தராற்றுப்படை என்ற மலைபடு கடாத்தைப் பாடினார். கி. பி. பதின் மூன்றாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய கோப்பெருஞ் சிங்கன் வெளியிட்ட திருவண்ணாமலைக் கோயில் கல்வெட்டில் நன்னன் மீது மலைபடுகடாம் பாடப்பட்டது என்னும் செய்தி காணப்படுதல் இங்கு அறியத்தகும். 'நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்'' என்பது அக் கல்வெட்டுத் தொடராகும் (5.1.1.8.69).

மலைபடுகடாம் பாடப்பட்டு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டு களுக்குப் பின்வந்த கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் மலைபடுகடாம் என்ற நெடும்பாடலால் சிறப்புற்ற நன்னன் புகழ் பேசப்படுதல் எண்ணி மகிழ்தற்குரியது. அவன் சிறந்த கொடையாளி; பெருவீரன்; நல்லியல்புகள் மிக்கவன். அவன்மீது கூத்தராற்றுப்படையைப் பாடியவர் மதுரைக்கு ஆறுகல் தொலைவில் உள்ள இரணிய முட்டத்தைச் சேர்ந்தவர். மதுரைக்கு ஆறுகல் தொலைவில் உள்ள யானைமலைப் பகுதி, அழகர்மலைப் பகுதி இவ் விரண்டிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதி இரணியமுட்டம் என்று பெயர் பெற்றது. அப்பகுதியில் பெருங் குன்றுகளும் சிறு குன்றுகளும் இருப்பதை இன்றுங் காணலாம்.''

## 18. புறநானூற்றில் ஆற்றுப்படை

புறநானூற்றில் ஆற்றுப்படை என்னும் இப்பகுதி முப்பகுப் புடையது. (அ) பாணாற்றுப்படை, (ஆ) விறலி யாற்றுப்படை. (இ) பாண்பாட்டு.

பாண்பாட்டு ஆற்றுப்படை இன்றேனும் பாணர்களைப் பற்றியது ஆகலின் இணைப்புக்கு உரியதாக ஆயிற்று என்க.

புறநானூற்றில் வரும் ஆற்றுப்படைப் பாடல்கள் எட்டு என்பதைத் திணை துறை வகுத்தோர் காட்டியுள்ளர்; பதிப்பித்தவர்களும் உரை கண்டவர்களும் விளக்கியுள்ளர். 'கள்ளின் வாழ்த்தி' என்னும் புறப்பாடல் (316) வாகைத் திணை, மூதின் முல்லைத்துறை சார்ந்தது எனினும், பாணனை நோக்கி "நீயும் ... சென்று ... வருக" என வருதலின் பாணாற்றுப் படுத்தது தெளிவாகின்றது. இதனைத் 'தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும்' வரைந்த பேராசிரியர் வரதராசனார் குறிப்பிட்டுள்ளார். (பக். 93). ஆக, அப்பாட்டுடன் பாணாற்றுப்படைப் பாடல் ஒன்பதா கின்றது. அவை: 68, 69, 70, 138, 141, 155, 180, 181, 316 என்பன.

### அ. பாணாற்றுப் படை

68. சோழன் நலங்கிள்ளியைக் கோவூர் கிழார் பாடியது.

'பாண, நெடுந்தகை, உறந்தையோன்; பிறன்கடை மறப்ப நல்குவன்' என ஆற்றுப்படுத்துகின்றான்.

யத்தொன்பது அடிகளை யுடைய இப்பாடலில் பாணன் மெலிவையும் ஏக்கத்தையும் முதல் நான்கு அடிகளில் ஓவியமெனத் தீட்டுகிறார். பின்னை அடிகளில் வளவன் வணங்குதல், வல்லாண்மை, கொடைத்திறம், அவன் மறவர் வீறு ஆயனவற்றை விரித்துரைக்கிறார்.

69. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் பாடியது.

'பாண, பேர் ஒக்கலை, உறந்தையோன், கிள்ளிவளவற் படர்குவை யாயின் நெடுங்கடை நிற்றலும் இலை; தாமரை சூடாயாதல் அதனினும் இலை' என ஆற்றுப்படுத்து கிறார்.

பாணன் ஒம்பியுடுத்த உடையையும், பூட்கை இல் லோன் (வினை மேற்கோள் இல்லோன்) உடல் போன்ற சுற்றத்தையும் உடையன் என்பதையும் நன்கு விளக்கு கிறார். வளவன் கொடை வழங்கும் இருப்பைத் 'தேர் வீசு இருக்கை' என்பது நயமிக்கது.

70. அக்கிள்ளிவளவனைக் கோவூர் கிழார் பாடியது.

பரிசு பெறப் போகும் பாணன் பரிசு பெற்று வரும் பாணனை, 'இனிய காண்க; இவண் தணிக' என வினவ, அவன் தான் பெற்ற பெருவள முரைத்து அவனும் பெறுமாறு ஆற்றுப்படுத்ததாய் அமைகின்றது.

கொள்ளக் கொள்ளக் குறையாத உணவைத் தைத் திங்கள் தண்கயத்துக்கு ஒப்பிடுவதும், அடுதீ அல்லது சுடுதீ அறியாது என நாட்டின் அமைதி கூறுவதும், உணவையும் நீரையும் இருமருந்து என உரைப்பதும், விறலி யின் கூந்தல் மணத்திற்குப் பண்ணன் சிறுகுடிப் பாதிரி மலரின் மணத்தை ஒப்பிடுவதும், விறகு எடுக்கச் சென்றவர் ஆங்கேயே விழுநிதி பெறும் வாய்ப்பு உறுதியன்று; ஆனால், வளவனைக் காண்போர் வளம் பெறுதல் உறுதி என்பதும் சுவை மிக்கவை.

138. நாஞ்சில் வள்ளுவனை மருதனிள நாகனார் பாடியது.

''பாண, நீ பேரெண்ணலை, ஆயிழை கணவன், கிளி மரீஇய குரல் அனையன்'' என ஆற்றுப்படுத்துகிறார்.

பாணன் வந்த வழிநடைக் காட்சியை அருமையாகச் சொல்லி விளித்துப் புரவலனை, அகன்ற புனத்தின்கண் கிளி, மரப்பொந்தில் தொகுத்து வைத்த தினைக்கதிர் போன்றவன் என்பது 'வைப்பகத்தில் உள்ள பணம் போல்வது' என இந்நாள் இயல்புக்கு ஏற்பக் கொள்ளத் தக்கது.

பரிசு பெறச் செல்லும் பாணன் மீண்டு வருங்கால் அவனை இன்னான் என அடையாளங் காண எவருக்கும் இயலாது என்னுமுகத்தான் பெறவிருக்கும் பெருவளத்தை உரைத்தல் சுவைமிக்கது.

141. வையாவிக் கோப்பெரும் பேகனைப் பரணர் பாடியது.

பரிசு பெற்ற பாணனைக் கண்டு பரிசு பெறச் செல்வான் வியப்பினும் வியப்பு அடைகிறான். பரிசு பெற்றவனோ, யாம் வள்ளல் பேகனைக் காணுதற்கு முன்னே நின்னினும் வறியேமாய் இருந்தேம்; நீயும் விரைவில் வளம் எய்துவை என ஆற்றுப்படுத்துகிறான். இதில்,

'' உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன் ''

என வள்ளல் பெருமை கூறுவதும், மறுமைப் பேற்றைப் பற்றி எண்ணுவதும் இல்லானாய், வறுமை தீர்த்தல் ஒன்றையே நோக்கி அவன் கொடுக்கும் கொடைச் சிறப்பை உரைப்பதும் என்றும் நெஞ்சில் நிறுத்தத் தக்கவை.

155. கொண்கானங் கிழானை மோசி கீரனார் பாடியது.

'பாண, இலம்படு புலவர் மண்டை கிழவன் அகலம் நோக்கின' எனப் பாணனை ஆற்றுப்படுத்துகிறார் கீரனார்.

நெருஞ்சிப்பூ சுடரை எதிர்கொண்டு நோக்கும்; அது போல் பாணர்கலம் கொண்கானங்கிழானை நோக்கும் என்னும் இயற்கை யுவமை எழில் வாய்ந்தது. ஆயைப் பாடிய மோசி, இக்கிழான்மேல் பாணாற்றுப்படை பாடியது பேறுமிக்கதாம்; ஆய்மேல் அத்தகைய பற்று வைத்திருந்தமையால், 'மோசி பாடிய ஆய்' என்ற தனிப்பெருஞ் சிறப்புப் பெற்றவன் ஆய்வள்ளல்.

180. ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாடியது.

கிழான் 'பாண்பசிப் பகைஞன்' எனப் பாராட்டப் படுகிறான். கிழான் போர்க்களத்துப் பட்ட உடற்புண்கள் எல்லாம் பிறர் நலங்கருதிப் போரிட்டமையால் ஏற்பட்டனவே என்பதை,

" மருந்து கொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கை "

என்பது நயமிக்கது. இரவலன் தன்னை இரக்க, அவன் கொல்லனை இரந்து வேல் வடித்துத் தரச் சொல்லுவதும், இரவலன் உண்ணா வயிற்றைக் கொல்லனுக்குக் காட்டி வேண்டுவதும் கிழான் தனித் தன்மையை உரைப்பன.

181. வல்லார் கிழான் பண்ணனைச் சோணாட்டு முகையலூர் சிறுகருந்தும்பியார் பாடியது.

மறக்குடிப் பிறந்த மைந்தனொடு காட்டுயானைக் கன்றும் வீட்டு முற்றத்து விளாம்பழத்தை எடுத்துண்ணு

தலைச் சுட்டிப் பண்ணன் நாட்டியல் தெரிவிக்கிறார். அவன் 'பசிப்பகை' ஆதலைச் சுட்டுகிறார்.

316. மதுரைக் கள்ளிற் கடையந்தன் வெண்ணாகனார் பாடியது.

இப்பாட்டின் துறையில் பாணாற்றுப்படை என்று பண்டையோர் குறித்திலர். வல்லாண்முல்லைத் துறையாகவே கொண்டனர். பாணாற்றுப்படைக்குரிய வகையில் இப்பாடல் அமைந்திருப்பினும், பாட்டுடைத் தலைவன் இன்னான் என்னும் பெயரின்மை கொண்டே — இன்றியமையா உறுப்பாம் அஃதின்மை கொண்டே பாணாற்றுப் படையெனக் கொண்டனரில்லை என எண்ணுதல் தகும்.

"நேற்று வந்த விருந்தினரை ஓம்புவதற்காகத் தன் பழமையான வாளை ஈடு வைத்தவன்" என்று தன் புரவலன் கொடையுளத்தைக் குறித்தல் "சான்றோர், கடன் கொண்டும் செய்வர் கடன்" என்பதை மெய்ப்பிப்பதாம்.

இனிப், பாடாண் திணையைச் சாராமல் இயன்மொழி வாழ்த்துத் துறையைச் சார்ந்ததாகச் சான்றோரால் வைக்கப்பட்டதெனினும் சிறுகுடிகிழான் பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடிய "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்னும் புறப்பாடல் (173) இவண் கருதத் தக்க பெருமையுடையது. இப்பாடலில் முடிவேந்தருள் ஒருவனாம் கிள்ளிவளவன் தன்னைப்பாடும் பாணனாக்கிக் கொண்டு தன் சுற்றத்துடன் வறுமைப்படுவதாகப் பாடிப் பண்ணன் சிறுகுடிக்குச் செல்லும் வழியைப் பரிசு பெற்றுவரும் பாணர்களிடத்து வினவுவதாக அமைத்துள்ள திறம், அவ்வளவன் புலமை மாண்பைப் பறையறைந்து காட்டுவதுடன், பாண்குடியினர் பெருமைக்கு வாய்த்த பட்டயம் போலவும் திகழ்கின்றது.

பண்ணன் வழங்கிய உணவை உண்போர் ஒலியைப் பழுமரத்துப்புள்ளின ஒலிக்கும், சோற்றுக் கலங்கொண்டு செல்லும் சிறுவர் வரிசையை முட்டை கொண்டு செல்லும் எறும்பு வரிசைக்கும் உவமை காட்டி அவன் இல்லம் அணித்தோ சேய்த்தோ என வினாவுதல் கற்பவரை வயப்படுத்துபவை. 'பசிப்பிணி மருத்துவன்' என அச் சிறு குடிகிழானைப் பெருவேந்தனாம் கிள்ளி பாராட்டுதல் அரிதின் அரிய பேறாம்!

புறநானூற்றில் விறலியாற்றுப்படையாக அமைந்துள்ள பாடல்கள் நான்கு. அவை: 64, 103, 105, 133.

## ஆ. விறலியாற்றுப் படை

64. பாண்டியன் பல்(யாக) சாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெடும்பல்லியத்தனார் பாடியது.

பெருவழுதி போர்க்களம் புக்கிருந்தபோதும் ஆங்குச் சென்று பரிசுபெற விறலியை ஆற்றுப் படுக்கிறார் பல்லியத்தனார். இதனால், விறலிக்கு அமைந்த வறுமைக் கொடுமை விளங்குவதுடன் குடுமியின் கொடைச் சிறப்பும் விளக்கமுறுகின்றது.

புல்லரிசிக் கஞ்சியையே குடித்து வாழும் வறுமையை ஒழிப்பதற்குக் குடுமியைக் காணச் செல்க என்கிறார்.

**"விறலி, நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்குச்,**
**செல்லாமோ?"**

103. அதியமான் நெடுமான் அஞ்சியை ஒளவையார் பாடியது.

காட்டு வழியிடத்தே கண்ட விறலியை நோக்கிக் களப் போரிலே ஈடுபட்டிருக்கும் அதியனுக்கு விடுப்பதாக அமைந்ததே இப்பாடலும். அவன் இருப்பிடம் சேய்மைத்து அன்று; அண்மைத்து என்பதும், வறுமைமிக்க போழ்திலும் வழங்கத் தவறான் என்பதும் விறலிக்கு நம்பிக்கைமிகச் செய்வன. "அவன் முயற்சி வெல்க" என்று வாழ்த்துதல்,

கொடையாளன் செல்வம் பெருகுதல் அதனைப் பெறுவார் பேறாக வாய்த்தலை உணர்ந்து வாழ்த்திய தாகும்.

105. வேள் பாரியைக் கபிலர் பாடியது.

"விறலி, பாரிவேள் பாற் பாடினை செலினே, சேயிழை பெறுகுவை" என ஆற்றுப் படுத்துகிறார். பாரியை, "நீரினும் இனிய சாயற் பாரி" எனப் பாராட்டுவது நயமிக்கது. அவன் அருவி, மழை பெய்யினும் பெய்யா தொழியினும் இழிதரும் என்றது மலைவளச் சிறப்பு உரைத்தது. பாரியின் பனிச்சுனைத் தெண்ணீர் பாடு புகழ் பெற்றது என்பது இவண் நினைக்கத் தக்கது (குறுந். 196).

133. ஆயை உறையூர் ஏணிச் சேரி முடமோசியார் பாடியது.

"விறலி, புகழ் என்பதைக் கேட்டுத்தான் இருக்கிறாய்; கண்ணால் காண வேண்டுமா? ஆயைக் காணச் செல்" என ஆற்றுப் படுத்துகிறார் மோசியார்.

காட்டு வழியே தான் போகவேண்டும்; நீ கார் கண்டு களிப்புறும் மயிலெனச் செல்லலாம் என்றும், கூந்தலைத் தென்றற் காற்று அலைப்பதை அன்றி எவ்வகை மன அலைப்பும் ஏற்படாது என்றும் குறிப்பாக உரைக்கிறார்.

இதன் நுணுக்கம் அறிந்த பழைய உரைகாரர், "'விரைவளர் கூந்தல் வரைவளி யுளர' என்றது கொண்டை மேற் காற்றடிக்க என்பதொரு வழக்குப் பற்றி நின்றது. என்றதனாற் பயன், பிறிதொன்றால் இடையூறில்லை என்பதாம்" என்றார்.

இவ்விறலி யாற்றுப் படைகளெல்லாம் பாடலளவால் சிறியவையாகவும், விறலியர் வினவாமலே அவரை ஆற்றுப் படுப்பது போலவும், தாம் பெற்ற பரிசில் முதலியன விரியாது தலைவன் அரும்பண்புகளை அளவே உரைத்து அமைவதாகவும் இருத்தல் நினையத் தக்கது.

## இ. பாண் பாட்டு

பாண்பாட்டு என்னும் துறையில் புறநானூற்றில் அமைந்துள்ள பாடல்கள் நான்கு. அவை: 260, 283, 284, 311.

260. வடமோதங்கிழார் பாடியது.

பல்வேறு சொகினத் தடையால் (சகுனத்தடையால்) தலைவனைக் காண்போமோ அல்லோமோ என ஐயுற்று வரும் பாணனை நோக்கி, "ஆனிரை மீட்டலில் வென்று சட்டையை உரித்த பாம்புபோல வீட்டுலகம் புகுந்தனன்; உடல் பட்ட இடத்து நடுகல்லாகி நிற்கின்றனன்" என்று மற்றொரு பாணன் உரைப்பதாக அமைந்தது இப்பாட்டு.

கையறுநிலைப் பொருளொடு கூடிய பாண்பாட்டு இது.

283. அண்டர் நடுங்கல்லினார் பாடியது. பாடம்: அடை நெடுங்கல்லியார் பாடியது.

வண்டியின் குடத்தில் ஆரக்கால்கள் நிற்பதுபோலத் தலைவன் உடலில் வேல்கள் தைத்து நிற்பதை உவமைப் படுத்துகிறார். அவன் உயிர்போம் நிலையில், அவன் துணைவன் போர்க்குக் கிளர்தலை உரைக்கிறார்.

284. ஓரம்போகியார் பாடியது.

களிற்றை வாளால் வீழ்த்தினான் ஒரு வீரன்; வாள் வளைந்து போயிற்று. வீழ்ந்த களிற்றின் கொம்பிலே தேய்த்து வாளை நேராக்கிக் கொண்டு வீறுடன் நின்றான் வீரன். இக்காட்சியை உரைக்கின்றார்.

311. ஔவையார் பாடியது.

தலைவன் தான் ஒருவனாக நின்று தன் ஒரு கேடகத்தைக் கொண்டே பகைவர் பலர் ஏவிய படைகளைத் தடுத்து நிறுத்தினான். பலர்க்கும் உதவிய அவன் எவர்

உதவியையும் வேண்டி நின்றான் அல்லன் என்னும் கருத்தமைய இப்பாடலை அமைக்கிறார்.

பாண்பாட்டாவது,

'' வெண்கோட்ட களிறெறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்
கைவல் யாழ்ப்பாணர் கடனிறுத் தன்று''

என்னும் இலக்கணத்தது (பு. வெ. 7 : 11)

பாடப்பட்டவர் பெயர் இப்பாடல்களில் இல்லாமை அறியத் தக்கது. பாணர்கள் பாடிய கையறு நிலைப் பாடல்களாக அமைந்தவை இவை. இப் பாணர், இறந்த தலைவன் இருந்த காலையில் அவன் கொடை நலத்தால் சிறந்தவர் என்றும், அந்நன்றியறிதலே இக்கையறு நிலையாய் வெளிப்பட்டது என்றும் கொள்ளல் தகும். இல்லாக்கால் பாண்பாட்டு என்னாமல், கையறு நிலை என்னவே அமையும்.

## 19. பதிற்றுப்பத்தில் ஆற்றுப்படை

**பதி**ற்றுப்பத்தில் பாணாற்றுப் படையாக வருவன 66, 67 ஆகிய இரண்டு பாடலும் என்ப. எனின் 66 ஆம் பாடல், "பேரியாழ்பாலை பண்ணிப் படர்ந்தனை செல்லும் முது வாய் இரவல" எனப் பாணனை விளிப்பது கொண்டு பாணாற்றுப் படை என்பாரை, "படர்ந்தனை செல்லும்' என்று பாணன் தன்னின் நினைவன கூறினமையால் துறை பாணாற்றுப் படையன்றிச் செந்துறைப் பாடாணாயிற்று" என்று விலக்குவார் பழைய உரையாசிரியர் பரிமேலழகர். "இது பாடாண் பாட்டாகலின் ஆறறிந்து செல்லும் பாணனொடு சேரன் கொடை நலம் கூறிப் பாடுவதே ஈண்டைக்குப் பொருந்துவது" எனத் தெளிவிப்பார் புத்துரை யாசிரியர் ஔவை. ஆகலின், 67ஆம் பாட்டொன்றே பாணாற்றுப் படை எனக் கிடக்கிறது. வெண்போழ்க் கண்ணி என்னும் பெயருடைய இப்பாடல் ஏழாம்பத்தில் உள்ளது. பாடியவர் கபிலர். பாடப்பட்ட வேந்தன் செல்வக் கடுங்கோ வாழியாதன்.

"கடனறி மரபின் கைவல் பாண, செல்வக் கோமானைப் பாடினை செலின் நீ நின் ஒக்கலொடு கொடு மணம் பட்ட நன்கலனும், பந்தர்ப்பட்ட தெண்கடல் முத்தும் பெறுகுவை" என்று பரிசு பெற்று வந்த பாணன் பரிசு பெறப் போகும் பாணனை ஆற்றுப் படுத்துகின்றான்.

கொடுமணம் நன்மணிகளுக்கும், பந்தர் முத்துக்கும் அந்நாளில் பெயர் பெற்றிருந்த இடங்கள் என்பது

அரிசிற்கிழாராலும் சொல்லப்படுதலால் அறியலாம் (பதிற். 74).

பதிற்றுப்பத்தில் விறலியாற்றுப் படையாக வருவன 6 பாடல்கள். அவை: 40, 49, 57, 60, 78, 87.

இவற்றுள் அளவால் மிகச்சிறிய பாடல் எண் 87. அது, ஐந்து அடிகளையுடையது.

அளவால் பெரிய பாடல் எண் 40. அது, முப்பத்தோரடிகளையுடையது. இவற்றுள் ஐம்பத்தேழாம் பாடல் 'சில்வளைவிறலி' என்னும் பெயரியது.

40. களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது.

"சில்வளைவிறலி நார்முடிச் சேரல், நேரியோன்! நீ
செல்லின், பாணர் பைம்பூ மலைய, யானை பல நல்குவன் ;
செல்வாய்"

என்கிறார்.

49. கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடியது.

"குட்டுவனைக் கண்டு வருதற்கு யாமும் சேறுகம்; நும்கிளை
இனிது உணீஇயர்; விறலியர் நீயிரும் வம்மின்"

என விறலியை உடனழைக்கிறார் பரணர்.

"யாமும் சேறுகம்; நீயிரும் வம்மின்"

என்பது அருமை மிக்கது. ஆற்றுப்படையாக அமையாமல் தாமும் உடனழைத்துச் செல்வதாக அமைகின்றது அன்றோ. இதனால் பரணர் வழிகாட்டி யாதலேயன்றி வழி கூட்டியும் ஆதல் புலப்படும்.

அரத்தம், குருதி, செந்நீர் என்பவற்றொடு 'நெய்த்தோர்' என்றொரு சொல்லையும் தருகிறார்

பரணர். இவ்வெல்லாம் விடுத்து அரத்தம் என்பதன் திரிவடிவாம் 'இரத்தம்' பெருவழக்கி லுள்ளதாம்.

57. ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியது இப் பாட்டு. 60ஆம் பாடலும் இவனை இவர் பாடியதே. இப்பாடற் பெயர் சில்வளை விறலி என வழங்கப்படும் சிறப்பினது. 'செல்லா மோதில் சில்வளை விறலி' என்பது இப்பாடலில் உள்ள சிறப்புமிக்க ஒரு தொடர்.

"சில்வளை விறலி என்றது பல்வளையிடுவது பெதும்பைப் பருவத்தாகலின், அஃதன்றிச் சில்வளையிடும் பருவத்தாளென அவள் ஆடல் முதலிய துறைக்குரியளாதல் கூறியவாறு. இச்சிறப்பானே இதற்குச் 'சில்வளை விறலி' என்று பெயராயிற்று" என்று பரிமேலழகர் உரைக்கிறார்.

**" ஒண்ணுதல் மகளிர் துளித்த கண்ணினும்**
**இரவலர் புன்கண் அஞ்சும்**
**புரவெதிர் கொள்வன்"**

என்று சேரலாதனைக் குறிப்பிடுதல் அருமையுடையது. பாணர் கைக் கொண்டுள்ள யாழையும் இசைத் திறத்தை யும் இப்பாடலில் இனிது புகல்கிறார்.

60. நறவு என்னும் பெயருடைய ஊரின் நலம் இப் பாடலில் இனிது புகலப்படுகின்றது. நறவு, மது என்னும் பொருள் தருவது ஆகலின், அதனின் விலக்கத் 'துவ்வா நறவு' என்கிறார். இதில் விறலி 'பாண்மகள்' எனப் படுகிறாள்.

**" ஆறுசெல் மாக்கட்கு ஓய்தகை தடுக்கும்**
**மறாஅ விளையுள் அறாஅ யாணர்த்து"**

நறவு என்பது அப்பெயர்ப் பொருத்தத்தை விளக்குவது போல் அமைந்துள்ளது.

78. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில் கிழார் பாடியது. பகைவேந்தர் ஆட்டுக் கூட்டம் போலக் குதிரைக் கூட்டங்களையும், ஆன் கூட்டம்போல யானைக் கூட்டங்களையும் உடையவன் சேரன் என்பதை, ''யாடு பரந்தன்ன மாவின், ஆபரந்தன்ன யானையோன் குன்றே'' என்கிறார்.

87. இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது. பாடல் முதலடியிலேயே,

**''சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை''**

என ஆற்றுப் படையைக் கூறிவிடுகிறார்.

புதுநீர்ப் பெருக்கைக் கடத்தற்கு உதவும் மிதவைக் கரும்பினும் மிக்க வகையால் வறுமை வெள்ளப் பெருக்கைக் கடக்க உதவுவான் சேரல் என்பதை, ''நீர்வழிக் கரும்பினும் வல்லனால் அளியே'' என்று குறிப்பிடுகிறார்.

# 20. பாணர் பெற்ற பரிசில்

பண்டை வேந்தர் நாளோலக்கம் கொண்டிருத்தல் மரபு; புலவர்கள் புலமைத் திறம் காட்டிப் பாடுவர்; பாணர் பண்ணிசைப்பர்; பாடினியர் கூத்தர் விறலியர் இன்னோர் ஆடியும் இசைத்தும் கடனாற்றுவர். இத்தகைய நாளோலக்கம் பெரிதும் மதிக்கத் தக்கதாகவும், விருப்புக் குரிய தாகவும் அமைந்தது. அந்நாளோலக்கச் சிறப்பே நாடு கடந்த புகழாகவும் மாறிப் பிற பிற வேந்தர் பகைத்து இகல் கொள்ளவும் கூட வைத்ததெனின் அதன் சிறப்பு வெளிப்படும்.

இவ்வகையில் பாணரை இனிது போற்றிய வேந்தர் 'பாணர் புரவலர்' எனப்பட்டனர் (பதிற். 65). அவர்களைத் தம் அவைக் கண்ணே வைத்துப் போற்றியமையாலும் பரிசிலரை விரும்பிப் புரந்தமையாலும் "பரிசிலர் வெறுக்கை, பாணர் நாளவை" எனப் பாராட்டப் பட்டனர் (பதிற். 38).

பாணர் நாளவை என்று வேந்தனைப் பாராட்டும் அளவில் அமையாராய் அவ்வேந்தனுக்குக் கட்டளையிட்டு உரைப்பார் போலப் "பாண்முற்றுக நின் நாண் மகிழிருக்கை" என்றனர் (புறம். 29). பகைவர் முற்றின் போர்! பாணர் முற்றின் சீர்! இம் முற்றுதல் இருபாலும் இன்பஞ்சேர்க்கும் இயல்பினதன்றோ!

பாணரிடத்து மிக்க அன்பு கொண்டு அவர்க்கு எளியனாகி உடனிருக்கும் வீரன் ஒருவன் ''பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை'' எனப்படுகிறான் (புறம். 324).

இத்தகைய வள்ளன்மையும் பேருள்ளமும் உடையவர்கள் வழியே பாணர்கள் பரிசில் மிகப் பெற்ற செய்திகள் உள். புரவலர் உள்ளம் எத்தகையது என்பதை அறிந்துள்ள நாம் அவ்வுள்ளத்தவர் அருளிய கொடைச் சிறப்பைக் குறிப்பால் அறிதற்குக் கூடுவதே. எனினும், சங்கச் சான்றோர் சொற்களாலே பாணர் பாடினியர் பெற்ற பரிசுகளை அறிவோம்.

பாணர் பெற்ற பரிசுகளைப் பற்றிக் குறிக்கும் இடங்களில் பலவும் அவர் 'தாமரைப்பூ' பெற்றதையே குறிக்கின்றன. பாடினியர் பெற்றதாயின், பெரிதும் 'மாலை' எனவே குறிக்கப்படுகின்றன. பாணர் தனிப்பூவும், பாடினியர் மாலையும் பரிசிலாகப் பெறுதல் வழக்கம் என்பது பொது நோக்கில் அறிய வருகின்றது.

''பாணர் தாமரை மலையவும்'' என்பதொரு புறப்பாட்டு (12). அத்தாமரை பசுமையானது என்பது விளங்க ''பாணர் பைம்பூ மலைய'' என்கிறது பதிற்றுப் பத்து (40). அப்பசுமையை விளக்கு முகத்தான்.'' பாணன் சூடிய பசும் பொற்றாமரை'' என்கிறது மற்றொரு புறப் பாட்டு (141). இன்னும், ''பைம் பொற்றாமரை பாணர்ச் சூட்டி'' என்றும் (48), ''பொலந்தாமரைப் பூம்பாணர்'' என்றும் (புறம். 361) கூறப்படுகின்றன.

நீர்த் தாமரைப்பூ நீரையகன்றால் வாடிப் போகுமே! இத்தாமரை, அத்தகைத் தன்று என்பாராய் ''வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே'' என்கின்றனர் (126, 319) இது வெளிப்படை என்னும் இலக்கணக் குறியீடு ஆகும்.

இத்தாமரைப் பூவை மேலும் விளக்கும் ஒருவர்,

> **'' பாணர் சென்னிக் கேணி பூவா**
> **எரிமருள் தாமரைப் பெருமலர் தயங்க''**

என்கிறார் (புறம். 364). பொற்றாமரையில் தேனில்லையே! அதனால், ''பூவின், ஆடு வண்டிமிராத் தாமரை'' என்கிறார் (புறம். 69). தாமரைப் பூவைத் தொடுத்தற்கு வாழை நாரைப் பயன்படுத்துவரா?'' ஒள்ளழல் புரிந்த தாமரை, வெள்ளி நாராற் பூப்பெற்றிசினே'' என்கிறார் (புறம். 11).

தாமரைப்பூ வன்றி வேறு பரிசில் பெற்றிலனோ பாண்மகன் எனின் பெற்றதுண்டாம்.

'' தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறு''தலும் (பதிற். 67)

'' பாணர் பரிசில் பெற்ற விரியுளை நன்மான்''சிறப்பும் (நற். 185)

'' பாணர் உவப்பக் களிறுபல தரீஇ''வருதலும் (மதுரைக். 219) அறியப்படுகின்றன.

இனிப் பாடினி, விறலி ஆகியோர் பெற்ற பரிசுகள் மிகப்பலவாம். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிய காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடிப் பெற்ற பரிசில் ஒன்பது துலாம் பொன் என்று பதிற்றுப் பத்துக் கூறுதல் ஒன்றை அறிந்தாலே பாடினியர் பெற்ற பரிசுவளம் நன்கு புலப்படும். 'கலனணிக' என்று கொடுத்தான் என்னும் குறிப்பே பாடினியர் பரிசுக்குரிமை புலப்படுமே!

''பாடினி மாலையணிய'' என்பது புறப்பாடல் (319). மாலைக்கு ஆரம் என ஒருபெயர் உண்டே. ''ஒண்ணுதல் விறலியர்க்கு ஆரம்பூட்டி'' விடுகிறது பதிற்றுப்பத்து (48). பொன்மாலை வாடாதே! ''வாடாமாலை பாடினி அணியச்'' செய்கிறது புறம் (364). அம்மாலையைப் புரிமாலையாக்கிச் சூட்டுகிறது ஒரு புறப் பாட்டு (361). மாலை மட்டும் தானா விறலிக்கு?

'' நூலின் வலவா நுணங்கரில் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி அணியவும்''
(பொருநர் 161-162)

"மாணிழை விறலி மாலையொடு" விளங்கவும்
(புறம். 141)

"ஏருடைய விழுக்கழஞ்சின்
சீருடைய இழை" பெறவும் (புறம்.11)

"சீர்கெழு சிறப்பில் விளங்கிழை" அணியவும்
(மலை. 570)

"ஆடுவண் டிமிரா அழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச்" சூட்டவும்

"புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலியர்" மலையவும்
(பெரும். 481-86)

பலப்பல அணிநலக் காட்சிகள் மின்னுகின்றன.

"விறலியர் வறுங்கை குறுந்தொடி செறிக்கும்" காட்சியும் அரிதில் விளங்குகின்றது (மதுரைக். 218).

புரவலர் கொடுத்த பொன்னும் மணியும், எவ்வளவு காலம் பெற்றுக் கொண்டவர்களிடம் தங்கியதோ? அவர்கள் பெற்ற பரிசு பற்றிய புலவர் புலமைக் கொடை இன்றுவரை அழிபடாமல் கிடைத்திருப்பது உணரப் பெற வேண்டிய செய்தி.

"நின்பட்டுக் கிழியும்; என்பாட்டுக் கிழியாது"

என்றாரே தனிப்பாடலில் ஔவையார்! புலவர் செய் உடம்பு என்றும் அழியாவுடம்பு என்றாரே ஒரு புலவர்! இவற்றை மெய்ப்பிப்பன பாணர் பரிசிற் கொடைப் பாடல்கள்.

இதன் நிறைவில் ஒன்றை நினைதல் தகும். பெருஞ் செல்வச் செழிப்பும் கலையை அழிக்கும்; ஆற்றொணா வறுமையும் கலையை அழிக்கும் என்பதே அது.

வல்வில் ஓரி மாரிபோல் வளஞ்சுரந்தான்; பொன்னாற் செய்த குவளைமலரை வெள்ளி நாரால் தொடுத்து

வழங்கினான்; பிறகலன்களும் களிறும் வழங்கினான். விளைவு என்ன? பசியில்லை; அதன் விளைவு என்ன? ஆடலும் மறந்தார்; பாடலும் மறந்தார்.

“ பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொள் இன்னியங் கறங்க
ஆடலும் ஒல்லார் பாடலும் மறந்தே”

என்பது வன்பரணர் பாட்டு (புறம். 153)

மாலைப்பண் செவ்வழிப்பண்; காலைப்பண் மருதப்பண்; அம்முறை மறந்து பாடுகின்றனர் பாணர். எதனால்? நள்ளியின் வள்ளன்மை பாடும் வன்பரணரே அதனைக் குறிப்பிடுகிறார்:

“ நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர் அது நீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே” (புறம். 149).

செல்வச் செருக்கிலே வாழும் குழந்தைகள் சீர்கெட்டுக் கலைக்கு உதவாமல் போவதில்லையா? அதே போலப் ‘பத்தும் பறந்திடும்’—பசிவருதலால் இல்லையா? மிகு நெகிழ்வும் மிகுமுறுக்கும் யாழ் நரம்புக்கு நயன் செய்யாமை போல் மிகுவளமும் மிகுவறுமையும் கலைக்கும் பண் பாட்டுக்கும் கேடு போலும்!

## 21. பாணர் பேருள்ளம்

**வா**ழ்வில் இன்பமும் துன்பமும் இணைந்தவை. இன்பப் பொழுதில் கூட முழுநிறைவாகப் பங்கு கொள்வது பொறாமை யுள்ளத்தினர்க்கும் தன்னலப் பேய்மையுள்ளத்தினர்க்கும் இயல்வது இல்லை. அவ்வாறாகத் துன்பத்தில் பங்கு கொள்பவர் மிக அரியர் என்பது வெளிப்படை.

> **" கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை**
> **நீட்டி யளப்பதோர் கோல்''**

என்றார் திருவள்ளுவர். வறுமையிலும் துயரிலும் பங்கு கொள்வார் அரியர். மற்றைப் பொழுதுகளில் நண்பராகக் காட்டிக் கொள்பவர், கேடு எய்தும் பொழுதில் தலை காட்டுதலும் இலர். இதனைக் கொண்டே எவர் நண்பர் எவர் உறவர் என்பது தெரிந்து கொள்ள உதவும்; அது பிற்கால வாழ்வுக்கு வாய்த்த நன்மையாக அமையும் என்பது வள்ளுவர் குறிப்பு.

பாணர் உள்ளத்தை அளவீடு செய்தற்கு இவ்வளவு, கோல் பயன்படும். பாணர் பரிசில் வாழ்வினர் ஆகலின், எப்பொழுதும் அந்நோக்கே கொண்டிருந்தனர் என்று முடிவு செய்தற்கு இல்லை.

"யாம் யாழ்மீட்டி நின் நாட்டையும் நின்னையும் பாடினேம். அந்நிலையில் குழல் வருந்தி இசைப்பது போல அழுகைக்குரல் கேட்டேம். அவள் நின் இனிய துணைவி என்பதை அறிந்தேம். அவள் துயர் நீங்கி மகிழ்

வதற்காக இப்பொழுதே புறப்படு; அதுவே எங்களுக்கு வேண்டும் பரிசு; நின்குதிரையைப் பூட்டித் தேரில் ஏறிச் செல்வதே எம் கொடை'' எனக் கண்ணகியைப் பிரிந்து முல்லைவேலி நல்லூரிலே வாழ்ந்த பேகனை வலியுறுத்தும் செய்தி அவர்கள் உள்ளத்தை வெளிப்படுத்துகின்றதே! ஒருவரா? இருவரா? பாணிசைக்கும் புலவராகத் தம்மைக் கொண்டு பாடியவர்கள்? (புறம் 143-147).

பாடிய பாடல் கேட்டுப் பரிசு வழங்க வருகின்றான் வள்ளல். பரிசு நோக்கி வந்திலோம். யாம் இவண் வந்தது நின்னைக் காணும் அளவை கருதியதே, யன்றிப் பிறிதின்று என்கிறான் பாடிவந்த பாவலன். 'காண்டல் வேண்டும் அளவைக்கே வந்தேம்' என உரைக்கும், அன்பர் நண்பர் அரியர். ஏதாவது தந்நோக்கின்றி ஒருவரைப் பார்க்க வருவார் அரியர் என்பதை ஆழ நினைந்து எண்ணிப் பார்க்கவே இவ்வருமைப் பண்பின் பெருமை புலப்படும்.

''அதியமான் நெடுமான் அஞ்சியின் மார்பை வேல் துளைக்கிறது. அங்கே துளைத்தது மட்டுமா? பாணர் உண்கலங்களைத் துளைத்தது; இரப்பவர் கைகளைத் துளைத்தது; அவரை நம்பியுள்ள சுற்றத்தார் கட்பாவை களைத் துளைத்தது; பாடும் பாவலர் நாவையும் துளைத்தது'' என்னும் இவ்விரங்கல் பாடல் (புறம். 235) பாணரின் உள்ளத்தை — கலை வல்லார் உள்ளத்தைக் — காட்டுகின்றதே! இவனில்லாக்கால் இன்னொருவன் என்று புறத்தொதுக்கிப் போகின்ற உள்ளம் இருப்பின் இவ்விரங்கல் வெளிப்படுமோ? ஔவையாரையே விறலியர் குடியர் என்பாரும் உளர்! அக்குடிக்கு உரியராயின் அவருள்ளம் கரைந்து கரைந்து பாடும் உள்ளம், பாணர் உள்ளம் என்பதன் சான்றன்றோ!

பாணர்க்கு உதவுதலைக் கடப்பாடாகக் கொண்ட ஒருவன் பாணர் பெருமகன் எனப்படுகிறான் (ஐங்குறு. 458).

அவனைப் பிரிந்த தலைமகள், கொன்றைப் பூ உதிர்தலைக் காண்கிறாள். அப்பூ, மாணல மிழந்த தன்கண் போன்ற தாகக் காண்கிறாள். பாணர் நெஞ்சார்ந்த பாராட்டுகள் அல்லவோ ஒருவனைப் பாணர் பெருமகனாகவும், அகவுநர் பெருமகனாகவும் (அகம். 115) ஆக்குகின்றன. வஞ்சமிலா நெஞ்சின் பாராட்டு வைப்புநிதியெனச் சுரக்கும் என்பது மெய்ம்மையாம்.

எவ்வி என்பான் ஒரு வள்ளல்; பாணரைப் புரத்தலில் நிகரின்றி விளங்கியவன்; அவன் போர்க்களத்துச் சென்று இறந்தான். அவ்விறப்புப் பாணரைப் பெரிதும் வருத்திற்று, அவ்வருத்தத்தால் பாணர் தாம் வணங்கத் தக்கதும், கையகத்துக் கொண்டதுமாம் யாழின் வளைந்த கோட்டினை ஒடித்துக் களத்தே போட்டு வருந்தினர் (அகம் 115). கணவனை இழந்த மகளிர் கணவனால் தொடுக்கப்பட்ட வளையலை உடைத்து எறிவதையும், அவனொருவனே தொட்டுத் தழுவுதற்கமைந்த கூந்தலை மழித்தலையும், அவன் வாழ்வுக் குறியாய் அமைந்த பொட்டினை அழிப்பதையும் ஒப்பது புரவலனை இழந்த பாணர் தம் கையறல் காட்டு முகத்தான் கை யாழை ஒடித்துப் போட்டதாம்!

கொன்றையின் நெற்று உதிர்ந்து கிடத்தலைக் கண்ட மாமூலனார்க்கு எவ்வியின் நினைவு எழுகின்றது. பாணர் அவனை நினைந்திரங்கி யாழை ஒடித்த நினைவும் எழுகின்றது. கொன்றை நெற்றை ஒப்பதன்றோ யாழ்க் கோடு! அந்நினைவால்,

"எவ்வி வீழ்ந்த செருவிற் பாணர்
கைதொழு மரபின்முன் பரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயிர் வணர்மருப் பன்ன ஒள்ளிணர்ச்
சுடர்ப்பூங் கொன்றை ஊழுறு விளைநெற்று
அறைமிசைத் தாஅம் அத்தம்"

என்கிறார்.

நெற்று உதிர்ந்து கிடத்தல் ஒன்றாகவா இருக்கும்? பலப் பல உதிர்ந்து கிடக்குமன்றோ! பாணர் முறித்துப் போட்ட யாழ்க்கோடும் பலப்பல என அறியப்படுதலைச் சுட்டுவர் புத்துரை கண்ட நாவலரும், கரந்தைக் கவியரசும் (அகம். 115).

பாணர் யாழை முறித்தனர் என்றால் பாடினியர் முறியும் பூவும் தொடுத்தணிந்த மாலையையும் பொற் பூவையும் அணியாராய் வறுந்தலையராய் இருந்தனர். இதனைப் பரணர்,

"எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே" (குறுந் 19)

என உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைவன் ஒருவன் சொல்லுவதாகப் பாடினார்.

இவற்றால், புரவலன் இறந்தகாலைத் தங்குடித் தலைவன் இறந்தானெனப் பாணர் வருந்தியல் உள்ளம் விளங்கும்.

கொடைமையே வாழ்வாகக் கொண்ட ஒரு வள்ளல் பெரும்பிறிதாகின்றான் (இறக்கின்றான்). அவன் கொடைமை பெற்றோர், உருகி நிற்றல் புலப்படுகின்றது. அவர்கள் அப்புரவலன் வாழ்ந்த நாளில் கொண்டிருந்த பொலிவும் அவன் இறந்த பின்னைக் கொண்டிருக்கும் பொலிவழி நிலையும் ஒப்பிட்டுக் கண்டு உரைக்கின்றார்:

"பாணர் சென்னியும் வண்டுசென் றூதா!
விறலியர் முன்கையும் தொடியிற் பொலியா"

என்கிறார் (புறம். 244).

பகைவரை வென்று கரந்தைப் போரில் கன்றும் கறவையும் தந்தான் ஒருவீரன்; அவன் களப்போரிலே மாண்டான்; அவனுக்குக் கல்லெடுத்து வழிபாடும் நிகழ்ந்து விட்டது. அவனைத் தேடித் தேடி வழக்கம் போல வருவார்களே

பாணர் கூட்டத்தினர்! அவன் பட்ட நிலையை அறியாமல் இன்றும் வருவரோ! வந்து கல்லாகி இருப்பானைக் காணின் எப்பாடு படுவரோ எனப் பாணரை நினைந்து பரிந்து உருகுகின்றார் உறையூர் இளம் பொன் வாணிகனார்:

" கன்றொடு, கறவை தந்து பகைவர் ஓட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது
இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே"

என்பது அவர் வாக்கு (புறம். 264).

ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பான் ஒரு வள்ளல்; பெருவீரன்; அவன் போரில் வீறுகாட்டி விழுப்புண் பெற்று வீழ்ந்தான். ஊரெல்லாம் அழுது வழிந்தாலும் கொடியில் பூப்பூக்காமல் இராதே! மரத்தில் பழம் பழுக்காமல் இராதே! இயற்கை நியதிகள் இடையீடு படின் என்னாம்?

முல்லை வழக்கம் போல் பூத்தது! ஆனால், அதனைப் பறிப்பார் யார்? உள்ளங் கவர்ந்த ஒருவன் மறைய அதனைப் பறித்துச் சூடுவோர் யார்? சூட்டுவோர் யார்? பறிக்கப்படாமல் வறிதே நின்று வாடிப் போகுமாறு மலர்ந்த அப்பூவின் நிலைமைக்கு இரங்கிக் குடவாயிற் கீரத்தனார் என்பார் ஒரு பாட்டுப் பாடுகிறார்:

" இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"

என்பது அப்பாட்டு (புறம். 242).

"சாத்தன் மாய்ந்தமையால் இளையோர்; சூட மாட்டார்; வளையோரும் கொய்யமாட்டார்; கையால் பற்ற எட்டா உயரத்தில் இருப்பினும் யாழினால் மெல்ல

வளைத்துப் பறிக்கவல்ல பாணனும் அதனைப் பறித்துச் சூடிக் கொள்ளமாட்டான்; பாடினியும் அணியமாட்டாள்;'' எனப் பாணர் குடியின் உள்ளச் சிறப்பை நயமுற எடுத்துரைக்கிறார் கீரத்தனார்.

வாடுவாரைக் கண்டு வாடுதல் எளிதாமா? எவ்வளவு அரிய பெரிய தன்மை அது! வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலார் உள்ளம் எளிதில் வாய்ப்பதா? அவ்வுள்ளத்தால் அன்றோ அவர் வள்ளலார் ஆனார்! வள்ளலார் என்றாலே மற்றொருவர் நினைவு வாராமல் அவர் ஒருவரே நினைவில் வரும் வள்ளற் பெருந்தகையானார்!

பாணருக்குள் ஒரோ ஒரு போட்டியுண்டு! தகவறிந்த போட்டியுண்டு! அது, கலைப்போர்ப் போட்டி! அதற்கு இலக்கணக் குறியீடு பாடல் வென்றி (பு. வெ. 360). ஆடல் வென்றி (பு. வெ. 359) யாழ்வென்றி (பு. வெ. 357) என்பவை. இசை பாடுதலில் வெல்லுதல், கூத்தாடுதலில் வெல்லுதல், யாழிசைத்தலில் வெல்லுதல் என்பவையே அவர்கள் காணும் இகல்கள்! இவ்விகல்கள் வளர்ச்சியின் பாற்பட்டனவும், விரும்பி வரவேற்கத் தக்கனவும், தோற்றாரும் மீண்டும் மீண்டும் முயன்று வெற்றி பெறுதற்கு ஏவுவனவும், தோல்வியின்போதும் வென்றவரைப் பாராட்டும் விழுப்பம் தருவனவும் ஆகிய உயர்வுக்குரியவையாதலால் இவை அறிவுடையோராலும் ஆள்வோராலும் இன்றும் பாராட்டப்படுகின்றன. உலக அளவில் வளர்க்கவும் படுகின்றன. இத்தகு கலையிகல் அன்றிப் புலையிகல் அறியாப் பாணர் உள்ளம் மதிக்கத்தக்கதென்பதில் ஐயமில்லையே!

இனி நிறைவாக ஒன்றை நினைவுறுத்தி அமைவாம். தாம் பெற்ற வளத்தளவில் தாம் மகிழ்ந்து நில்லாராய்த் தாம் பெற்ற பேற்றைத் தம்மனையாரும் பெறுதல் வேண்டும் என்னும் பேருள்ளச் சுரப்பால் பிறந்ததே

ஆற்றுப்படை என்பதை முன்னர்க் கண்டுள்ளோம். ஆற்றுப் படையே பாண்சுற்றம் சார்ந்து வெளிப்பட்ட இலக்கிய வகை என்பதையும் அறிந்துள்ளோம். "தாமின்புறுவது உலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்" என்னும் பொய்யாமொழியை (399) மெய்ப்பிக்கும் சான்றே ஆற்றுப்படை. ஆகலின், அவ்வாற்றுப்படை வாழ்வை வாழ்வாகக் கொண்ட பாணர்குடியினர் பேருள்ளத்தின் பொறிப்பு "யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்பதாம் என்க.

தலைவியொடு தலைவன் கூடி வாழும் இன்பத்தைக் கருதியே தான் பாசறை நோக்கி வந்ததாகச் சொல்லும் ஒரு பாணன், அவளுறும் அவலத்தை எடுத்துரைத்தும் அருள் செய்யாத நின்னை எவ்வாறு மதிப்பேன்; உனக்கு யாம் பாணரும் அல்லேம்; எமக்கு நீ தலைவனும் அல்லை என்கின்றான். "யாமார்க்கும் குடியல்லோம்" என வெளிப்பட்ட நாவுக்கரசர் வீறு இப்பாணன் வாக்கிலும் ஒலித்தல் அறிக. இப்பாடல் ஐங்குறு நூற்றுப் பாணன் பத்திலுள்ள ஒரு பாட்டாம் (480)

**நினக்கியாம் பாணரும் அல்லேம்; எமக்கு**
**நீயும் குருசிலை அல்லை மாதோ;**
**நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி**
**ஈரித ழுண்கண் உகுத்த**
**பூசல் கேட்டும் அருளா தோயே.**

அகத்துறையில், வாயிலாக அமைந்த பாணன் வீறு இஃதெனல் பெரு வியப்புக்குரித்தாம்! புறத்துறையிலும் காண்டற்கு அரிய வீறு அகத்துறையில் இடம் பெற்றி ருத்தல் இடம் நோக்கி எண்ணுவார்க்குப் பெரிதும் விளங்கும். இப்பாணன் உள்ளம் மிகப் பேருள்ளம் என்க.

# 22. அகத்துறையில் பாணர்

இதுகாறும் பாணரைப் பற்றிக் கண்ட செய்திகள் புறத்துறை சார்ந்தவை; புகழ்மிக்கவை; போற்றற் குரியவை. அவ்வாறே, அகத்துறையில் பாணர் தொண்டு தலைவனையும் தலைவியையும் ஊடல் நீக்கிக், கூடல் வகுக்கும் 'வாயில் கடமை' சிறப்புக் குரியதே! எனினும், ஊடல் உணர்வில் தலைப்பட்டு நிற்பாரை அணுகிப் பொய்மையும் புனைவும் படக் கூறுதல் புகழுக்குரியவை ஆகாவே. அப்பணியும் ஒரு முறை ஓரிடத்து இல்லாததாய்ப் பொதுமைப்பட்ட தொழிலாகிப் போமாயின் 'கூலிக்கு மாரடித்தல்' என்பது போல இகழ்வுக்கு உரியதாதலும் மெய்மையே யன்றோ!

நேரிய நடுவுரைகளையே தமக்கு வாய்ப்பாகவும் தம் சார்பாகவும் இன்மையால் நடுவற்றதாய்ப் புறம் பழிக்கும் தன்மையர், பொய்ம்மைப் புனைவுரை சொல்வாரைப் பொருட்டாக எண்ணிப் பேசுவரோ? ஆதலால், அகத் துறையில் பாணர், பாடினியர் விறலியர் கூத்தர் என்பார் இடம் பெருமைக்குரியதாய் அமையவில்லை என்க.

தலைவனையும் தலைவியையும் இடைநின்று கூட்டும் தூது 'வாயில்' எனப்படும். அவ்வாயிலாவார் பன்னிரு வரைக் குறிப்பிடுவார் தொல்காப்பியனார்.

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"

என்பது அக்குறிப்பு (பொ. 191).

கற்பில் தோழிக்குரிய கூற்று வகைகளைக் குறிப்பிடும் ஆசிரியர் தொல்காப்பியர்,

"பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்"

என்கிறார் (பொ. 148).

பாணரும் கூத்தரும் விறலியரும் என்று சொல்லுகின்ற இம்மூவரும் விரும்பிக் கூறிய குறையுறும் வினைக்கு எதிராகவும் தோழி கூற்று நிகழும் என்பதாம். இதனால் இம் மூவரும் வேண்டும் வேண்டுதலைத் தோழி மறுத்தும் கூறுவள் என்பதாம். இவண் வேண்டுதல் தலைவன் பால் தலைவி பரிவு கொண்டு கூடவேண்டும் என்பதாம்.

"புலைமகன் ஆதலிற் பொய்ந்நின் வாய்மொழி
நில்லல் பாண செல்லினிப் பரியல்"

எனப் பாணர்க்கு வாயில் மறுக்கிறாள் தோழி.

விறலி வாயிலாகப் புக அவளை இடித்துரைப்பாளாய்,

"..................... ஊரற்கு நாளை,
மகட்கொடை எதிர்ந்த மடங்கெழு பெண்டே"

என விளிக்கிறாள். "ஊரனுக்கு இனிவரும் நாளைக்கும் ஒரு பரத்தையைக் கொண்டு வந்து கொடுத்தற்கு நேர்ந்த அறிவிலா விறலியே" என்பது இதன் பொருளாம்.

இவ்வாறு விளிப்பவள் விறலியின் சொல்லை,

“ கன்றுபெறு வல்சிப் பாணன் கையதை
வள்ளுயிர்த் தண்ணுமை போல
உள்யாதும் இல்லதோர் போர்வையஞ் சொல்லே”

என்கிறாள் (நற். 310).

“ஆவின் கன்றை உரித்து உணவாகக் கொள்ளுகின்ற பாணன் கையிடத்ததாகிய பெரிய ஒலித்தலை யுடைய தண்ணுமை வாச்சியம் போல உள்ளே யாதுமில்லாத ஒரு மேற்போர்வை யுடைய சொற்களைச் சொல்லுகின்றாய்” என்பது விறலியின் சொல்லின் பொய்ம்மையைச் சொல்லு கின்றதே! பாணன் தண்ணுமையையே உவமையாக்கியது இருபடி எள்ளலாம்.

கூத்தர் பாணர் கூற்றுகள் இவையெனவும் தொல் காப்பியம் குறிக்கின்றது. அவை :

“ தொல்லவை யுரைத்தலும் நுகர்ச்சி ஏற்றலும்
பல்லாற் றானும் ஊடல் தணித்தலும்
உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்
ஏதுவின் உணர்த்தலும் துணிவு காட்டலும்
அணிநிலை யுரைத்தலும் கூத்தர் மேன”

“ நிலம்பெயர்ந் துறைதல் வரைநிலை யுரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை யுரிய”

என்பவை (பொ. 166, 167).

முன்னே வாழ்ந்த இவர் இவ்வாறு இன்பம் நுகர்ந்தார் எனக் கூறுதலும், நீங்கள் அடையும் இன்பம் அதனினும் சிறந்தது எனக் கூறுதலும், இல்லற முறைமைக்கு இயல் பன்று என்றாவது, இஃது அன்பில்லாமையாம் என்றாவது கூறித் தலைவியை ஊடல் தணித்தலும், இல்வாழ்வின் கடைப்பிடி இன்னதென வலியுறுத்தலும், தலைவியிடத்துக் கூற்று வகையாம்.

நீ கற்ற கல்வி மெய்யானது என்பதை நிலை நிறுத்த வேண்டும் என்றலும், கழிகாமம் இழிவெனக் காரணங் காட்டிக் கூறலும், அவ்வாறு கெட்டார் இவரென எடுத்துரைத்தலும், தலைவியைத் தொய்யில் எழுதுதல் முதலாக அழகுறுத்தும் வழிவகை இவையெனக் கூறுதலும் தலைவனிடத்துக் கூறும் கூற்று வகையாம்.

இவ்வெட்டும் கூத்தர்க்குரிய கூற்றுவகை.

தலைவன் தொலைவிடத்து உறையுங்கால் தலைவியை நோக்கி அவ்விடத்தை விட்டு மீண்டுவரும் நிலைமை கூறுதல் கூத்தர்க்கும் பாணர்க்கும் உரிய பொதுக் கூற்று.

"கூத்தர், நாடக சாலையர். தொன்றுபட்ட நன்றுந் தீதும் கற்றறிந்தவற்றை அவைக்கெல்லாம் அறியக் காட்டுதற்கு உரியராதலிற் கூத்தர் இவையுங் கூறுப" என்றார் நச்சினார்க்கினியர்.

காட்டில் பெண்மானைத் தழுவி ஆண்மான், புல்லருந்தித் தாவிச் செல்லவும், ஆனினம் தன் கன்றினை நினைந்து வீடு திரும்பவுமாம் மாலைப் பொழுதினும் தலைவர் நம்மை நினைந்து வாரார் எனின் காலையில் நம் நிலை என்னாமோ, என்னும் தலைவிக்கு மறுமொழி சொல்ல வழியில்லேனாய்ச் செவ்வழிப் பண்ணைப் பாடிக் கடவுளை வாழ்த்திக் கொண்டு தலைவனைக் காணச் சென்றேனாகிய யான், அவன்தேர் எதிர்வரக் கண்டேன் என்று பாணன் தனக்குப் பாங்காயினார் கேட்கச் சொல்லிய பாட்டை (அகம். 14) எடுத்துக் காட்டுகிறார் நச்சினார்க்கினியர் (தொ. பொ. 167)

கற்பிற் கூற்றுக் குரியவர் இவரென எண்ணும் தொல்காப்பியம் பாணன், கூத்தன், விறலி, பரத்தை என எண்ணுகின்றது. இம்மூவரையும் வைத்த முறைமையை விளக்கும் பேராசிரியர் (பொ. 502).

''இசையின் பின்னது நாடகமாகலிற் பாணன்பின் கூத்தனை வைத்தும், பெண்பாலாகலான் விறல்பட ஆடும் விறலியைக் கூத்தன்பின் வைத்தும் அவ்வினத்துப் பரத்தையரை அதன்பின் வைத்தும்'' என்கிறார்.

ஔவையார் அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்ற உயர்நிலை புறத்துறைப்பால் அமைந்து சிறக்க, குடும்பத்து ஊடல் தீர்க்கும் உறுப்பாகிப் பாணர் வீழ்ந்தமையாற் பிற்காலத்தார் 'விறலி விடுதூது' என்பன போல இழிகாமச் சிறுநூற் பொருளாக்கிச் சிறுமைக்கு ஆட்படுத்தி விட்டனர் என்க.

பாணர் முதலோர் வாயில் வேண்டி நின்றால் 'வாயில் மறுத்தல்' என்பதும் எதிர் நோக்கத் தக்கது தானே.

'' பாணன் முதலாப் பாங்கன் ஈறாப்
பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி
மறுத்தலும்''

என்றது நம்பியகப் பொருள் (206). இதனையே வாங்கிக் கொண்டது இலக்கண விளக்கம் (555)

'' பாண்மகன் முதலாப் பாங்கன் ஈறா
ஆண்மகன் விடுத்த வாயிலவள் மறுத்தலும்
பாணன் வரவினைப் பாங்கி பழித்தலும்,
பாண்மகன் அவ்வழிப் பணிந்து வெறுத்தலும்''

எனப் பெருக்கிக் கொண்டது மாறனகப் பொருள் (103).

''புலை ஆத்தின்னியே, நீ கூர் ஊசியைக் கொல்லர் தெருவிலே விற்க வல்லாய்; எம்மிடம் வண்ண வண்ணப் பொய்ம்மைகளைச் சொல்லி நில்லாதே'' எனப் பாணனைப் பழிக்கிறாள் தலைவி; திருக்கோவையாரிலே வரும் செய்தி

இது (386). "என்மீது எறிவதற்குக் கல்லை எடுத்தல் வேண்டா; வெஞ்சினம் அகல்க; பல்லாண்டு வாழ்க" என அதற்குப் பாணன் பகர்ந்து வணங்கி நிற்கிறான் (387). அதனையும் மறுத்துரைக்கிறாள் தலைவி.

"போலிக் கண்ணீர் வடிப்பவனே! உன்னை எனக்கு நன்றாகத் தெரியும்; தாளத்திற்குப் பொருந்தாப் பண்களைப் பாடி இரந்துண்பவன் நீ; தலைவாயிலுக்குத் தலைவன் வந்துள்ளான் என என்ன பொய் சொல்கின்றாய்" என்கிறாள். இது தஞ்சை வாணன் கோவைச் செய்தி (487).

அகத்துறைப் பாணர் அடைந்த பழிப்பினை அடுத்துக் காணலாம்.

## 23. பாணர்ப் பழிப்பு

வாயிலாகி ஊடல் தீர்க்கும் பாணன் நகைப் பொருளாகத் தலைவிக்கும் தோழிக்கும் தோன்றுதல் பெருவரவினது. திரைப்படம், நாடகம் முதலியவற்றில் சிலரைக் கண்ட அளவானே நகைப்பு உண்டாதல் போலப் பாணர் அகப்பொருள் மாந்தருள் காட்சி யளித்தனர் எனலாம்.

''வாராய் பாண நகுகம்'' (நற். 370) ''நகுகம் வாராய் பாண'' (நற். 250) என்பவற்றின் நகைச் செய்தி வேறாக இருந்தாலும் பாணனைக் கண்டதும் தலைவிக்கும் தோழிக்கு மன்றித் தலைவனுக்கும் கூட நகையாம் எனத் தோன்றுகின்றது.

''யாழும் அழப், பண்ணினாற் களிப்பிக்கும் பாணன்''

எனக் காண்கிறான் கலியில் (72). ''இல்லறம் நிகழ்த்து வதற்கு உரியனவற்றைப் பாடிக்காட்டி யாம் வருந்தாதபடி பண்ணாது பரத்தையரிடத்தே ஒழுகுதற்கு வேண்டுவன வற்றைப் பாடிக் காட்டிக் களிப்பிப்பன் என்றவாறு'' என்கிறார் நச்சினார்க்கினியர்.

பாணன் பாட்டைப் பழிக்கிறது பரிபாட்டு; அது தலைவி கூற்று.

'' பொய்வளம், பூத்தன பாணநின் பாட்டு''

என்பது அது (18). ஐங்குறு நூற்றுத் தலைவி கூறுகிறாள்:

'' பாணன் பொய்யன் பலசூ ளினனே'' (43)

"பாணன் போலப் பலபொய்த் தல்லே" (47)

அவளே மேலும் வினாவாகத் தொடுக்கிறாள்;

"யாண ரூரநின் பாண்மகன்
யார் நலஞ் சிதையப் பொய்க்குமோ இனியே" (49)

என் நலஞ் சிதையுமாறு பொய் கூறியதோடு அமையானே! இன்னும் யார் நலமெல்லாம் சிதையுமாறு கூறுவனோ என நகைத்து வெறுத் துரைக்கிறாள்.

தெருவிலே பாணன் வரும்போது ஈற்றுப் பசுவொன்று வெருட்டியதாம். அதற்கு அஞ்சியவனாகக் கையில் இருந்த யாழையும் போட்டுவிட்டு ஒரு வீட்டுள் ஓடிப் புகுந்தானாம். அவ்வேடிக்கையை அடக்கிக் கொண்டு நீ தேடிவந்த மனை ஈதன்று; அது; என்று சொல்ல நாணி நின்றானாம்; அதனை நினைக்க நகைப்பாக இருக்கின்ற தாம். இதனை அகப்பாடல் (56) விரிக்கின்றது.

தலைவனிடம் தலைவி சொல்கிறாள்: "நின்பாணன் ஒருவன் பொய்யனாக இருப்பதனால் ஊரிலுள்ள பாணர்களெல்லாம் பொய்யரைப் போலவே பிறர்க்குத் தோன்றுகிறார்கள்! இது நாரைக்கு அஞ்சிய கெண்டைமீன் தாமரை மொட்டைப் பார்த்து அஞ்சியது போன்றது (குறுந். 127) என்கிறாள்.

"பாண, நீ பொன்னன்ன நரம்பின் இனிய ஓசையையுடைய சிறிய யாழை எடுத்துப் பாடுதலில் வல்லனேயாயினும், ஈண்டு எம்மைத் தொழுது பாடாதே; சிறந்த எம்மனைக் கண்ணே நெடும்பொழுது நிற்றலைத் தேரில் பூட்டிய குதிரைகளும் வெறுக்கின்றன; விரும்பாத இடத்தில் பயனில்லாத சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டா" என நற்றிணைத் தோழி ஒருத்தி பாணனைக் கடிகிறாள் (380).

கலித்தொகைத் தோழி ஒருத்தி, பாணனை,

"இல்லின் எழீஇய யாழ் தழீஇக் கல்லாவாய்ப் பாணன்" (70)

என இடித்துரைக்கிறாள். "பரத்தையர் இல்லிலே வாசித்த யாழைத் தழுவிக்கொண்டு வாயிலாய்த் திரிகின்ற தொழியப் பாட்டைத் திருந்தக் கல்லாத வாயினையுடைய பாணன்" என்பது அவள் இடிப்புரையாம்.

ஊர்க்குயவன் ஒருவனை நோக்கித் தோழி கூறுவதாக அமைந்ததொரு பாட்டு; அது நற்றிணை சார்ந்தது (200).

"இந்நாள் இவ்வூரில் திருவிழா; வந்து காணுங்கள் என்று கூறிச் செல்கின்ற குயவனே, ஆங்குள்ள மகளிரை யழைத்து மங்கையீர், கைவிரும்புதற்குக் காரணமான நரம்பினையுடைய யாழிலே பாடும் இசைப்பாட்டு நுவல வல்ல பாணன் செய்த துன்பங்கள் மிகப்பலவாகி வளர்வன வாயின. ஆதலின், இப்பாணன் உள்ளே பொய்யை நிரப்பி வைத்து மேலே மெய்ம்மையைக் கொண்டு மூடிச் சொல்கின்ற கொடுஞ்சொல்லிலே வயப்படாது நுங்களைக் காத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறுவாயாக" என்கிறாள். தலைவன் மேல் கொண்ட வெகுளி பாணன்மேல் பாய்தல் தெளிவாகின்றது.

பாணர் இயல்பு இவ்வாறு சுட்டப்படுதலால் 'பாண், என்பதற்குப் பிற்காலத்தே தாழ்வுப் பொருள் உண்டாயிற்று.

"பாண்குலாய்ப் படுக்கல் வேண்டா" —(2515)

என்னும் சிந்தாமணிக்குப் 'பாண்மைச் சொல்லாலே வளைத்து எம்மை அகப்படுத்துதல் வேண்டா' என உரை எழுதும் நச்சினார்க்கினியர், 'பாண் — தாழ்ச்சி' எனப் பொருள் வரைந்தார் (1624) மேலும், "பணிந்து பாண்

செய்த தன்றே'' என்பதற்கும் ''வணங்கித் தாழ்ச்சி செய்தது'' என எழுதினார்.

தாழ்ச்சி பேசி என்பதைப் 'பாணேபேசி' என்கிறது திருவாசகம் (திருச்சதகம். 84).

பாணர்ப் பழிப்பின் உச்சநிலை என்று சொல்லத்தக்கது நந்திக் கலம்பகத்து வருமொரு பாட்டு. அதன் சுவையும் நயமும் சொல்லவும் துய்க்கவும் இனிதே. பாடல் ஓட்டமும் உத்தித் திறமும் சிறப்பே. எனினும், அதன் உள்ளீடு பாணரைப் பேரிழிவு படுத்துவதாகவே அமைகின்றது. எந்த ஒரு சுவையான சொல்லாட்சியின் உள்ளீடும் பழிப்புச் சான்றாக அமைந்து விடக் கூடாதே.

'' ஈட்டு புகழ்நந்தி பாணநீ, எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும் — காட்டிலழும்
பேயென்றாள் அன்னை! பிறர்நரியென் றார்;தோழி
நாயென்றாள்; நீயென்றேன் நான்''

என்பது நந்திக் கலம்பகப் பாட்டு (106)

'' ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய்''

என்று பாராட்டப்பட்ட பாட்டு எத்தகு இழிநிலைக்கு ஆட்படுத்தப் பட்டுள்ளது! எரிச்சலுறும்போது குற்றாலச் சாரலும் கோடை வாழ்விடமும் கொடுவெப்பக் காடாகப் போதல் உளவியல்பு! அவ்வுளவியல்புக்குப் பாணன் பாட்டு தப்பாமல் வசையை வாரிக் கட்டிக் கொண்டது. நோக்குவார் நோக்கே தீர்ப்பாவது போல் இத்தீர்ப்பும் அமைகின்றது.

பேய் அழுகை என்றாளாம் அன்னை!

நரி ஊளை என்றாராம் பிறர்!

நாயின் குரைப்பு என்றாளாம் தோழி!

பாணன் என்பதை — உண்மையைக் கண்டுகொண் டாளாம் தலைவி!

பாணர் நிலையிறக்க உச்சம் ஈதென்னலாம் போலும்!

## 24. பாணரும் புலவும்

புலை ஆத் தின்னி என்று பாணன் பழிக்கப்பட்டதை முன்னர்ச் சுட்டி யுள்ளோம். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்" என்பதில் (நாவுக்கரசர் தேவாரம்) வரும் குறிப்புப் புதுவது அன்று; சங்கநாள் பாடல்களிலும் பெருவர வினவாய் இடம்பெற்ற செய்தியே. அப்புலையர் பாணர் என்ற குறிப்பும் அறிய வருகின்றது.

பாணன் பச்சூன் பையைத் தோளில் போட்டுக் கொண்டு தூண்டிலொடு மீன் பிடிக்கச் சென்றதை முன்னர்க் கண்டுள்ளோம் (பெரும்பாண் 283 — 285)

> **" பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்**
> **கோள்வல் பாண்மகன் தலைவலித் தியாத்த**
> **நெடுங்கழைத் தூண்டில்"**

என அவன் தூண்டில் சொல்லப்படுகின்றது,

பெருநிலை வாழ்வரும், தூண்டில் போடுதலை இன்பப் பொழுதுபோக்கெனக் கொண்டிருத்தலையும், வேட்டையாடுதலைப் பெருமகிழ்வுச் செயலாகக் கொண்டிருத்தலையும் அறியாதார் இலர். அப்படித்தாய் எண்ணத் தக்கதாய்ப் பாணர் நிலை அமைந்துவிடவில்லை என்பதை மேலே காணலாம்.

தூண்டில்போட்டு மீன் பிடிப்பதை அன்றி வலை போட்டுப் பாணன் மீன்பிடித்த செய்தியை ஐங்குறு நூறு (48) குறிக்கிறது.

அவனை, "வலைவல் பாண்மகன்" என்கிறது.

பாணர் தம் மண்டைக் கலங்களில் மீன் சொரிந்துள்ள காட்சியைக் குறுந்தொகை குறிக்கிறது (169). அது,

"பாணர், பசுமீன் சொரிந்த மண்டை"

என்கிறது.

பாணர் மீன் சீவிப்பதனுறுத்தும் செய்தி பரவலாகப் பேசப்படுகின்றது.

"சிறுசின் மீன் சீவும் பாண்சேரி"

எனச் சேரியொடு மீன்சீவும் வாழ்வை இணைக்கின்றது புறப்பாட்டு (348). அதனை மேலும் விளக்கமாக,

"குருகு நால மனைமரத்தான்
மீன் சீவும் பாண்சேரி"

என்கிறது மதுரைக் காஞ்சி (268 — 269)

நாரை கொக்கு முதலிய பறவைகள் ஒலிக்க மனை தோறும் அமைந்துள்ள மரங்களின் நிழலிடத் தெல்லாம் பாண் சேரியினர் மீனைச் சீவித் தூய்மைப்படுத்து கின்றனராம்!

அவர்கள் வராலும் கெடிறும் பெரிதும் விரும்பினர் என்பதும் தெரிய வருகின்றது.

"வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள், வராஅல் சொரிந்த வட்டி" (48) என்றும், "முள்ளெயிற்றுப் பாண்மகளின் கெடிறு சொரிந்த, அகன்பெரு வட்டி" (47) என்றும் ஐங்குறு நூறு உரைக்கும்.

"நாண்கொள் நுண்கோலின் மீன்கொள் பாண்மகள்
தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்
நாரரி நறவுண் டிருந்த தந்தைக்கு
வஞ்சி விறகிற் சுட்டு வாயுறுக்கும்"

செய்தியை அகப்பாடல் விளக்குகின்றது. நாண்கொள் நுண்கோல் என்றது தூண்டில்; அப் பாண் மகளே தூண்டில் போட்டு வரால்மீன் பிடித்தது இப்பாடலால் அறியப்படு கிறது. அவள் மதுவுண்டு மகிழ்ந்திருந்த தன் தந்தைக்குத் தான் பிடித்து வந்த வரால் மீனை வஞ்சி விறகால் சுட்டு ஊட்டுகின்றாளாம்.

இனிப் பாண்மகள் மீன்களை விற்று நெற் பெற்று வந்த பண்டமாற்றுச் செய்தியும் அறியப் பெறுகின்றது.

**"அஞ்சில் ஓதி அசைநடைப் பாண்மகள்**
**சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்"**

என்பது அது (ஐங்குறு. 49)

மீன் எத்தகு அரும்பொருளாகவும், நெல் எத்தகு எண் பொருளாகவும் அந்நாள் இருந்தது என்பதைச் 'சின்மீன்', 'பன்னெல்' என்னும் தொடர்கள் எளிதில் விளக்கும்.

ஊண் வகையால் புலவூணர், அஃதுணார் என இரு பகுப்பர் உலகெங்கும் உளர். அப்புலவூண் எது என்பதைத் திட்டப்படுத்துவதிலும் நாடுதொறும், அவரவர் எண்ணந் தொறும் வண்ணந் திரிதல் கண்கூடு. மீன், புலவூண் அன்று என்பார் உளர்; முட்டை புலவூண் அன்று என்பார் உளர். ஆனால், தமிழர் மீனைப் புலவூணாகக் கருதுபவரே என்பதில் இரு கருத்து இல்லை.

இனிப் பறவைகள் ஆடு மான் இன்னவற்றை உண்ணலும் சங்கநூற் காலத்து வழக்குண்மை பெருக அறியலாம். காட்டுப் பன்றியை வேட்டமாடிய செய்தியும் உண்டு. ஆனால், பசுவைக் கொன்று தின்னல் பழிப்புக்கும் இகழ்வுக்கும் உரியதாகவே அறிய வருகின்றன.

ஆடு கோழி உண்பாரும் மாடும் பன்றியும் தின்பதிலர். அவர் அவற்றை உண்டல் குறைவுடைத்தெனக் கருதி ஒதுக்குகிறார். புலவூணிலேயே பல பகுப்பு உண்மை இவற்றால் வெளிப்படும். 'அந்தணன் யானே'[a] என்பாரும்

புலவுண்டு வெய்துயிர்த்தல் அல்லது வேறு வகையால் உழைத்து வெய்துயிர்த்தல் (வேர்வையுண்டாக உழைத்தல்) இல்லை என்கிறார் எனின், அந்நாளில் புலவூண் இழியூண் எனக் கருதப்பட்டதில்லை எனலாம். மதுவைப் போலவே புலவும் பெருகிய வழக்கில் இருந்தது என்பது,

"மட்டுவாய் திறப்பவும் மைவிடை யூழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறு
பெட்டாங் கீயும் பெருவளம்"

எனப் பாரியின் பறம்புமலை கபிலரால் பாடப்படுதல் கொண்டே அறியலாம் (புறம். 113)

இவ்வாறாகப் புலவையும், கள்ளையும், பரத்தைமையையும் முற்றாக வெறுத்துக் கடிந்து ஒதுக்குமாறு முதற்கண் முழங்கியது திருக்குறளேயாம்! நிற்க,

பாணர் இழிநிலை எய்துதற்கும் தாழ்வுறுதற்கும் 'ஊன்' ஓர் அடிப்படையாய் அமைந்து விட்டதோ என்று ஐயுறுதற்குச் சங்கப் பாடல்களிலேயே சான்றுகள் உள.

"கன்றுபெறு வல்சிப் பாணன்"

என்பது அவனைப் பற்றிய ஊனொடு தொடர்ந்த செய்தி. (நற். 310; அகம். 106)

இவண் கன்று என்றது ஆக்கன்றே; அதனை விரும்பி யுண்ணுபவனாக இருந்ததாலேதான், "புலையாத் தின்னி" (திருக்கோ. 386) என்னவும் பட்டான். புலால் உண்பாரிலும் இப்புலால் உண்பாரே அந்நாள் தமிழ் மன்பதையால் இழிவெனக் கருதப்பட்டனர்; அத்தடமே இந்நாள் வரை இயல்கின்றது. பெருமைக்கும் சிறுமைக்கும் ஊனும் ஒரு பொருளாம் என்பது வரலாற்றாலும் அறிய வருகின்றது.

# 25. சமயத் துறையில் பாணர்

தமிழ்ப் பழஞ்சமயங்கள் மாலியமும் சிவனியமுமாம். மாலியச் சமய ஆழ்வார் பன்னிருவருள் ஒருவர் திருப்பாணாழ்வார்; சிவனிய நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்.

திருப்பாணாழ்வார் நாலாயிரப்பனுவலில் 'அமலனாதி பிரான்' அருளிச் செய்தவர். 'அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்' என்று முதற்பாடலில் பாடும் அவர் திருக்கமல பாதம், அரைச் சிவந்த ஆடை, உந்தி, திருவயிற்றுப் பட்டி, மார்பு, கண்டம், வாய், கண், மேனி ஆகியவற்றை அடிமுடித் தொடர்படப் பாடித் தம் நெஞ்சினை அவை கவர்ந்த அருமையை விரிக்கிறார். ஒரு பதிகப் பனுவலளவில் நாலயிரப் பனுவலில் நிற்பவர் இருவர். அவருள் இவர் ஒருவர்; மற்றொருவர் மதுரகவி யாழ்வார்.

"செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே"

"நீலமேனி ஐயோ! நிறைகொண்டதென் நெஞ்சினையே"

எனவரும் தொடர்களின் உணர்விலே கம்பர் தோய்ந் திருப்பார் போலும்!

"மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோ இவன் அழகென்பதோர் அழியா அழகுடையான்"

என்பதில் 'ஐயோ' என வியந்து போகிறார்!

இப்பாணர் வரலாற்றை அறியுங்கால் அவர் நாளிலேயே பாணர் கோயில் நுழைவு இல்லார் ஆக்கப்பட்டு விட்டார்

என்றும், தீண்டாதார் ஆக்கப்பட்டு விட்டார் என்றும் அறிகிறோம்.

"குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழ் இழிந்ததென்று சொல்லப்பட்ட பஞ்சம வர்ணத்திலே திருப்பாணாழ்வார் அவதரித் தருளினார்" எனவரும் இவர் பிறப்புக் குறிப்பே வெளிப்பட இச்செய்தியைக் காட்டிவிடுகின்றது. (ஆழ்வார்கள் திவ்விய சரித்திரம்—மயிலை மாதவதாசன்.)

உறையூரினராகிய இவர் இரு காவிரி இடையே மிதியாமல் தென்னாற்றின் தென்கரைத் திருமுகத்துறைக் கெதிரே திருவரங்கமேயான் திசையை நோக்கித் தொலை நின்று யாழும் கையுமாய், திருப்புகழ் பாடி வழிபட்டாராம். அதனால், பெரிய பெருமாள் இவர் பக்கல் உவந்த உள்ளத்தராய்த் திருமுழுக்காட்டு நீர் எடுத்துவரும் உலக சாரங்க முனிவர் என்பாரைப் பார்த்து 'பாண் பெருமாளை நீர் நெகிழ நினையாதே உம்முடைய தோளிலே கொண்டு நம்பக்கல் அழைத்துக் கொண்டு வாரும்' என்று கனவில் கட்டளை யிட்டாராம். அவ்வாறே ஆழ்வாரைக் கண்டு பெருமாள் அருளிச் செயலின்படி 'அடியேன் தோளில் ஏறி எழுந்தருள்க' என வேண்டி அவ்வாறே கொண்டு சென்றார். பெருமாள் திருவழகிலே ஈடுபட்ட ஆழ்வார் 'அமலனாதி பிரான்' என்னும் பதிகம்பாடி அரங்கன் திருவடிகளிலே ஒன்றினார். இது பாணாழ்வாரைப் பற்றி அறிய வரும் செய்தி. அவரன்ன அடியார்க்கும் அரங்கத்தைத் திசை நோக்கி வழிபடவே முடிந்தது என்றால், பிற பாணர்கள் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை விரிக்க வேண்டுவ தில்லையாம்.

சிவனிய அடியா ராகிய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் நடுநாட்டு எருக்கத்தம் புலியூரினர். இவர் மனைவியார் மதங்கசூளாமணியார். அவரும் யாழிசைத் தலிலும் பாடுதலிலும் தேர்ச்சி மிக்கவர்.

சோழ நாட்டுத் திருக்கோயில்களையெல்லாம் வழிபட்ட இவர்கள் மதுரை ஆலவாய்த் திருக்கோயிலை அணுகினர். வாயிற்புறத்தே நின்று பாணர் அவ்வக் காலத்துக்கேற்ற பண்களை இசைத்துப் பாடினார். திருவாலவாய்ப் பெருமான் தம் திருத்தொண்டர் கனவிலே தோன்றிப் பாணரைத் தம் திருமுன் அழைத்து வருமாறு கட்டளை யிட்டார். அவ்வாறே அடியார்கள் அழைத்துச் சென்றனர். ஆங்கு இறைவன் திருப்புகழை யாழில் இசைத்து இனிது பாடினார். "இப் பாணனார் யாழ் நிலத்தில் வைக்கப்பட்டு இசைத்தலால் நிலத்தண்மையால் அதன் நரம்புகளின் இறுக்கம் கெடும்; ஆகலின் பலகை இடுக" என்று உருவிலி (அசரீரி) வாக்கு எழுந்தது. அதன்படி அடியார்கள் பாணர்க்குப் பலகை அமைத்துக் கொடுக்க அதன் மேல் இருந்து பண்ணிசைத்தார். பின்னர்ப் பல கோயில்களையும் வழிபட்டுத் திருவாரூர் நண்ணித் திருவாயிலின்பால் நின்று யாழிசைத்தார். பின்னர் இறைவன் பாணருக்கென வடபால் ஒரு வாயில் வகுத்தருள அதன் வழியே உள்ளே சென்று வழிபட்டார்.

மேலும் திருக்கோயில் உலாக் கொண்ட பாணர், சீகாழியில் ஆளுடைய பிள்ளையார் பெற்ற பேறுகளையும் பெருமைகளையும் கேள்வியுற்று ஆங்குச் சென்று பிள்ளையார் அருளும் பாடல்களைத் தம் யாழிலிட்டு இசைத்தார்.

திருத்தருமபுரம் திருநீலகண்டரின் அன்னையார் பிறந்த இடம். ஆங்குப் பிள்ளையாருடன் பாணர் செல்ல அவர் தம் உறவினர்களிடம் பிள்ளையார் பாடும் பதிகங்களை யாழிலிட்டுப் பாடும் பேறு வாய்த்தமையை மகிழ்ந்து கூறினார். அவர்கள், பிள்ளையார் பதிக இசையை நீவிர் யாழிலிட்டு வாசித்தலாலே உலகமெலாம் இசை பெருகி வளர்வதாயிற்று" எனப் பாராட்டினர். அது கேட்டு விதிர்ப்புற்ற பாணர், பிள்ளையாரிடம், "பதிக இசை யாழின் அளவில் கட்டுப்படாதது என்பதை இவர்கள் உணருமாறு ஒரு பதிகம் பாடியருள வேண்டும்" என

வேண்டினார். அவ்வாறே 'யாழ்மூரி'ப் பதிகம் 'மாதர் மடப்பிடி' எனத் தொடங்கிப் பாடினர். அதனிசை யாழுக்குக் கட்டுப் படாமை' கண்டு யாழை உடைக்க ஓங்கினார், பாணனார். பிள்ளையார் அதனைத் தடுத்து 'மனத்தாலும் அளவுபடா இசை செய்கையினால் அளவு படுமோ?' எனத்தேற்றி யாழை அவரிடம் கொடுத்து இசைத்து வரக் கூறினார். திருச்சாத்தமங்கையில் திருநீல நக்கர் தொடர்பு உண்டாயிற்று. திருநீலநக்கர் மனையில் பாணரும் மதங்கசூளாமணியாரும் பிள்ளையாருடன் உடன் தங்கினர். இறுதியில் நல்லூர்ப்பெருமணத்தில் பிள்ளை யாருடன் கோயிலுள் புகுந்து பேரொளியில் கலந்தார். இது திருத்தொண்டர் புராணத்தின் வழியே அறியப்பெறும் செய்தி.

இவ்விடத்தே சுட்டத் தக்கதொரு செய்தி. இத் திருநீல கண்ட யாழ்ப்பாணர் மரபிலே வந்த பாண்மகள் ஒருவரே நம்பியாண்டார் நம்பிகளால் திரட்டப்பட்ட தேவாரப் பதிகங்களுக்குப் பண்வகுத்தருளினார் என்பதாம். அவர் காலம் வரையும் கூடப் பாணர் தம் துறையில் மேம்பட்டே திகழ்ந்தனர் எனக் கொள்ளலாம்.

இக்குறிப்புகளால் அலைவல்ல பாண் மக்களும் கோயிலுள் சென்று வழிபடும் உரிமை இன்றி இருந்தனர் என்பது தெளிவாகின்றது. திருநீலகண்டர் இறையன்பும் இசைத்திறமுமே அவர் திருக்கோயில் செலவுக்கும் மேல்குடி மக்களொடு தொடர்பு கொள்ளுதற்கும் இடமாக இருந்தது என்பதும் விளங்கும். சங்க கால யாழ்ப்பாணர் அரண்மனையையும் உறைவிடமாகக் கொண்டிருந்த ஏற்றமும், இடைக்காலப் பாணர் அந்நிலையில் இறங்கிக் கோயில் வாயிலிலே நிற்கும் தாழ்நிலைக்கு வரலான குறிப்பும் அறிந்து கொளற்பாலன. ஆழ்வார்கள் எனவும் நாயன்மார்கள் எனவும் தலைமேல் கொள்ளப்பட்ட பெருமக்களுக்கே இந்நிலை எனின் பிறரைச் சொல்ல வேண்டுவ தில்லையே!

'மதிமலிபுரிசை' எனத் தொடங்கும் திருமுகப் பாசுரம் பாணபத்திரனுக்காக இறைவன் அருளிய பாடல் எனத் திருவிளையாடல் கூறும். திருமுகங்கொடுத்த படலமும் பலகையிட்ட படலமும் இசைவாது வென்ற படலமும் விறகு விற்ற படலமும் அவன் பொருட்டு வெளிப்பட்டவை.

பாணபத்திரன் 'பெரும்பாண் செல்வன்' எனப்படுகின்றான். (திருமுகம். 10) அவனுக்கு இறைவன் அருளியதாகக் கூறும்பாடல்:

" மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்;
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்வல பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே"

எவ்விடையூறு அடுத்தாலும் பாணபத்திரன் தன் இசைக் கடனாற்றத் தவறான் என்பதை உலகோர் அறிய நிகழ்த்தப் பட்ட திருவிளையாடல் பலகை இட்டபடலம் என்கிறார் பரஞ்சோதியார் (4).

நடுயாமப் போதும் வெள்ளியம்பலத் திருக்கூத்துக் கண்டு பாடுதல் தவறாத நியமத்தினன் பாணன். ஒருநாள் முகிற்குலம் இருண்டு ஊழிக் காலமெனப் பொழிந்தது. ஆயினும், தம் கடமை புரியத் தவறினான் இலன். நரம்பு நனைந்து இசை மழுங்கியது; உடல் நனைந்தது; விரல் வலித்தது; நடுக்கமாயிற்று; நின்ற இடம் நீரும் சேறும்

ஆயிற்று; எனினும், யாழ்க்கடன் தவறாத பாணன் இருந்து இசைக்கப் பலகை அருளினான் இறைவன். இதனை அறிந்த வேந்தன் பல சிறப்புகள் செய்தான். இது பலகை யிட்ட படலச் செய்தி.

பாணபத்திரன் மனையாள் யாழால் புகழ் பெற்றவள்; அதனைப் பொறாத அரசன் மனையாள் ஈழத்தில் இருந்து விறலி ஒருத்தியை வருவித்து 'இசைவாது' நடக்க ஏற்பாடு செய்தாள். தோற்றவர் வென்றவர்க்கு அடிமையாதல் வேண்டும் என்னும் ஒப்பந்தத்தில் இசைவாது மன்னவன் முன் நிகழ்ந்தது. மன்னவன்மதிவழி அரசியின் மனவழியாக இருந்ததால் ஈழப்பாடினி இசையே உயர்வாய்த்தோன்ற அவையோரும் அப்படியே கூறினர். மறுநாள் வாது தொடருமென அரசன் விடுத்தான். பத்திரன் மனைவி அரசனும் அவையும் ஓரஞ்சாய்ந்த நிலையை இறைவன் முன் நின்று அழுது கூறினாள். 'நீயே நாளை வெல்லுமாறு செய்தும் அஞ்சேல்' என்று விண்வழியுரையொன்று கேட்டு மகிழ்ந்தாள். மறுநாள் வாது நிகழ்ந்தது. முதல் நாள் போலவே அரசனும் அவையும் ஓரஞ்சாய்ந்து சொல்ல, அரசே திருக்கோயிலில் யாம் போய்ப் பாடுகேம்; ஆங்கும் இவளே வென்றாள் என்று ஒருவர் கூறினும் போதும்; அன்னதே செய்க என வேந்தனும் அதனை ஏற்றுக் கொண்டான். ஆங்கு வேந்தன் பிறழ்வனோ என இறைவனே இசைப் புலவனாகி வந்தான். ஆயின், அரசன் கோட்டமிலா உள்ளத்தனாய்ப் பாணபத்திரன் மனைவியே வென்றாள் என்றான்; அவையோரும் அவ்வாறே கூறினர்: இறைவன் விந்தை விந்தையெனச் சொல்லித் திருவுருக் கரந்தான். இது, இசைவாது வென்ற படலச் செய்தி.

ஏமநாதன் என்பான் வடபுல யாழ்ப்பாணன்; அவன் மதுரைக்கு வந்து தன்னை யாழில் வெல்வார் உண்டோ வெனத் தருக்கினான். மன்னன் பாணபத்திரனை அழைத்து

ஏமநாதன் எண்ணத்தை உரைத்தான். அரசன் உளப் படியும் இறைவன் அருளின் வண்ணமும் தான் வெல்வேன் எனப் பாணபத்திரன் உரைத்துச் சென்றான்.

ஏமநாதன் மாணவர் தெருவெல்லாம் புகுந்து இசை முழக்கினர். அதனைக் கேட்ட பாணபத்திரன் இவர் களிசையே இத்தகைத் தெனின் ஏமநாதனை நான் எவ்வாறு வெல்வேன் என இரங்கிக் கூடல் நாயகன் கோயில் நண்ணி வேண்டிக் கொண்டு இல்லம் புகுந்தான்.

இறைவன் முதிய விறகு தலையனாய்த் தோன்றி ஏமநாதன் தங்கியிருந்த மனையின் முன்னே இருந்து யாழ் இசைத்தான். அதனைக் கேட்ட ஏமநாதன் 'நீயாரை?' என வினாவினான். "யான் பாணபத்திரன் அடிமை; அவனிடம் பயில்வார் பலர்; யானும் பயிலச் சென்றேன்; ஆயின், நீ மூத்தாய், இசைக் கிழமைக்கு ஆகாய் எனத் தள்ளிவிட்டான். அதன்பின் விறகு வெட்டி விற்றுப் பிழைக் கின்றேன்" என்றான்—விறகு தலையனாம் இறைவன். "இவனிசையே இத்தகைத் தெனின் பாணபத்திரன் இசைக்கு நாம் ஈடுதர இயலுமோ? இழிவு வந்து எய்தும்" என இரவோடு இரவாக ஏமநாதன் ஊரைவிட்டு ஓடினான். நிகழ்ந்ததை அறிந்த வேந்தன் பத்திரனுக்குச் செயத் தக்க சிறப்பெல்லாம் செய்து இறைவனைப் பாடலே நின் கடனென விடுத்தான். இது விறகு விற்ற படலக் கதைச் செய்தி

இவற்றால் யாழ் வல்ல இசைப்பாணர் சிறப்பும், அவர்தம் இகலும், இகல் வெற்றியும், அரண்மனையைச் சார்ந்திருந்தவர் ஆலயஞ் சார்ந்திருக்க நேர்ந்ததும் அறியலாம்.

ஆடல் மகளிர்க்குத் தலைக்கோலி என்னும் பட்டமும் ஆயிரத்தெண் கழஞ்சு பரியமும் வழங்கிய வேந்தர்கள் சில நூற்றாண்டுகளின் பின்னே அவர்களைக் கோயில் பணி

களுக்கு ஆளாக்கிக் குடியிருப்பும் செய்வித்தமை கல்வெட்டு களால் விரிவாக அறியப் பெறுகின்றன.

''நக்கன் உடைய நாச்சியார் என்பவருக்கு ஞான சம்பந்தத் தலைக்கோலி என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது'' முதலாகத், ''திருக்கடவூர் திருக் கோயிலில் தலைக்கோல் ஆசானாக இருந்தகலா விநோத நிருத்தப் பேரரையன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற பரமசிவன் பொன்னன் என்பவருக்கு நட்டுவ நிலையாக நிலம் தானம் செய்யப்பட்டது'' ஈறாக 29 செய்திகளைக் கல்வெட்டு வழியே திரட்டி வழங்கியுள்ளார் அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி. (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் 134—138). இடைக்காலச் சோழர் காலந் தொட்டு இசையும் கூத்தும் சமயத்தொடு இரண்டறக் கலந்து விட்டதை இதனால் உணரலாம்.

# 26. அரசியற்றுறையில் பாணர்

அரசியல் தூதராகப் பாடினி ஔவையார் சென்ற வரலாறு உண்டு; கொல்லும் போரின்றிச் சொல்லும் திறத்தாலேயே இருநாட்டு மாந்தரும் அமைதி கொள்ளச் செய்த சீர்மை அவரைச் சார்ந்த தாயிற்று.

'பூக்கோள்' என்பது ஒரு புறத்துறைச் செய்கை. தாம் செல்லும் போருக்கு ஏற்ப அடையாளப் பூவை நாளும் பொழுதும் தேர்ந்து அணிந்து கொள்ளுதலாம். அப்பூக் கோளைத் தண்ணுமை ஒலியால் பாணர் அறிவிப்பர். "பூக்கோள் ஏய தண்ணுமை" எனவும், "பூக்கோட் டண்ணுமை" எனவும் (அகம். 174; தகடூர்யாத்திரை) வழங்கும்.

"கேட்டியோ வாழி பாண பாசறைப்
பூக்கோள் இன்றென் றறையும்
மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே.'

என்பது புறப்பாடல் (289). பாணன் பாசறைக் கண் இருந்து மகிழ்வித்தலும், போர்த்திறம் பாடலும், வினை முடித்தக்கால் வீடுநோக்கி விரைய ஏவுதலும் அரசியற் றுறைப் பணிபோல்வனவே. 'படையொலியிற் பாணொலி பல்கின்றால்' என்பது பாணர் போர்க்களத் தார்ப்பைப் புகலுதல் அறிக (பெருந். 477).

பறைநிலை என ஒருவகை நூலைப் பன்னிருபாட்டியல் குறிக்கிறது (211). அது அரசர் முடிபுனைவிழா, கடவுளர்

விழா ஆகியவற்றில் நாடும் நகரும் நலம்பெறுக என வஞ்சிப் பாவால் பாடப்படும் நூல். வள்ளுவர் உள்படு கருமத் தலைவர் எனப்படுதலும் இவண் எண்ணத் தக்கது.

இருபெருவீரர் பொருதக்கால் இடை நின்று இங்கும் அங்கும் நோக்கிப் பாணர் ஊக்கமுறுத்திய செயல் கண்டோர்க்குக் களிப்பும் கலிப்பும் ஆக்கின. அதனைக் குறுந்தொகை (328)

> "வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
> புலிநோக் குறழ்நிலை கண்ட
> கலிகெழு குறும்பூர் ஆர்ப்பென"

உவமை காட்டிற்று. புலிநோக்கு என்றது இவண் 'அரிமா நோக்கு' எனப்படும் இப்பாலும் அப்பாலும் தலைமடித்து நோக்கும் நோக்கை,

பாணன் நாடென ஒன்று இருந்ததை அகநானூறு கூறுகின்றது:

> "விழாவயர்ந் தன்ன கொழும்பல் திற்றி
> எழாஅப் பாணன் நன்னாட் டும்பர்" (113)

அப்பாணன் நாடு தமிழகத்து வடபால் இருந்தது என்பதை,

> "வடாஅது பல்வேற் பாணன் நன்னாடு"

என்னும் ஓர் அகப்பாட்டு (325). அந்நாடு பாலியாற்றின் வடகரை சார்ந்ததென்றும் அந்நாட்டுப் பெரும்பாணப் பாடியும் பாண்மலையும் கல்வெட்டுகளால் குறிக்கப் படுகின்றன என்றும் அவர்கள் வாணர், வாணாதிராயர், வாணதரையர், வாணகோவரையர் என வழங்கப்பட்டுத் தமிழகம் எங்கும் பரவினர் என்றும் அவர்கள் கல்வெட்டு வல்லம் கோயிலில் மிகவுண்டு என்றும் பேராசிரியர் ஔவை குறிப்பிடுவார் (ஐங். பாணன் பத்து).

உறையூர் வெளியன் தித்தன் என்பான் போரவையில் இருந்த ஒருவன் பாணன் என்பான். கங்க நாட்டுக் கட்டி என்பான் அப்பாணனொடு மோத வந்தான். ஆனால், பாணனும் தித்தனும் ஆர்த்த பறையார்ப்பும் படையார்ப்பும் கேட்ட அளவானே 'கட்டி' தோற்று ஓடினான். இதனை அகப் பாடலொன்று,

"வலிமிகு முன்பின் பாணனொடு மலிதார்த் தித்தன்
ஆர்ப்பு"

என்கிறது (226).

ஆரிய நாட்டில் இருந்து வந்த பொருநன் என்பானும், குட்ட நாட்டுக் கணையன் என்பானும் கூடி அப் பாணனொடு போர்க்கு வந்தனர். அப்பொழுதும் தோற்றனர்.

"பாணன், மல்லடு மார்பின் வலியுற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்"

என இதனை மற்றோர் அகப்பாட்டுக் கூறுகின்றது (386).

ஒரு பாண்டியன் பாணனுக்குச் சோழநாட்டை வழங்கிய குறிப்பையும், மாறை நாட்டுத் தலைவன் வாணன் மதுரையைக் கைப்பற்றிப் பாணற்கு வழங்கிய குறிப்பையும் கல்வெட்டுகள் வெளியிடுகின்றன:

"பொன்னி வளநாடு பாணன் பெறப் புரிந்தான்"

"பாணன் மதுரைப் பதியாள வைத்த பிரான்"
(பெருந்தொகை 1188-91)

புறப்பொருள் வெண்பாமாலையால் பாணர் போர்க் களத்தில் வீரருடன் தேரின் பின் நின்று ஆடுதலும் (144) இறந்த வீரர்க்கு விளரிப் பண்பாடுதலும் (137) இறந்த வீரர் நடுகல்லைத் தொழுதலும் (252) கூறப்பட்டுள.

பாணர்கள் கையில் கோல் ஒன்று வைத்திருத்தல் வழக்குப் போலும். அதனால் 'நுண்கோல் அகவுநர்" எனப்பட்டனர் (அகம். 208).

பாணன் என்ற புலவன் மறவைப் பதிக்கண் இறந்தான். அத்தகையனை அறவைப் பிணமென எடுத்தல் வழக்கு. எவரும் உற்றார் உறவு இல்லாக்கால் ஊரவர் ஏற்பாட்டில் செய்யும் கடன் செய்து எடுப்பதே அறவைப் பிணம் என்பதாம். அவ்வாறு அறவைப்பிணமாக எடுக்க விரும்பாத மறவைப்பதி அரங்கேச வள்ளல் பிறர் எடுத்துச் செல்லக்கொடாமல் தானே எடுத்தான் என ஒருபாடல் தெரிவிக்கின்றது (பெருந். 1230). இதனால், அக்கலை வல்ல பாணனை, 'அரசுச் சிறப்புடன் இந்நாள் அடக்கம் செய்வது போலச் செய்தான்' என்பதை அறியலாம்.

''இன்றைய அரசியல் செல்வ வாழ்வுகளில் நாளிதழ் வாணருக்குள்ள நன்மதிப்பு முற்றும் பண்டு புலவர் பாணர் முதலிய முத்தமிழ் வாணருக்கு இருந்ததென்னின் அது மிகையாகாது'' என்பது கொள்ளத் தக்கதாம். (ஐங்குறு. பாணன் பத்து ஔவை. சு. து.)

# 27. பாணர் வீழ்ச்சி

பாணர் என்பார் பாடலிசைப்பார் வழியினர் எனப் பெயர் பெற்றாலும் அவ்வினத்தார் எத்தகு பெருக்க மானவர் என்பதை அறிந்துளோம். பொதுவில் அக் குடியின் பெயருடையார் இந்நாளில் வளமாக இல்லை. அக்குடியினர் ஒரு குடியினர் என்று எண்ணுமாறாகவும் இல்லை; அவருள் கொண்டு கொடுத்தல் என்பவோ குடிவழி நெருக்கம் என்பவோ கூட இல்லை.

பாணர் இன்று தையற்காரர் என்னும் பெயரோடு விளங்குகின்றனர். இவர்கள் கொண்டுள்ள பெயரே இவர்கள் செய்துவரும் தொழிலை அறிவிக்கும். "பாணர் (தையல் தொழிலாளர்) சங்கம்" என ஒரு சங்கம் ஏற்படுத்தி யும் உள்ளனர். நெல்லை முகவை மதுரைப் பரப்புகளில் ஆங்காங்கு வாழ்கின்றனர். பெரும்பாலும் கைத்தையல் பொறி தூக்கிக் கொண்டுபோய் வீதி வீதியாகத் தைக்கும் எளிமையில் உள்ளனர். பிற குடிவழியினரைப் போலக் கற்றும் வணிகத்தில் ஈடுபட்டும் பிறதொழில்களில் ஈடுபட்டும் முன்னேற இளைஞர் ஆர்வம் கொண்டுளர். இற்றைப் பாணர் எனப்படுவார் நிலை இது.

பாணர் சங்கநாளில் அடைந்திருந்த கலைமாண்பையும், அக்கலையால் பெற்ற சிறப்பையும் அறிந்துளோம். அந் நாளிலேயே அகத்துறைப் பகுதியில் சொல்லப்படும் பாணர் பெருமைக்குரிய இடத்தைப் பெறவில்லை என்பதையும் அறிந்துள்ளோம். ஆகலின், அப்பழங்காலத்திலேயே 'கலைத்

தொழில்', 'புலைத்தொழில்' என இருநிலைத் தொழில ராய்ப் பிரிந்து கிடந்ததன் புனைவுதான் புறத்துறை அகத் துறைப் புனைவுகளாய் அமைந்திருக்குமோ என்று எண்ணவே வேண்டியுளது.

பாணரைப் பாடுபொருளாகக் கொள்ளல் கோவை, கலம்பகம், தூது இலக்கியங்களில் இடம்பெற்றுள. விறலி விடுதூது என்பது காமக்களியாட்டப் பொழுதுபோக்காக இயற்றப்பட்ட நூல்வகை எனலாம். அதில் வரும் செய்தி களையோ, உலா முதலியவற்றில்வரும் எழுபருவ மகளிர் உரைகளையோ கடையிற் கடையாம் எவரொருவரும் கூடத் தம் குடும்பப் பெண்களோடு இயைத்து நினைக்கவே நாணுறுவர்! ஆக, ஒரு குடிப் பெயர்க்கு மாசுண்டாகச் செய்யப்பட்ட அருவருப்பான பொழுதுபோக்கு நூல் எனப் புறந்தள்ளலே சாலும்!

பாணர்குடியொடு பொருந்தாததாய்ப் பொருத்தப் பட்ட புனைவுகளே மிகப்பல என்பது அந்தகக் கவி வீர ராகவர் பாட்டொன்றால் புலப்படும். சுவைமிக்க சொல் வளமிக்க பாடல்தான் அது. ஆயினும், வாழ்வியலொடு தழுவிற் றில்லை என்பதே.

"இராமன் என்னும் வள்ளலைப் பாடி என்ன கொண்டு வந்தாய் பாணா" என மனைவி கேட்கிறாள். அவன் தான் இன்னது பெற்றேன் என்பதை வெளிப்படக் கூறாமல் 'களபம்' என்கிறான்; களபம் என்பது யானை: அவளோ, அதற்கு மணப்பொருள் என்னும் பொருள் கொண்டு 'பூசிக் கொள்ளும்' என்கிறாள். அவன் 'மாதங்கம்' என யானையின் மற்றொரு பெயரைக் கூறுகிறான். அவளோ, மிகுதங்கமெனப் பொருள் கொண்டு 'நல்வாழ்வு வாழ்ந்தோம்' என்கிறாள். மேலும் அவன் 'வேழம்' என யானையின் மற்றொரு பெயரைச் சூட்டு கிறான். அவள் அதற்குக் கரும்பு என்னும் பொருளுண்மை யால் 'தின்னும்' என்றாள். அவன் மீளவும் 'பகடு' என்று

யானையின் மற்றொரு பெயரைக் குறித்தான். அவளோ அதற்குக் காளையெனப் பொருளுண்மையறிந்து 'வயலை உழும்' என்றாள். திகைத்த பாணன் 'கம்பமா' என்னும் யானையின் மற்றொரு பெயரைக் குறித்தான். அவளோ அதற்கும் கம்பு என்னும் தவசத்தின் மாவு எனக் கொண்டு 'களியாகும்' என உரைத்தாள். இறுதியாக அவன் 'கைம்மா' என யானையின் பிறிதொரு பெயரைக் கூறினான். அவள் அதற்கு வேறு பொருள் அறியாளாய்ச் 'சும்மா' கலங்கினாள் எனப்பாட்டு முடிகின்றது. அதனையும் மறுத்தால் எடுத்த பாட்டின் எல்லை முடிந்து விடுவதால் புலவர் அவ்வளவில் நிறுத்தினார். இல்லையேல் நீட்டவா இயலாது!

பாணர் பரிசில் வாழ்வினர்; அவனும் அவளும் கல்வி யறிவு பெற்றவர் என்பவே இப்பாடற்செய்திகள். அவர் காலத்தில் யானைப் பரிசு வழங்க எந்த இராமன் இருந்தான்! "பத்துருபா தந்தவனைப் பத்துருபாயனன்" எனப் பாடுகின்ற காலநிலையை நெருங்கியல்லவோ அவர் இருந்தார். பாடிப் பரிசு பெறப் போகாத பாணர் பெயரால் கட்டப்பட்ட பாட்டு என்பதால்தான் இதனைச் சுட்ட நேர்ந்ததாம். நந்திக் கலம்பகப் புனைவும், இல்லாப் பாணனை முன்னிறுத்திப் பொல்லாப்பழி சூட்டியதேயாம். இவை இலக்கிய மரபாகப் போய்விட்டன என்பதே கொள்ளவேண்டிய செய்தி; மறம், சித்து, குறி என்பன போலக் கருதுக.

பாணர் தையல் தொழிலே தொழிலாகிவிட்டமை யால் காளமேகப் புலவர் "பாணர்க்குச் சொல்வது...தை" எனப் பாடினார். தோலின் துன்னர் எனவும், துன்னகாரர் எனவும் பண்டை நாளில் விளங்கிய பாணர் இதுகால் துணி தைத்தல் என்னும் அளவில் நின்றனர் எனலாம். பிற தையல் மேற்கொண்டவரும் கூத்து, பறையறைதல், கணியம் கூறல், வெறியாடல் இன்னபலவற்றைக் கொண் டிருந்த பாணர்களும் வேறுவேறு இனங்களாய்ப் பிரிந்து

போயினர். அவருள் தீண்டுவாரும், தீண்டத் தகாரும் எனவும் இருபாற்பட்டும் விட்டனர். அவருள்ளும் இந் நிலைமை உண்டாகிவிட்டமை கொடுமையிலும் கொடுமையாம்.

பாணனை 'இழிசினன்' எனவும் 'புலையன்' எனவும் கூறும் வழக்கு பண்டே நேர்ந்துவிட்டது என்பதைத் துடி யெறியும் புலைய, எறிகோல் கொள்ளும் இழிசின (புறம். 287) மடிவாய்த் தண்ணுமை இழிசினன் (புறம். 289) என வருவனவற்றால் அறிக.

தென்னாட்டுக் குலமரபுகள் (Castes and Tribes of Southern India) என்னும் நூலில் தர்சுடன் (Thurston) என்பார் தொகுத்துள்ள இக்காலப் பாணரைப் பற்றிய செய்திகளைப் பாவாணர் மொழிபெயர்த்துச் சுருக்கிக் கூறுகிறார்:

''தமிழப் பாணர் 'மேஸ்திரி' எனவும் படுவர். இவர் திருநெல்வேலி மதுரைக் கோட்டங்களில் தையற்காரர் களாய் உள்ளனர். இவர் வேளாளரையும் பார்ப்பாரையும் புரோகிதராகக் கொள்வர். இவர் வீட்டில் அம்பட்டரும் வண்ணாரும் உண்ணார்; ஆயினும், கோயில் நுழையும் உரிமை இவருக்குண்டு.

மலையாளப் பாணர் மந்திரவாதிகளும் பேயாடிகளுமா யிருக்கின்றனர். இவர் மந்திர வினைகள் பல்வேறு வகைப் பட்டவை. இவருள் ஆடவர் தாழங்குடை முடைவர்; பெண்டிர் மருத்துவம் பார்ப்பர்; சிலவிடத்து மலையன் என்னும் பட்டம் இவர்க்குண்டு. அறுப்புக் காலத்தில் பாணச் சிறுவர் சிறுமியர் வீடுதோறும் சென்று குடையுடன் ஆடி இரப்பர். பயிர்பச்சைமீது அதிகாரமுள்ள பேய்கள் இவர் வயப்பட்டன என்று கருதப்படுகிறது. சில சடங்கு களில் பாணர் துடியியக்குவர். பறைக்குத் தோல் கட்டுவதும் இவர் தொழிலாம்.

பாணனான குருப்பு என்னும் மேல்வகுப்பு அம்பட்டன், தீயருக்கும், இறந்தோர் ஆவியை அவர் இறந்த அறையி னின்றும் ஒரு சடங்கால் வெளிப்படுத்துவான். இவன் செறுமர்க்கு மேற்பட்ட தீண்டாதான்; தாழங்குடைக்கு மூங்கில் வேலை மட்டும் செய்வான். தாழை வேய்வது இவன் மனைவி. தன் மனைவி யில்லாவிட்டால் அயல் வீட்டுப் பெண்டிரிடம் தாழை வேயக் கொடுப்பான்.

தீயர் பிணம் சுடும்போது பாணர் ஐந்துநாள் இரவு பறையறைந்து தீயாவிகளை விரட்டுவர்.

பாணர்க்கு மக்கள் தாயமே. பெண்டிர் பல சகோத ரரை மணப்ப துண்டு. தென்மலபாரில் பாணர்க்குள் திருரெங்கன், கொடகெட்டி (குடைகட்டி), மீன்பிடி, புள்ளுவன் என நாற்பிரிவுண்டு. இவருள் புள்ளுவன் ஏனை யரினும் தாழ்ந்தவன். பாணர் கலப்பு மணமுள்ள பல இல்லங்கள் அல்லது கிரியங்களாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றனர். காளி, பரகுட்டி, கரிங்குட்டி, குளிகன், குட்டிச் சாத்தன் என்பன இவர் தெய்வங்கள். இவர் உச்ச வேலி என்னும் வகுப்புப் பேய்களை ஓட்டுவர்.

ஒரு பாணன் தன் ஆடையில் ஓர் இழையெடுத்துத் தன் மைத்துனனிடம் கொடுத்து உன்பரிசம் முடிந்தது என்று கூறினால் தன் மனைவியை முற்றும் தள்ளியதாகும்.

மலையாளப் பாணருள் அஞ்ஞூற்றான், முந்நூற்றான் என இரு உட்பிரிவுகளுண்டு. திருவாங்கூர்ப் பாணர்க்குப் பணிக்கப் பட்ட முண்டு. இவர் தமிழப் பாணரினும் தாழ்ந் தவர். இவர் மேற்குலத்தார்க்கு 36 அடித்தூரம் விலகுவர்; மன்னாரையும் வேடரையும் 8 அடித்தூரத்தும், புலையரை யும் பறையரையும் 32 அடித்தூரத்தும் தம்மினின்றும் விலக்குவர். மயிர்வினையும் சலவையும் தாமே செய்து கொள்வர். கம்மாளரிடத் துண்பர்; இளமை மணஞ்செய் வர்; இறந்தோரைப் புதைப்பர். இவர்க்குச் சாவுத்தீட்டு 16 நாள். இயல்பாய் இறந்தவர்க்கு ஆடி மாதத்திலும்

கொலையுண்டு அல்லது துன்பநேர்ச்சியில் இறந்தவர்க்கு ஆவணி மாதத்திலும் ஊனும் கள்ளும் படைப்பர். இது வெள்ளங்குளி எனப்படும். இறந்தவரை நினைவுகூரப் பந்தல், மடம் முதலியன அமைப்பதுண்டு.

ஈழவர் தமது கொண்டாட்டங்களில் பாணர்க்கு ஈராள் உண்டியளித்துத் தம் முன்னோர்க்கு அவர் முன்னோர் செய்த ஒரு நன்றியை நினைவு கூர்வர்.

பாலக்காட்டில் பாணர் தலைவனுக்குச் சுப்ரதன் என்று பெயர். அவன் இறந்தால் அரசனுக்கு அறிவிக்கப் படும். அரசன் வாள், கேடகம், ஈட்டி, துப்பாக்கி, வெடி மருந்து, வெள்ளிக்காப்பு, அட்டிகை என்னுமிவற்றை அவன் மகனுக்காவது இழவு கொண்டாடுபவனுக்காவது அனுப்புவன். மகன் அணிகளையும் வேறு சிலர் ஆயுதங் களையும் அணிந்து கொள்வர். பிணத்தை எடுக்கும்போது ஒன்றும் கிடத்தும்போது ஒன்றும் எரித்தபின் ஒன்றுமாக 3 வெடி சுடுவர். மறுநாள் மகன் தன் கையாற் செய்த ஒரு தாழங்குடையை அரசனுக் களிப்பன். அரசன் அவனுக்குச் சுப்ரதன் என்னும் பட்ட மளிப்பன்.

சங்கிலிக் கருப்பன், பேச்சி, ஊதா கருப்பன், காளி, சோதல கருப்பன், சோதல பத்ரகாளி, யட்சி, கந்தர்வன், அனுமான் என்று ஆவிகளைப் பாணர் வயப்படுத்துவர்.

பாணர் மதம் பேய் வணக்கம். மூக்கன், சாத்தன், சுப்பிரி, மலங்கொறத்தி (குறத்தி) என்னுந் தெய்வங்களை யும் இவர் வணங்குவர். இத்தெய்வங்களுக்கு மரத்தடியில் கல் நட்டு முழுக்காட்டி ஆடு கோழியறுத்துக் காய்கறி சோறு படைப்பர். இறந்தோரையும் வணங்குவர். அமாவாசை யன்றாவது முழுநிலாவின் பின் பதினொன் றாம் நாளாவது நோன்பிருப்பர்.

பாணர் எல்லாரும் பார்ப்பார், நாயர், கம்மாளர், ஈழவரிடம் உண்பர். பாணரும் கணியரும் தொட்டுக்

கொண்டால் ஒருவரை ஒருவர் தீட்டுப்படுத்தியவராவர்; பின்பு குளித்துத் தீட்டைப் போக்குவர். பாணர் ஈழவர் அருகில் குடியிருக்கலாம்; ஆனால், நாயர் தரையில் குடியிருக்க முடியாது. கம்மாளர் கிணற்றில் தண்ணீர் எடுக்கவும், பார்ப்பனர் கோயிலின் புறமதிலை யண்டவும் பாலக் காட்டில் பார்ப்பனர் தெருவழிச் செல்லவும் இவர்க்கு உரிமையில்லை. 1891ஆம் ஆண்டுக் குடிமதிப்பில், பாணர் பறையருள் ஒரு பிரிவார் என்று குறிக்கப்பட்டுள்ளது" (செந்தமிழ்ச் செல்வி — சிலம்பு 17. பக். 83-85).

இக்குறிப்புகளுள் பலப்பலவும் இக்காலத்தில் மாற்றமடைந்துள்ளன. கோயில் நுழைவு மறுப்பு, தீண்டாமை என்பவை சட்டப்படி குற்றமாக்கப் பட்டுள்ளன. அதற்காகச் சான்றோர்களும் பெருமக்களும் ஆர்வலர்களும் ஆங்காங்குப் போராடிய போராட்டங்களும் பட்டபாடுகளும் மிக விரிவுடையன. அவற்றை விரித்தெழுதவும் ஆய்வு செய்யவும் உரிய நூலன்று இது; அது, தனிநூற் செய்தி. நாட்டு விடுதலை, மொழி விடுதலை, கலையியல் விடுதலை, குடிவழி விடுதலை, கண்மூடிப் பழக்கவழக்க விடுதலை எனப் பல விடுதலை நூல்கள் அவ்வகையில் வெளிப்பட வேண்டும். ஆங்கு, விரிக்கப்பட வேண்டிய செய்தியென இவண் அமைவாம்.

இந்நாளில் யாழும் கூத்தும் இசையும் ஒருகுடிப் பொருளா? இல்லை! முந்தும் குடி தழுவாமல் இசை முதலிய துறைகளில் ஈடுபட்டோர் உண்டு! இராவணன், அகத்தியன் என்பார் யாழ்த் திறம் மிகப் பேசப்படுவது! அவர்களைப் பாண்குடியினரென எவரும் கூறார். உதயணன், சீவகன், காந்தருவதத்தை; பதுமாவதி இன்னோர் யாழ் வித்தகம் பெரிது. இவர் பாணர் குடியினரெனப் பகரார். இவ்வாறே வேந்தரும் வேளிரும் பிறரும் கலைத் துறையில் ஈடுபட்டதுண்டு. அரிதாக இருந்த அந்நிலை இதுகால் முற்றாக ஒரு குடிதழுவாப் பொதுத் துறையாக

மாறிவிட்டமை எவரும் அறிந்த செய்தியே. ஒரு வகையில் துறை வளர்ச்சிக்கும், ஒருகுடி இழிவு நீக்கத்திற்கும் துணை உண்டு எனினும், இசை கூத்துகளைப் போற்றி வந்த இனம், அவற்றை முற்றாகக் கைவிட்டமையால் அவை தமிழில் இல்லை என்றும், வழங்குகின்ற அத்துறைக் கலைச் செல்வங்கள் அனைத்தும் பிற நாட்டுப் பிறமொழி இறக்குமதிச் சரக்கே என்றும் இறுமாப்பார்க்கு இடமாகி விட்டது! மற்றொன்று: வழிவழிக் கலைத் துறை நுணுக்கங் களாக அறிய வருவனவும் பொருளறிந்து தழுவ இயலாமைக்கும் இடனாயிற்று. அதனாலேயே இசைத்தமிழ் 'யாழ் நூலா' விபுலானந்த அடிகளார் உயிர்ப்பித்தார்; 'கருணாமிர்த சாகரமா' ஆபிரகாம் பண்டிதர் கொடை வளம் எனக் கொள்ளவும் நேர்ந்துவிட்டது. அப்பெருமக்கள் அரும்பாடுபட்டு அன்றோ அந்த நூல்களை உயிர்ப்பிக்க முடிந்தது! இன்னும் கூத்துத் தொடர்பான குறிப்புகள் முற்றிலும் விளக்கமுற வில்லையே! சிற்பத் துறை தொடர் பான செய்திகள் செழிக்க வில்லையே! மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய நாடகமன்றோ இன்று நாடக முதனூலாகக் கொள்ளுமாப் போல அமைந்து விட்டது!

வண்டு சென்ற இடம் அறிதல் எத்துணையும் இயலாமை போல, நெட்டிடை வெளிப்பட்ட செய்திகள் — தொடர்புடையாரும் அறவே துறந்து விட்ட செய்திகள் — பொருளறிவாராப் புதையலாகப் போயினவன்றோ! ஆனால், வண்டி சென்ற தடத்தைக் காட்டுவார் போல நேற்றை நூல்களைச் சுட்டிக் காட்டி இதன் வழித்து இக் கலையெனக் கூறிப் பெருமிதம் கொள்ளவும் மயக்கவும் வாய்த்து விட்டதாம்!

இசை நூல்கள் கூத்து நூல்கள் மறைந்தமை பேரிழப் பென்றால், அதனினும் பேரிழப்பு எஞ்சியிருக்கும் அத் துறைக் குறிப்புகளையும் உள்ளவாறு உணர்ந்து பிறர்க்கு அறிவுறுத்தவும் தக்க வழிவழிக் குடி அற்றுப்போனதென்க.

அணித்தே இசைத்துறை வளத்திற்கெனச் சென்னையில் அண்ணாமலை மன்றமும், மதுரையில் முத்தையா மன்றமும் கிளர்ந்ததைச் சுட்டலாம். அரசும் தமிழிசைக் கல்லூரியும் நடிப்பியற் கல்லூரியும் சிற்பவியற் கல்லூரியும் தோற்றுவித் திருத்தலையும் பாராட்டலாம். ஆனால், ஆங்கிருப்போர் இதனைத் தமிழ்த் துறையெனக் கருதுகிறார்களா? கருதி வளர்க்கிறார்களா? ஊக்கப்படுத்தி உருவாக்குகிறார்களா? என வினவுவார்க்கு ஆக்கமான மறுமொழி அரிதாகவே கிட்டுகின்றது. அவருள் பலர், தமிழின் பெயரைச் சொல்லிக் கொண்டு தமிழ்க்குக் கேடு செய்யவும், தமிழ் வளத்தை மறைக்கவும் மயக்கவும் புறக்கணிக்கவும் ஏன் பழிக்கவும் கூடக் கடனாற்றுவதாகவே அமைகின்றனர்.

குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர் சுந்தரேசனார் தலைப்பட்டுத் தமிழிசையை ஓரளவு பரப்பினார்; பசுமலைப் பேராசிரியர் வீ. ப. கா. சுந்தரனார் ஆய்வின் ஆழத்துள் மூழ்கி அரிய இசைச் செல்வங்கள் பலவற்றைக் கொணர்கிறார். கலைமாமணி கோமதி சங்கரர் தமிழ் யாழின் மாண்பையும் தமிழிசைச் சிறப்பையும் பலபட எழுதுகின்றார். 'பாணர் கைவழி', 'இசையும் யாழும்', 'தமிழர் தோற்கருவிகள்', 'பழந்தமிழ் இலக்கியத்தில் இசையியல்', 'யாழ்நூல்', 'இசைத்தமிழ் இலக்கண விளக்கம், இன்ன பல புதிய நூல்களும், 'பஞ்சமரபு', 'கூத்தநூல்' முதலாம் பழநூற் பதிப்புகளும் வெளிவருகின்றன. விரைவில் தமிழிசை, தமிழ்க் கூத்து, தமிழ் நாடகம் என்பவை இடைக்காலத்தில் இழந்துபோன தன் பண்டைச் சீர்மையை எய்தும் என நம்பலாம்.

# மணிவாசகர் பதிப்பகத்தின்

## பரிசு பெற்ற நூல்கள்

கம்பர்—டாக்டர் வ. சுப. மாணிக்கம்

பரிபாடல் திறன்—டாக்டர் இரா. சாரங்கபாணி

திருக்குறள் கூறும் உறுதிப் பொருள்—
டாக்டர் சோ. ந. கந்தசாமி

தமிழ் மொழி வரலாறு—டாக்டர் சு. சக்திவேல்

வீரர் உலகம்—கி. வா. ஜகந்நாதன்

மணிக்கொடி காலம்—பி. எஸ். ராமையா

உரையாசிரியர்கள்—மு. வை. அரவிந்தன்

உலகப் பெருங்கவிஞர் கம்பர்—
இரா. வ. கமலக்கண்ணன்

ஊருக்குள் ஒரு புரட்சி—சு. சமுத்திரம்

தாகூர்—ச. மெய்யப்பன்

திருமுறையும் திருக்கோயில்களும்
—புலவர் செந்துறைமுத்து

Wrapper Printed at Karpakam Achakam, Madras-600 002.